ஜெகத்தாரணி

# செந்தமிழ் வாசகம்

ஆசிரியர் கைையேடு

## எட்டாம் வகுப்பு

(முப்பருவப் பாடநூல் தொகுப்பு)

ஜெகத்தாரணி பப்ளிஷிங் ஹவுஸ்
எஜுகேஷனல் பப்ளிஷர்ஸ்

சென்னை மதுரை கோவை

## தமிழ் மொழி வாழ்த்து (கவிதைப் பேழை)

### மதிப்பீடு :

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. வைப்பு 2. என்று + என்றும் 3. வானம் + அளந்தது 4. அறிந்ததனைத்தும் 5. வானமறிந்த

**தமிழ்மொழி வாழ்த்து - இப்பாடலில் இடம் பெற்ற மோனைச் சொற்கள்.**

| | | | | |
|---|---|---|---|---|
| வாழ்க | | | | அனைத்தும் |
| வாழியவே | எங்கள் | தமிழ்மொழி | வண்மொழி | அளந்திடு |
| வானமளந்தது | என்றென்றும் | தமிழ்நாடே | வளர்மொழி | அகன்று |
| | | | | அறிந்து |

**குறுவினாக்கள்.**

**1. தமிழ் எங்கு புகழ் கொண்டு வாழ்கிறது?**

ஏழு கடல்கள் சூழ்ந்த இந்த நிலப்பகுதி முழுவதும் தன் இலக்கிய மணம் மூலம் தமிழ்மொழி புகழ் கொண்டு வாழ்கிறது.

**2. தமிழ் எவற்றை அறிந்து வளர்கிறது?**

தமிழ்மொழி வானம் வரை உள்ளடக்கியுள்ள எல்லா பொருள்களையும் அறிந்து வளர்கிறது.

**சிறுவினா.**

**1. தமிழ்மொழியை வாழ்த்திப் பாரதியார் கூறும் கருத்துகளை எழுதுக.**

- ❖ எல்லா காலத்திலும் நிலை பெற்று விளங்கும் தமிழ்மொழியே! வாழ்க
- ❖ எல்லாவற்றையும் அறிந்து உரைக்கும் தமிழே! வாழ்க
- ❖ ஏழு கடல்கள் சூழ்ந்த நிலம் முழுவதும் புகழ் கொண்ட தமிழே! வாழ்க
- ❖ எங்கும் உள்ள அறியாமை நீக்கி, தமிழ் உயர்வு பெற்று உலகம் முழுவதும் சிறப்படைக.
- ❖ உலகம் உள்ளவரையில் தமிழே! வாழ்க.
- ❖ பொருந்தாத பழைய கருத்தால் உண்டாகும் துன்பம் நீங்கி, என்றென்றும் தமிழே வாழ்க!
- ❖ வானம் வரை உள்ள எல்லாப்பொருட்களின் தன்மை அறிந்து வளரும் தமிழே! வாழ்க!

**சிந்தனைவினா.**

**1. பாரதியார் தமிழை வண்மொழி என்று அழைக்கக் காரணம் என்ன?**

- ❖ வண்மை என்பதன் பொருள் வளம் ஆகும். வண்மொழி என்றால் வளம் நிறைந்த மொழி என்பது ஆகும்.
- ❖ பாரதியார் "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்கிறார்.
- ❖ தமிழ் மொழியானது வரலாற்றுத் தொன்மை, பண்பாட்டுவளம், சொல்வளம், கருத்துவளம் ஆகியவற்றால் ஓங்கி உயர்ந்துள்ளது.

இத்தகைய வளமிக்க மொழியாக விளங்குவதனால்தான் பாரதியார் தமிழை வண்மொழி என்று அழைக்கிறார்.

**"கலை" என்னும் சொல்லைச் சேர்த்து கலைந்து கிடப்பதைக் கண்டுபிடி.**

| | | | | |
|---|---|---|---|---|
| ❖ கலையரசி | ❖ கலைடாஸ்கோப் | ❖ கலைவண்ணம் | ❖ கலையரங்கம் | ❖ கலைத்திறன் |
| ❖ கலைப்பொருட்கள் | ❖ கலைப்படைப்பு | ❖ கலைமகள் | ❖ கலையாதது | ❖ கலைஞன் |

## தமிழ் மொழி மரபு (கவிதைப் பேழை)

### மதிப்பீடு :

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. விசும்பில் 2. மரபு 3. இரண்டு + திணை 4. ஐந்து + பால்

**குறுவினாக்கள்.**

**1. உலகம் எவற்றால் ஆனது?**

உலகம் நிலம், நீர், காற்று, நெருப்பு, வானம் ஆகிய ஐந்தும் கலந்த கலவையால் ஆனது.

**2. செய்யுளில் மரபுகளை ஏன் மாற்றக்கூடாது?**


செய்யுளில் மரபுகளை மாற்றினால் பொருள் மாறி விடும். (மரபு - நம் முன்னோர் வழிவழியாய் கூறிய சொற்கள்)

**சிந்தனைவினா.**

1. **நம் முன்னோர்கள் மரபுகளைப் பின்பற்றியதன் காரணம் என்னவாக இருக்கும் என நீங்கள் கருதுகிறீர்கள் ?**
   - ❖ நம் முன்னோர்கள் உலகத்துப் பொருள்களை இரு திணைகளாகவும், ஐம்பால்களாகவும் தமிழ்மொழி வழி பாகுபடுத்தியுள்ளார்.
   - ❖ குழப்பம் வராமல் இருக்க எல்லா உயிர்களுக்கும் இளமைப்பெயர்கள், ஆண்பால், பெண்பால் பெயர்கள், ஒலி மரபுகளைப் பின்பற்றியுள்ளனர்.
   - ❖ இரு திணை, ஐம்பால் என பின்பற்றியதற்குக் காரணம் அவற்றை அடையாளப்படுத்துவதற்கே ஆகும்.
   - ❖ தமிழ் மொழியின் சிறப்பிற்காகவும், வளர்ச்சிக்காகவும் நம் முன்னோர்கள் மரபுப்பெயர்களைப் பின்பற்றியிருக்கிறார்கள் என நான் கருதுகிறேன்.

## கற்பவை கற்றபின்

1. **பறவைகளின் ஒலி மரபுகளை எழுதி வருக :**
   - ❖ காகம் கரையும் ❖ கோழி கொக்கரிக்கும் ❖ குயில் கூவும் ❖ சேவல் கூவும் ❖ மயில் அகவும்
   - ❖ புறா குனுகும் ❖ ஆந்தை அலறும் ❖ கூகை குமுறும் ❖ கிளி பேசும் ❖ குருவி கீச்சிடும்.
2. **ஐம்பூதங்களில் ஒவ்வொன்றிக்கும் வழங்கப்படும் வேறு பெயர்களை எழுதுக.**
   - ❖ நிலம் - மண், பூமி, உலகம், பார், வைப்பு ❖ நெருப்பு - தீ, அக்கினி, அனல், கொள்ளி, கனல்
   - ❖ காற்று - வளி, வாயு, தென்றல், புயல் ❖ நீர் - வெள்ளம், புனல், தண்ணீர்
   - ❖ வானம் - ஆகாயம், விண், விசும்பு
3. **ஐம்பூதங்களின் படங்களைச் சேகரித்துப் படத்தொகுப்பு உருவாக்குக.**



## தமிழ் வரி வடிவ வளர்ச்சி (உரைநடை உலகம்)

### மதிப்பீடு :

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. அச்சுக்கலை 2. வட்டெழுத்து 3. தந்தை பெரியார்

**கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. கண்ணெழுத்துகள் 2. வீரமாமுனிவர்

**குறுவினாக்கள்.**

1. **ஒவிய எழுத்து என்றால் என்ன?**

   ஆரம்பகாலத்தில் எழுத்து என்பது சித்திர வடிவமாக இருந்தது. இச் சித்திர வரி வடிவத்தை ஓவிய எழுத்து என்பர். ( சித்திரம் - ஓவியம் )

2. **ஒலி எழுத்து நிலை என்றால் என்ன?**

   ஓர் ஒலிக்கு ஓர் எழுத்து என உருவாகும் நிலையை ஒலி எழுத்து நிலை என்பர்.

3. **ஓலைச்சுவடிகளில் நேர்கோடுகள், புள்ளிகள் ஆகியவற்றைப் பயன்படுத்த இயலாமைக்குக் காரணம் என்ன?**

   ★ நேர்கோடுகள் ஓலைச்சுவடியை கிழித்து விடும். ★ புள்ளியிட்டு எழுதுவது ஓலைச்சுவடியை சிதைத்து விடும்.

4. **வீரமாமுனிவர் மேற்கொண்ட எழுத்துச் சீர்திருத்தங்களில் எவையேனும் இரண்டனை எழுதுக.**

   ★ எகர வரிசை, ஒகர வரிசையில் புள்ளிகளால் ஏற்படும் குழப்பங்களைக் களைந்தார். (ஒ, ஏ) எ் - ஏ, ஒ் - ஓ

   ★ ஏகார வரிசை, ஓகார வரிசை உயிர்மெய் நெடில் எழுத்துகளை (ே) (ோ) என புதிய வடிவம் தந்தார். (கே, கோ)

**சிறுவினாக்கள்.**

**1. எழுத்து சீர்திருத்தத்தின் தேவை குறித்து எழுதுக.**

- ஓலைச்சுவடிகளில் புள்ளியிடுதல் இல்லை. ❖ ஓலைச்சுவடிகளில் நிறுத்தற்குறிகள், பத்தி பிரித்தல் இல்லை.
- ஓலைச்சுவடிகளில் மெய்யா, உயிர்மெய்யா, குறிலா, நெடிலா போன்ற குழப்பங்கள் படிப்பவர்களை பெரிதும் பாதித்தது.
- இச்சிக்கல்களை களைய எழுத்துச்சீர்திருத்தம் வேண்டியதாயிற்று.

**2. தமிழ் எழுத்துகளில் ஏற்பட்ட உருவ மாற்றங்களை எழுதுக.**

- நெடிலைக் குறிக்க ஒற்றைப் புள்ளிக்குப் பதிலாக துணைக்கால் பயன்படுகிறது. ( க.= கா)
- ஐகார உயிர்மெய்யை குறிக்க இருந்த இரட்டைப்புள்ளிகளுக்குப் பதிலாக இணைக்கொம்பு பயன்படுகிறது. (..க= கை)
- ஔகார உயிர்மெய்யை குறிக்க இருந்த இரட்டைப்புள்ளிக்குப் பதிலாக கொம்புக்கால் பயன்படுகின்றது. ( கெ.. = கௌ )
- குற்றியலுகர, குற்றியலிகர எழுத்துகளின் மேல்புள்ளி இடும் வழக்கம். ( இது இன்று வழக்கில் இல்லை. )
- மகர எழுத்தைக் குறிப்பிட பகர எழுத்தின் உள்ளே புள்ளி இட்டனர். ( ப = ம் )

**நெடுவினா.**

1. **எழுத்துகளின் தோற்றம் குறித்து எழுதுக.**

- மனிதன் தனக்கு எதிரே இல்லாதவர் மற்றும் பின்னால் வரும் தலைமுறையினருக்கு கருத்துகளைத் தெரிவிக்க விரும்பினான்.
- பாறைகள் மற்றும் குகைச்சுவர்களில் எண்ணங்களை குறியீடுகளாகப் பொறித்து வைத்தான். இதுவே எழுத்து வடிவின் தொடக்க நிலையாகும்.
- அதன் பின் எழுத்து அதன் பொருளின் சித்திரவடிவமாக இருந்தது. இவ்வடிவம் 'ஓவிய எழுத்து' என அழைக்கப்பட்டது.
- அடுத்ததாக ஒவ்வொரு வடிவமும் அவ்வடிவத்துக்குரிய ஒலியாகிய சொல்லைக் குறிப்பதாக அமைந்தது. பின் அவ்வடிவம் அச்சொல்லின முதல் ஓசையைக் குறித்தது.
- இவ்வாறு ஓர் ஒலிக்கு ஓர் எழுத்து என உருவான நிலை 'ஒலி எழுத்து நிலை' எனப்படும்.
- இன்று உள்ள ஒவ்வொரு எழுத்துகளும் ஒரு காலத்தில் பொருள்களின் ஓவியமாக இருந்தவற்றின் திரிபுகளாகக் கருதப்படுகின்றன.

இவ்வாறு காலந்தோறும் தமிழ் எழுத்துகளின் வரிவடிவங்கள் பல்வேறு மாற்றங்களுக்கு உள்ளாகி வளர்ச்சி அடைந்து வந்துள்ளன.

**சிந்தனை வினா.**

**1. தற்காலத் தமிழ்மொழி வளர்ச்சிக்குச் செய்ய வேண்டிய பணிகளாக நீங்கள் கருதுவனவற்றை எழுதுக.**

- தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் தமிழ்வழிக் கல்வியை ஆதரிக்க வேண்டும்.
- தாய்மொழியில் படித்தவர்களுக்கு மாநிலஅரசுப்பணி என்ற நிலை உருவாக வேண்டும்.
- பொறியியல், மருத்துவம், அறிவியல் ஆகிய துறைகளில் தமிழை வளர்க்கப் புதிய கலைச்சொற்களை உருவாக்கிட வேண்டும்.
- பிறமொழிக் கலப்புகளை நீக்க வேண்டும் மற்றும் தமிழ் மொழி வளர்ச்சியில் இளைஞர்களின் பங்களிப்பு அதிகமாய் இருக்க வேண்டும்.

**2. தமிழை உரோமன் எழுத்துருவில் எழுதுவதால் தமிழுக்கு ஏற்படும் தீங்குகள் குறித்து விவாதிக்கவும்.**

( தமிழ் ஆர்வலர் மற்றும் இக்கால இளைஞர் சரவணனுக்கும் இடையே நிகழும் விவாதம் )

இக்கால இளைஞர் சரவணன் :

- நான் எப்போதும் கைப்பேசியில் வாழ்த்து சொல்வதை VAZHTHUKKAL (வாழ்த்துகள்) என்று தான் சொல்வேன்.
- இணையத்தில் முகநூலில் (Facebook), புலனத்தில் (Whatsapp), படவரியில் (Instagram) எழுதும் போது சிறிதாக எழுதுவதற்கு ஆங்கில எழுத்துருவைப் பயன்படுத்துவதில் என்ன தவறு? ஐயா.

தமிழ் ஆர்வலர் :

❖ எப்படித் தவறில்லை? என்று கூறலாம். உலகிலுள்ள அனைத்துக் கண்டுபிடிப்புகளுக்கும் தமிழில் பெயரிட்டுள்ளனர்.
❖ இன்று இணையத்தில் அதிகம் பயன்படுத்தப்படும் மொழிகளில் தமிழும் ஒன்று. அத்தகு சிறப்பு பெற்ற தமிழை தமிழில் எழுதினால் தானே பெருமையும் சிறப்பும் உண்டு.
❖ தமிழில் எழுத அழகி, வானவில், அமுதம் போன்ற இணைய தமிழ் எழுத்துருக்களைப் பயன்படுத்தலாம்.
❖ உரோமன் எழுத்துருவால் தமிழ்மொழி சிதைக்கப்படும் நிலையே வரும் என்பதை நாம் உணர வேண்டும்.

இக்கால இளைஞர் சரவணன் :

❖ தாய்மொழியைக் காப்பதன் அவசியத்தை உணர்ந்தேன் ஐயா, தமிழ் வாழ்க; தமிழ் வளர்க;

## கற்பவை கற்றபின்

**கீழ்க்காணும் பத்தியைப் படித்து அதில் இடம் பெற்றுள்ள பழைய வரிவடிவச் சொற்களை எடுத்து எழுதி, அவற்றை இன்றைய வரிவடிவில் மாற்றி எழுதுக.**

சுற்றுப்புறச் சூழ்நிலைப் பிரச்சனைகள் பற்றிய இந்தியாவின் கவலை பல்லாண்டு காலமாக வளர்ந்தே வருகிறது. ‘மனிதன் ஏழ்மையிலே இருக்கும் போது சத்தற்ற உணவினாலும், நோயினாலும் அச்சுறுத்தப்படுகிறான். பலவீனனாக இருப்பவன் போருக்கு அஞ்சுகிறான்; செல்வந்தனாக இருப்பவனோ தன் கொழுத்த செல்வத்தால் உண்டான அசுத்தத்திற்கு அஞ்சுகிறான்’ என்றெல்லாம் திருமதி. இந்திராகாந்தி அன்றைக்கு ஆற்றிய உரை நாம் நினைவு கூறத்தக்கது.

## சொற்பூங்கா ( விரிவானம் )

### மதிப்பீடு :

**சிறுவினா.**

1. **தமிழில் ஓரெழுத்து ஒரு மொழியின் பெருக்கம் குறித்து இளங்குமரனார் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.**

இளங்குமரனார் :

‘செந்தமிழ் அந்தணர்’ என்று அழைக்கப்படும் இளங்குமரனார் இலக்கண வரலாறு, தமிழிசை இயக்கம், தனித்தமிழ் இயக்கம், தமிழின் தனிப்பெருஞ்சிறப்புகள் உள்ளிட்ட பல நூல்களை எழுதியுள்ளார்.

தமிழின் தனிப்பெருஞ்சிறப்புகள் நூலிலிருந்து ஓரெழுத்து ஒரு மொழி குறித்த செய்திகள் தொகுத்து தரப்பட்டுள்ளன.

ஓரெழுத்து ஒரு மொழி :

❖ மொழி என்பதற்கு சொல் என்னும் பொருளும் உண்டு. ஓரெழுத்து மொழி என்பது ஓர் எழுத்து தனித்து வந்து பொருள் தருவதாகும். சான்றாக : பூ, தை, போ, மா, வா போன்றவை.
❖ இதனை தொல்காப்பியர் ‘நெட்டெழுத்து ஏழே ஓரெழுத்து ஒரு மொழி’ என்பார். பின்னர் வந்த நன்னூலார் ‘உயிர் வரிசையில்’ ஆறு ( ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ) ‘ம’ வரிசையில் ஆறு ( மா. மீ, மூ, மே, மை, மோ) ‘க’ வரிசையில் நான்கு (கா, கூ, கை, கோ) ‘ச’ வரிசையில் நான்கு (சா, சீ, சே, சோ) ‘வ’ வரிசையில் நான்கு (வா, வீ, வை, வெள) ‘த’ வரிசையில் ஐந்து (தா, தீ, தூ, தே, தை) ‘ப’ வரிசையில் ஐந்து (பா,பூ, பே, பை, போ) ‘ந’ வரிசையில் ஐந்து (நா, நீ, நே, நை, நோ) ‘ய’ வரிசையில் ஒன்று (யா) ஆக நாற்பது நெடில்கள் மற்றும் ‘நொ’, து’ என்னும் குறில்களையும் சேர்த்து ‘நாற்பத்து இரண்டு’ என்றார்.

ஓரெழுத்து மொழிகள் சில :

❖ ‘பூ’ என்பது ஓரெழுத்து மொழி; கா என்பதும் ஓரெழுத்து மொழி. இவை இணைந்து இன்று ‘பூங்கா’ என்ற கலைச்சொல் ஆகியது.
❖ ‘யா’ என்பது வினா. யாவர், யார், யாவை, யாண்டு என்றெல்லாம் வினவுவதற்கு முன் வந்து நிற்கும் எழுத்து ‘யா’ ஆகும்.
❖ ‘ஆ’, ‘மா’ என்பவை இணைந்து ‘ஆமா’ என்னும் கலைச்சொல் வடிவம். பண்டையக் காலத்திலேயே உண்டு. ஆமா என்பதன் பொருள் காட்டுப்பசு.
❖ ‘மா’ என்னும் ஓரெழுத்து ஒரு மொழியில் இருந்து மாநாடு, மாநிலம், மாஞாலம் போன்றவை வழக்கில் உள்ளன. ‘மா’ என்பது விலங்கையும் குறிக்கும்.

❖ நன்னூலார் கூறிய சில ஓரெழுத்து மொழிகள் பயன்பாட்டு பட்டியலில் இல்லாதது போல் நன்னூலார் கூறாத சில ஓரெழுத்து மொழிகளும் வழக்கில் உள்ளன. அவற்றில் சில.

❖ ஆன் என்பது 'ஆ' ஆகியது; மான் என்பது 'மா' ஆகியது; கோன் என்பது 'கோ' ஆகியது; தேன் என்பது 'தே' ஆகியது; ஏய் என்பது 'ஏ' என வழக்கில் ஊன்றி விட்டது; இவையெல்லாம் கரைந்து தேய்ந்தவை.

தமிழில் ஓரெழுத்து ஒரு மொழிச் சொற்களின் பெருக்கம் நம் மொழியின் பழமை. உயிரோட்டம் ஆகும். மொழிப்பற்றுள்ள ஒருவனே மொழியை வளர்ப்பான்; காப்பான்.

## கற்பவை கற்றபின்

**ஓரெழுத்து ஒரு மொழிகள் இடம் பெறுமாறு ஐந்து தொடர்கள் எழுதுக.**

1. ஆ : நம் உடல்நலத்திற்கு 'ஆ' வின்பால் மிகச்சிறந்த ஒன்றாகும். ( ஆ - பசு )
2. தை : தமிழர் திருநாள் 'தை' முதல் நாளன்று கொண்டாடப்படுகிறது. (தை - தமிழ் மாதம்)
3. கை : மனிதனின் இரண்டு 'கை' களை விட பலமானது அவனது தன்னம்பிக்கை. ( கை - உடல் உறுப்பு )
4. பா : என் நண்பன் என்னைப்பற்றி ஒரு 'பா' இயற்றினான். ( பா - பாடல் )
5. தா : எனது தமிழ் புத்தகத்தைத் 'தா' என்று என் தோழி என்னிடம் கேட்டாள். ( தா - கொடு)

## எழுத்துகளின் பிறப்பு ( கற்கண்டு )
### மதிப்பீடு :

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. உ, ஊ 2. தலை 3. மார்பு 4. ட், ண் 5. வ்

**பொருத்துக.**

1. க், ங் - நாவின் முதல் அண்ணத்தின் அடி
2. ச், ஞ் - நாவின் இடை, அண்ணத்தின் இடை
3. ட், ண் - நாவின் நுனி, அண்ணத்தின் நுனி
4. த், ந் - நாவின் நுனி, மேல்வாய்ப்பல்லின் அடி

**சிறுவினா.**

**1. எழுத்துகளின் பிறப்பு என்றால் என்ன?**

உயிரின் முயற்சியால் உடலில் உள் இருந்து எழும் காற்றானது மார்பு, தலை, கழுத்து, மூக்கு ஆகிய நான்கில் ஏதேனும் ஒன்றில் பொருந்தி இதழ், நாக்கு, பல், மேல்வாய் ஆகிய இவற்றின் முயற்சியால் வேறு வேறு ஒலிகளாகத் தோன்றுவது எழுத்துகளின் பிறப்பு ஆகும்.

**2. மெய் எழுத்துகள் எவற்றை இடமாகக் கொண்டு பிறக்கின்றன?**

| மெய்யெழுத்துகள் | இடம் |
|---|---|
| 1. வல்லின மெய் (க், ச்,ட், த், ப், ற்) | - மார்பு |
| 2. மெல்லின மெய் (ங், ஞ், ண், ந், ம், ன்) | - மூக்கு |
| 3. இடையின மெய் (ய், ர், ல், வ், ழ், ள்) | - கழுத்து |

**3. ழகர, லகர, ளகர மெய்களின் பிறப்பு முயற்சி பற்றி எழுதுக.**

❖ மேல்வாயை நாக்கின் நுனி வருடுவதால் "ழகரமெய்" பிறக்கிறது.

❖ மேல்வாய்ப்பல்லின் அடியை நாக்கின் ஓரங்கள் தடித்து நெருங்குவதால் "லகரமெய்" பிறக்கிறது.

❖ மேல்வாயை நாக்கின் ஓரங்கள் தடித்துத் தடவுவதால் "ளகரமெய்" பிறக்கிறது.

## கற்றவை கற்றபின்

1. "ஆய்தம்" - இச்சொல்லிலுள்ள ஒவ்வோர் எழுத்தின் வகையையும், அது பிறக்கும் இடத்தையும் பட்டியல் இடுக.

| எழுத்துகள் | ஆ | ய் | த | ம் |
|---|---|---|---|---|
| வகை | உயிர் | மெய் | உயிர்மெய் | மெய் |
| பிறக்கும் இடம் | கழுத்து | கழுத்து | மார்பு | மூக்கு |

## மொழியை ஆள்வோம்

**கொடுக்கப்பட்டுள்ள பத்தியைப் படித்துணர்ந்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளி :**

1. கதைக்குப் பொருத்தமான தலைப்புத் தருக.
   அழிவின் ஆரம்பம் ஆணவம் (அ) ஆணவம் ஆண்டவரை அடையச் செய்யாது.
2. செல்வந்தர் ஏமாறக் காரணம் என்ன?
   செல்வந்தர் தனக்கு துறவியிடமிருந்து பாராட்டுக் கிடைக்கும் என எண்ணி ஏமாற்றம் அடைந்தார்.
3. செல்வந்தரின் சேவைகளைப் பட்டியலிடுக;
   சத்திரங்கள் கட்டுதல், கோவில்களைப் புதுப்பித்தல், ஆன்மீக நூல்கள் வெளிவர பொருளுதவி, ஏழைகளுக்கு அன்னதானம்.
4. துறவி செல்வந்தருக்கு சொர்க்கம் இல்லை என்று கூறக் காரணம் என்ன?
   சேவை என்பது பலன் எதிர்பாராமல் செய்வது. செல்வந்தர் செய்த சேவைக்கு பலன் எதிர்பார்த்ததால் அது சேவை ஆகாது. எனவே துறவி செல்வந்தருக்கு சொர்க்கம் இல்லை என்றார்.

**ஒவ்வொரு சொல்லிலும் இரண்டிரண்டு எழுத்துகள் விடுபட்டுள்ளன. அந்த முதல் ஜோடி எழுத்துகளையே சொல்லின் பிற்பாதியிலும் நிரப்ப வேண்டும்.**

1. நல்ல பல்லவி 2. கண்டவர் விண்டவர் 3. எல்லாம் வல்லான் 4. கல்லாத பொல்லான்
5. கூறியது மாறியது 6. பற்றற்றவன்

**அகரவரிசைப்படுத்துக** : அழகுணர்ச்சி, இரண்டல்ல, ஈசன், உரைநடை, ஊழி, எழுத்து, ஏழ்கடல், ஐயம், ஒலிவடிவம், ஓலைச்சுவடிகள், ஔகாரம்.

**சரியான மரபுச்சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. கொக்கரிக்கும் 2. பருகு 3. உண் 4. கொய் 5. நிரை

**உயர்தனிச்செம்மொழி என்னும் தலைப்பில் கட்டுரை வரைக :**

முன்னுரை :

ஆங்கிலத்தில் **Classical Language** என்பதை தான் தமிழில் செம்மொழி என்கிறோம். உலகில் தமிழையும் சேர்த்து ஒன்பது மொழிகள் செம்மொழிகளாக உள்ளன. அவற்றுள் இலக்கிய இலக்கண வளங்கள் முழுமையாக அமைந்த உயர்தனிச்செம்மொழியாய் நம் தமிழ்மொழியும் விளங்குவது நமக்கு பெருமை வாய்ந்த ஒன்று.

செம்மொழிகள் :

கிரேக்கம், லத்தீன், சமஸ்கிருதம், பாரசீகம், சீனம், அரேபியம், எபிரேயம், கன்னடம் மற்றும் நம் தமிழ்மொழியுடன் சேர்த்து ஒன்பது மொழிகள் உலகில் செம்மொழி சிறப்பு பெற்றுள்ளன.

செம்மொழியின் இலக்கணம் :

- ஒரு மொழி செம்மொழி சிறப்பு பெற வேண்டுமென்றால் குறைந்தது 1000 ஆண்டுகள் பழமை வாய்ந்ததாக இருக்க வேண்டும்.
- மொழியின் பழமையை பறைசாற்ற இலக்கிய படைப்புகள், கலைகள் பல அமையப் பெற வேண்டும்.
- செம்மொழிகளில் பல இன்று வழக்கில் இருந்து மறையத் தொடங்கிவிட்ட சூழலில் இன்றும் என்றும் உயர்ந்தும் தனித்தும் நின்று மங்காப்புகழைப் பெற்று நிற்கிறது நம் தமிழ்மொழி.

தமிழ்மொழி :

உயர்தனிச் செம்மொழியாய் நம் தமிழ்மொழி விளங்க தமிழ் மொழியானது,

- 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட மூத்தமொழி.
- இலக்கிய, இலக்கண சிறப்பு குன்றாத செம்மை பொருந்திய மொழி,
- ஓலைச்சுவடி தொட்டு இன்று கணினி வரை ஆட்கொண்ட கருத்து நிறைந்த மொழி.

எனவே தமிழ் மொழியானது, என்றும் உயர்தனிச் செம்மொழியாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

முடிவுரை :

செம்மொழி என்றால் செம்மையான மொழி என்று பொருள். ஒரு மொழி போதிய அளவு வாழும் பொழுது அது முதிர்ச்சி பெறும். அப்பொழுது அம்மொழியானது சிறந்த இலக்கியங்களையும் சரியான இலக்கண விதிகளையும் பெற்று பல மொழிகளுக்கு முன்னோடியாக விளங்கும் அத்தகு உயர்தனிச்செம்மொழி நம் தமிழ்மொழி ஆகும்.

## மொழியோடு விளையாடு

**பொருத்தமான பன்மை விகுதிகளைச் சேர்த்து எழுதுக.**

| கள் | க்கள் | ங்கள் | ற்கள் |
|---|---|---|---|
| வாழ்த்துகள் | பூக்கள் | மரங்கள் | கற்கள் |
| கிழமைகள் | ஈக்கள் | மாதங்கள் | புற்கள் |
| கடல்கள் | பசுக்கள் | படங்கள் | சொற்கள் |
| கைகள் | பாக்கள் | பக்கங்கள் | பற்கள் |

**ஒரு சொல் ஒரே தொடரில் பல பொருள் தருமாறு எழுதுக.**

1. படி : நான் மாடிப்படியில் அமர்ந்து படித்துக் கொண்டிருந்த பொழுது ஒரு படி உப்பு பத்து ரூபாய் என விற்கும் சத்தம் கேட்டது.
2. திங்கள் : ஒவ்வொரு ஆண்டும் தைத்திங்களில் இரண்டாம் திங்கள் அன்று நான் திங்களைப் பார்ப்பேன்.
3. ஆறு : ஆறுமுகம் காலையில் ஐந்து, ஆறு பைகளை எடுத்துக்கொண்டு ஆறு செல்லும் வழியில் நடந்து சென்றான்.

**சொற்களை ஒழுங்குப்படுத்தி முறையாக தொடராக்குங்கள்.**

1. வளைந்த கோடுகளால் அமைந்த தமிழ் எழுத்து வட்டெழுத்து என்பர்.
2. உலகம் உள்ள வரையிலும் தமிழ் மொழி வாழட்டும்.
3. பகைவரை வென்றதைப் பாடும் இலக்கியம் பரணி ஆகும்.

இயல் - 2 **ஓடை** ( கவிதைப் பேழை )

### மதிப்பீடு :

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. பயிலுதல் 2. ஓடை 3. நன்மை + செய் 4. நீள் + உழைப்பு 5. சீருக்கேற்ப 6. ஓடையாட

**குறுவினாக்கள்.**

**1. ஓடை எவ்வாறு ஓடுவதாக வாணிதாசன் கூறுகிறார்?**

- ❖ காற்றில் உருண்டு, தவழ்ந்து, நெளிந்து ஓடையானது ஓடுகிறது.
- ❖ ஓடும் பொழுது சலசல என ஒலி எழுப்பியும் கரையை அலைகளால் மோதியும் ஓடுகிறது.

**2. ஓடை எழுப்பும் ஒலிக்கு எதனை உவமையாக வாணிதாசன் கூறுகிறார்?**

பெண்கள் பாடும் வள்ளைப்பாட்டிற்கு ஏற்ப முழவை முழக்குவர். அது போல் ஓடையானது ஒலி எழுப்பும் என்கிறார் வாணிதாசன். ( மகளிர் நெல் முதலான தானியங்களை உலக்கையால் குற்றும் பொழுது வளையல் குலுங்கும் ஓசையுடன் அவர்கள் பாடும் பாட்டு வள்ளைப்பாட்டு எனப்படும். )

**சிறுவினா.**

**1. ஓடையின் பயன்களாக வாணிதாசன் கூறுவன யாவை?**

- ❖ நன்செய், புன்செய் நிலங்களுக்கு நீர்வளம் தந்து பயிர்களைச் செழிக்கச் செய்கிறது. அப்பயிர்கள் மூலம் நாட்டின் வறுமை ஒழிகிறது.
- ❖ கொஞ்சி மகிழும் அலைகளால் கரையை மோதி, பசும்புற்களுக்கு குளிர்ச்சி இன்பம் சேர்க்கிறது.
- ❖ நெஞ்சில் இரக்கம் இல்லாதவர் வெட்கப்படும்படி இடைவிடாது ஓடி தன் உழைப்பைக் கொடையாகத் தருகிறது.

**சிந்தனை வினா.**

**1. வள்ளைப்பாட்டு என்பது நெல் குத்தும் பொழுது பாடப்படும் பாடலாகும். இது போல் வேறு எந்தெந்தச் சூழல்களில் என்னென்ன பாடல்கள் பாடப்படுகின்றன?**

- ❖ குழந்தைகளை உறங்க வைக்க - "தாலாட்டு"
- ❖ சிறுவர்கள் விளையாடும் பொழுது - "விளையாட்டுப்பாடல்"
- ❖ நாற்று நடும் பொழுது - "நடவுப்பாடல்"
- ❖ வயலுக்கு நீர் இறைக்கும் பொழுது - "ஏற்றப்பாடல்"
- ❖ கோவில் திருவிழாவில் - "கும்மிப்பாடல்", "வில்லுப்பாடல்"
- ❖ இறந்தவர்களுக்குப் பாடுவது - "ஒப்பாரிப்பாடல்"

இது போன்று பல்வேறு நிகழ்வுகளில் பலவகைப் பாடல்கள் பாடப்படுகின்றன.

## **கோணக்காத்துப்பாட்டு** ( கவிதைப் பேழை )
## **மதிப்பீடு :**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. முகில் 2. காலனை 3. விழுந்தது + அங்கே 4. செத்து + இறந்த 5. பருத்தியெல்லாம்

**குறுவினாக்கள்**

**1. கப்பல் கவிழ்ந்ததற்குக் காரணமாகக் கோணக்காத்துப்பாட்டு கூறுவது யாது?**

எமனைப் போல் வந்த பெருமழை மற்றும் சுழல்காற்று ஆகிய இரண்டும் கப்பல் கவிழ்ந்ததற்குக் காரணமாகும்.

**2. புயல் காற்றினால் தொண்டைமான் நாட்டில் ஏற்பட்ட அழிவு யாது?**

தொண்டைமான் நாட்டில் வைக்கப்பட்ட மரங்கள் அனைத்தும் புயல்காற்றினால் சின்னாபின்னமாக ஒடிந்து விழுந்தன.

**3. கொல்லிமலை பற்றிப் பாடல் கூறும் செய்தி யாது?**

சித்தர்கள் வாழும் மலை கொல்லிமலை. அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் புயல் அடித்தது.

**சிறுவினாக்கள்.**

**1. புயல் காற்றினால் மரங்களுக்கு ஏற்பட்ட நிலைகளாகப் பாடல் குறிப்பிடும் கருத்துகள் யாவை?**

- ❖ வாங்கல் என்னும் ஊரில் அழகாக வைக்கப்பட்ட தென்னம்பிள்ளைகள் எல்லாம் வீணாயின.
- ❖ தொண்டைமான் நாட்டில் சிறப்பாக நடப்பட்ட மரங்கள் அனைத்தும் ஒடிந்து விழுந்தன.
- ❖ காங்கேய நாட்டில் மேட்டுப்பகுதிகளில் வளர்ந்திருந்த பருத்திச்செடிகள் குச்சிகளாய் மாறின.

**2. கோணக்காற்றால் வீடுகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் யாவை?**

- ❖ திரண்டு எழுந்த மேகங்களால் காற்று வேகமாய் அடித்தது அதனால்.
- ❖ வீடுகளின் கூரைகள் எல்லாம் பிரிந்து சரிந்தன.
- ❖ அழகிய சுவர்களை உடைய மாடிவீடுகள் அடியோடு விழுந்தன.

**சிந்தனைவினா.**

**1. இயற்கைச் சீற்றங்களால் பாதிப்பு ஏற்படாமல் தவிர்க்கச் செய்ய வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளாக நீங்கள் எவற்றைக் கருதுகிறீர்கள்?**

வெள்ளப்பெருக்கு : ஆறு மற்றும் பெரிய நீர் நிலைகளுக்கு அருகில் வசிப்போர் மேட்டுப்பகுதியில் சென்று தங்குதல்.

எரிமலை வெடிப்பு : மலைக்கு அருகில் வசிப்போர் பாதுகாப்பான இடத்திற்கு செல்லுதல்.

காட்டுத்தீ : காட்டிற்கு அருகில் வசிப்போர் நகர்ப்புறத்தில் வந்து தங்குதல்.

சுனாமி : கடற்கரைக்கு அருகில் வசிப்போர் கடற்கரைப்பகுதியில் இருந்து பல கிலோமீட்டர் தூரத்திற்கு அப்பால் செல்லுதல்.

நிலநடுக்கம் : கட்டடத்தை விட்டு வெளியேறி வெட்ட வெளியில் தங்குதல்.

இது தவிர்த்து பாதிக்கப்பட்டோருக்கு தேவையான உணவு, மருத்துவ வசதி மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் கிடைக்க ஏற்பாடு செய்தல் போன்றவை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் ஆகும்.

## கற்பவை கற்றபின்

**1. மக்களைப் பாதிக்கும் இயற்கைச் சீற்றங்களை பற்றி எழுதுக.**

இயற்கைச் சீற்றங்கள் :

இயற்கைச் சீற்றம் என்பது இயற்கையால் ஏற்படக்கூடிய பேரழிவு ஆகும். இதில் மனித உயிர்கள், உடைமைகள் மற்றும் பிற உயிரினங்கள் என அனைத்துமே பாதிக்கப்படும். அவற்றுள் சில.

❖ சூறாவளிப்புயல் ❖ நிலச்சரிவு ❖ சுனாமிஅலை ❖ வெள்ளம் ❖ பூகம்பம்

❖ வறட்சி ❖ எரிமலைச்சீற்றம் ❖ தீ விபத்துகள் ❖ அதிகமழை ❖ காட்டுத்தீ

**2. இயற்கைச் சீற்றங்களை பற்றிய புகைப்படங்களை நாளேடுகளிலிருந்து திரட்டிப் படத் தொகுப்பு உருவாக்குக.**

மாணவர்கள் தாமாகவே முன் வந்து இயற்கைச் சீற்றங்களின் புகைப்படங்களை நாளேடுகளிலிருந்து திரட்டி படத் தொகுப்பு ஒட்ட வேண்டும்.

## நிலம் பொது ( உரைநடை உலகம் )
## மதிப்பீடு :

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. தாயாக 2. இனிமை + ஓசை 3. பாலூறும்

**தொடரில் அமைத்து எழுதுக.**

1. வேடிக்கை : எங்கள் ஊர் மக்கள் மிகவும் வேடிக்கையாக பேசுவர்.
2. உடன் பிறந்தார் : எனது அக்காவும் தங்கையும் என் உடன் பிறந்தோர் ஆவர்.

**குறுவினாக்கள்.**

**1. விலை கொடுத்து வாங்க இயலாதவை எனச் சியாட்டல் கூறுவன யாவை?**

❖ பூமிக்கு நெருக்கமான வானம், காற்றின் தூய்மை, நீரின் உயர்வு போன்றவை யாருக்கும் சொந்தமில்லை. அவை விலை கொடுத்து வாங்க இயலாதவை என்கிறார் சியாட்டல்.

**2. நிலத்திற்கும், செவ்விந்தியர்களுக்கும் உள்ள உறவு யாது?**

❖ செவ்விந்தியர்களுக்கு நிலமே தாய் ஆகும். அவர்கள் அந்த மண்ணுக்கு உரியவர்கள். அந்த மண் அவர்களுக்கு உரியதாகும்.

**3. எதனைத் தம்மால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை எனச் சியாட்டல் கூறுகிறார்?**

❖ செவ்விந்தியர்கள் வாழும் பகுதியில் எருமைகள் கொல்லப்படுவதும்

❖ மக்கள் நடமாட்டம் அதிகரிப்பதும்

❖ மலைகளை மறைத்து தொலைபேசிக்கம்பிகள் பெருகுவதையும் தம்மால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்கிறார் சியாட்டல்.

**சிறுவினா**

**1. நீர்நிலைகள் குறித்து சியாட்டல் கூறியுள்ளவற்றை எழுதுக.**

❖ ஏரியின் நினைவு எச்சங்கள் எம் மக்களின் வாழ்வியல் நிகழ்வின் நினைவு.

❖ நீரின் முணுமுணுப்புகள் எம் பாட்டனின் குரல்கள்.

❖ ஆறுகள் யாவும் எம் உடன்பிறந்தவர்கள். இவர்கள் தாகம் தீர்த்து உணவளிக்கின்றனர்.

❖ ஓடைகளிலும், ஆறுகளிலும் ஓடும் நீரானது எமது மூதாதையரின் குருதி என நீர்நிலைகள் குறித்து சியாட்டல் கூறியுள்ளார்.

**2. எவையெலாம் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவை என்று சியாட்டல் கூறுகிறார்?**

❖ நறுமணம் மிகுந்த மலர்கள் எமது சகோதரிகள்.

❖ மான்கள், குதிரைகள், கழுகுகள் எமது சகோதரர்கள்.

❖ மலைமுகடுகள், பசும்புல்வெளிகள், பனித்துளிகள், மட்டக்குதிரைகளின் உடல் சூட்டின் இதமான கதகதப்பு, இங்குள்ள மனிதர்கள் என எல்லோரும் ஒரே குடும்பம்.

❖ நாங்கள் இம்மண்ணுக்குரியவர்கள் இம்மண் எங்களுக்குரியது. இந்நிலம் எங்கள் தாய் ஆகும் என்கிறார் சியாட்டல்.

**நெடுவினா.**

1. **தாய்மண் மீதான செவ்விந்தியர்களின் பற்றுக் குறித்துச் சியாட்டல் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.**
   - ❖ நாங்கள் இந்த மண்ணுக்குரியவர்கள்; இந்த மண் எங்களுக்குரியது. இம் மண்ணே எங்களது தாய் ஆகும்.
   - ❖ இந்நிலம் எங்களுக்கு மிகவும் புனிதமானது; எமது மக்கள் இப்பூமியை எப்போதும் மறப்பதே இல்லை.
   - ❖ பூமி எங்களுக்கு தாய், வானம் எங்கள் தந்தை எனக் கருதுகிறோம்.
   - ❖ இந்த நிலமானது எம்முடைய பாட்டன்மார்கள் எரிந்த சாம்பலால் ஆனது.
   - ❖ உங்கள் குழந்தைகளுக்கு இதனைக் கண்டிப்பாகச் சொல்லித்தர வேண்டும். அப்போது தான் அவர்கள் நிலத்தை மதிப்பார்கள்.
   - ❖ இப்பூமியின் மீது விழுவது எல்லாம் பூமித்தாயின் மீது விழுவது ஆகும். இப்பூமி மீது மக்கள் துப்புவது அவர்கள் தம் தாய் மீது துப்புவதற்கு சமமாகும்.
   - ❖ நிலம் கடவுள் போன்றது. அதனை கெடுப்பது படைத்த இறைவனை அவமதிக்கும் செயலாகும்.
   - ❖ நீங்கள் வாழ்ந்த இடத்தை அசுத்தப்படுத்தினால் ஒரு நாள் உங்கள் குப்பைகளுக்குள்ளேயே மூச்சுமுட்டி இறந்து போகக்கூடும்.
   - ❖ நாங்கள் எப்படி இந்நிலத்தை காப்பாற்றி வைத்திருந்தோமோ அப்படியே காப்பாற்றி உங்கள் குழந்தைகளுக்கு அளியுங்கள்.
   - ❖ இயற்கை நம்மை நேசிப்பது போல நாமும் நிலத்தை நேசிப்போம் என்று சியாட்டல் கூறுகிறார்.

   ( சியாட்டல் என்பவர் அமெரிக்க பூர்வீகக் குடிமகனான செவ்விந்தியர்களில் சுக்குவாமிஷ் பழங்குடியினரின் தலைவர் ஆவார். சியாட்டல் 1854 - ஆம் ஆண்டு அமெரிக்க குடியரசுத்தலைவருக்கு எழுதிய கடிதம்)

**சிந்தனைவினா.**

1. **நிலவளத்தினைக் காப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய செயல்களாக நீங்கள் கருதுவன யாவை?**
   - ❖ ஒரு முறை உபயோகித்தபின் நிலத்தில் தூக்கி எறியக்கூடிய நெகிழிப்பொருட்கள் நிலத்திற்கு தீங்கு என்பதை உணர வேண்டும்.
   - ❖ நெகிழிப்பொருட்களுக்கு மாற்றாய் துணிப்பை, பாக்குமரத்தட்டு போன்ற மக்கும் தன்மை கொண்ட பொருட்களைப் பயன்படுத்த வேண்டும்.
   - ❖ தொழிற்சாலைகளில் வேதியியல், உலோகக்கழிவுகள் நிலத்தின் வளத்தை கெடுக்காத படி நிலத்தை பாதுகாக்க வேண்டும்.
   - ❖ கழிவுகள் மற்றும் குப்பைகளை மட்கும் மற்றும் மக்காத குப்பைகளாக பிரித்து குப்பைத்தொட்டியில் போட வேண்டும்.

## கற்பவை கற்றபின்

1. **நிலவளத்தினைப் பாதுகாக்க நாம் செய்ய வேண்டிய இன்றியமையாப் பணிகளை தொகுத்து எழுதுக.**
   - ❖ செயற்கை வாழ்க்கை நடைமுறைகளைக் குறைத்து இயற்கை வாழ்வில் அடியெடுத்து வைக்க வேண்டும்.
   - ❖ நிலத்தை கெடுக்கக்கூடிய நெகிழி போன்ற பொருட்களின் உற்பத்தி மற்றும் பயன்பாட்டை நிறுத்த வேண்டும்.
   - ❖ விவசாயத்தில் இயற்கை உரங்கள் மற்றும் இயற்கை வேளாண்மையை ஊக்குவிக்க வேண்டும்.
   - ❖ ஆறு, குளம் போன்ற நீர்நிலைகளை பாதுகாக்க வேண்டும்.
   - ❖ மரங்கள் அதிகமாக வளர்க்கப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டும்.
2. **தமிழ்நாட்டின் இயற்கை வளங்கள் குறித்து படத்தொகுப்பு ஒன்றை உருவாக்குக.**

   மாணவர்கள் தாமாகவே முன் வந்து தமிழ்நாட்டின் இயற்கை வளங்கள் குறித்த படத்தொகுப்பு ஒன்றை உருவாக்க வேண்டும்.

## வெட்டுக்கிளியும் சருகுமானும் (விரிவானம்)

## மதிப்பீடு

**சிறுவினா**

**1. 'வெட்டுக்கிளியும், சருகுமானும்' கதையைச் சுருக்கி எழுதுக.**

காடர்கள், பழங்குடியின மக்கள் தங்கள் பிள்ளைகளுக்கும், பேரன், பேத்திகளும் காடுகள் விலங்குகள் பற்றி சொல்லிய கதைகளுள் ஒன்று தான் 'வெட்டுக்கிளியும் சருகுமானும்' ஆகும்.

குறிஞ்சிப்புதரில் படர்ந்திருந்த கிளையில் வாயாடி வெட்டுக்கிளி ஒன்று வசித்து வந்தது. ஒரு மாலை நேரம் கூரன் என்ற சருகுமான் இங்கும் அங்குமாய் வேகமாக ஓடிக் கொண்டிருந்தது. அதனிடம் ஏன் ஓடுகிறாய்? என்றது வெட்டுக்கிளி.

இப்பொழுது உன்னிடம் பேச நேரமில்லை; சிறுத்தை பித்தக்கண்ணு என்னைத் துரத்திக் கொண்டு வருகிறது. விழுந்து கிடந்த மரத்தின் அடியில் ஒளிந்து கொண்டு பித்தக்கண்ணு என்னை பற்றிக் கேட்டால் வாயைத் திறந்து எதையும் சொல்லாதே என்று எச்சரித்தது.

வெட்டுக்கிளி தலையை ஆட்டிவிட்டு கண்ணை மூடிக்கொண்டது. கூரனை தேடிக்கொண்டு வந்த பித்தக்கண்ணு வெட்டுக்கிளியிடம் கூரன் இங்கு வந்தானா? என்று கேட்டது.

பித்தக்கண்ணுவை பார்த்த பரவசத்தில் வெட்டுக்கிளி கூரன் ஒளிந்திருந்த இடத்தில் குதித்து குதித்துச் சென்றது.

சந்தேகம் வந்த பித்தக்கண்ணு மரத்தை மோப்பம் பிடிக்க ஆரம்பித்தது. ஆனால் முதல் நாள் அங்கு தங்கியிருந்த புனுகுப்பூனையின் துர்நாற்றம் தாங்க முடியாமல் பித்தக்கண்ணு அங்கிருந்து சென்று விட்டது.

அதன்பின் வெளியே வந்த கூரன் வெட்டுக்கிளியின் மீது கோபம் கொண்டது. நான் இன்று செத்துப் பிழைத்திருக்கின்றேன். இனி இப்படி செய்தால் உன்னை என் கால்களால் மிதித்து நசுக்கிவிடுவேன் என்றுக் கூறி விட்டு காட்டுக்குள் ஓடியது.

அன்றிலிருந்து கூரனின் கூர்ப்பாதங்கள் எங்கே தன்மீது பட்டு விடுமோ என்ற பயத்தில் இன்று வரை வெட்டுக்கிளிகள் ஓர் இடத்தில் நிற்காமல் குதித்துக் கொண்டேயுள்ளன.

## கற்பவை கற்றபின்

**1. வெட்டுக்கிளியும் சருகுமானும் என்னும் கதையை நாடகமாய் நடித்துக் காட்டுக.**

**காட்சி - 1**

கதை மாந்தர்கள் : வெட்டுக்கிளி, கூரன் என்னும் சருகுமான்

வெட்டுகிளி : என்ன கூரன் பார்த்து வெகுநாள் ஆயிற்று! ஏன் இங்கும் அங்கும் பதற்றமாய் ஓடுகிறாய்?

கூரன் : காட்டின் அந்தக் கோடியில் இருந்தேன். உன்னிடம் பேச நேரமில்லை பித்தக்கண்ணு என்னைத் துரத்துகிறது. நான் இந்த மரத்தின் அடியில் ஒளிந்து கொள்கிறேன். நீ எதுவும் சொல்லிவிடாதே.

வெட்டுக்கிளி : சரி சரி சொல்லமாட்டேன். பத்திரமாக ஒளிந்துகொள்.

**காட்சி - 2**

கதை மாந்தர்கள் : வெட்டுக்கிளி, பித்தகண்ணு என்னும் சிறுத்தை

பித்தக்கண்ணு : வெட்டுக்கிளியே கூரன் இங்கு வந்தானா? எங்கு சென்றான் என்று தெரியுமா? உனக்கு.

வெ ட்டுக்கிளி : கூரன் எங்கு ஒளிந்திருக்கிறான் என்று எனக்குத் தெரியாது.

(சொல்லியவாறே கூரன் ஒளிந்திருக்கும் இடத்தருகே குதித்துகுதித்துச் சென்றது.)

பித்தக்கண்ணு : நீ குதிப்பதைப் பார்த்தால் எனக்கு சந்தேகமாக உள்ளது. நான் எதற்கும் இந்த மரத்தடியில் தேடிப் பார்க்கிறேன். கூரனின் வாடை தெரியவில்லையே. சீச்சீ என்ன இது? புனுகுப்பூனையின் நாற்றம் இங்கிருந்து முதலில் செல்கிறேன்.

**காட்சி - 3**

கதை மாந்தர்கள் : வெட்டுக்கிளி, கூரன்

கூரன் : (வெளியில் வந்து) அட! முட்டாள் வெட்டுக்கிளியே! இப்படியா குதிப்பது? நான் இன்று செத்துப்பிழைத்திருக்கிறேன்.

வெட்டுக்கிளி : இல்லை .... இல்லை .... அது வந்து!

சருகுமான் : நடிக்காதே. இனி இப்படிச் செய்தால் உன்னை என் தங்கக்கால்களால் மிதித்து நசுக்கி விடுவேன். நான் செல்கிறேன்.

வெட்டுக்கிளி : மன்னித்து விடு சருகுமானே! ஐய்யோ இனி மேல் ஓரிடத்தில் நிற்கக்கூடாது இந்த கூரன் நம்மை மிதித்தாலும் மிதித்து விடுவான். இங்கும் அங்கும் குதித்துக் கொண்டே இருப்போம். அப்பொழுது தான் பிழைக்க முடியும்.

**வினைமுற்று** (கற்கண்டு)

## மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.:** 1. மேய்ந்தது 2. படித்தான் 3. ஓடு

**சிறுவினாக்கள்**

**1. வினைமுற்று என்றால் என்ன?**

வினைமுற்று - வினை + முற்று . ஒரு வினை முற்றுப்பெற்ற சொல்லாயின் அது வினைமுற்று எனப்படும். எ.கா. கண்ணன் பாடுகிறான், மாடு மேயும்.

**2. தெரிநிலை வினைமுற்று என்றால் என்ன?**

செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் என்னும் ஆறினையும் வெளிப்படையாகத் தெரிவிக்கும் வினைமுற்று தெரிநிலை வினைமுற்று எனப்படும்.

எ.கா. உழவன் நிலத்தை உழுகிறான்.

**3. வியங்கோள் வினைமுற்று என்றால் என்ன?**

க, இய, இயர், அல் என்பன வியங்கோள் வினைமுற்று விகுதிகளாகும்.

**4. ஏவல் வினைமுற்றுக்கும், வியங்கோள் வினைமுற்றுக்கும் இடையேயுள்ள வேறுபாடுகள் யாவை?**

| ஏவல் வினைமுற்று | வியங்கோள் வினைமுற்று |
|---|---|
| 1. முன்னிலையில் வரும் | 1. இருதிணை, ஐம்பால், மூவிடங்களுக்கும் பொதுவாய் வரும் |
| 2. ஒருமை, பன்மை வேறுபாடு உண்டு. | 2. ஒருமை, பன்மை வேறுபாடு இல்லை. |
| 3. கட்டளைப் பொருளை மட்டும் உணர்த்தும். | 3. வாழ்த்துதல், வைதல், விதித்தல், வேண்டல் ஆகிய பொருள்களை உணர்த்தும். |
| 4. விகுதி பெற்றும் பெறாமலும் வரும். | 4. விகுதி பெற்றே வரும். |

**கற்பவை கற்றபின்**

**1. 'வாழ்க' என்னும் சொல்லை ஐந்து பால்களிலும், மூன்று இடங்களிலும் இடம் பெறுமாறு தொடர்களை எழுதுக.**

ஐந்து பால்கள் :

- அவள் வாழ்க (பெண் பால்)
- அவன் வாழ்க (ஆண் பால்)
- அவர்கள் வாழ்க (பலர் பால்)
- அது வாழ்க (ஒன்றன் பால்)
- அவை வாழ்க (பலவின் பால்)

மூன்று இடங்கள் :

- நான் வாழ்க; நாம் வாழ்க (தன்மை)
- நீ வாழ்க; நீங்கள் வாழ்க (முன்னிலை)
- கண்ணன் வாழ்க; அவர்கள் வாழ்க (படர்க்கை)

## மொழியை ஆள்வோம்

**தமிழ் எண்கள் அறிவோம் - விடுபட்ட கட்டங்களை நிரப்புக.**

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| க | உ | ங | ச | ரு | சு | எ | அ | கூ | க0 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| கக | கஉ | கங | கச | கரு | கசு | கஎ | கஅ | ககூ | உ0 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| உக | உஉ | உங | உச | உரு | உசு | உஎ | உஅ | உகூ | ங0 |

**வண்ணமிட்டுள்ள எண்களுக்குரிய தமிழ் எண்களை எழுதுக.**

1. உலக ஈர நில நாள் - பிப்ரவரி 2 - உ
2. உலக ஓசோன் நாள் - செப்டம்பர் 16 - கசு
3. உலக இயற்கை நாள் - அக்டோபர் 3 - ங
4. உலக வனவிலங்கு நாள் - அக்டோபர் 6 - சு
5. உலக இயற்கைச்சீரழிவுத் தடுப்பு தினம் - அக்டோபர் 5 - ரு

**கொடுக்கப்பட்டுள்ள தொடர்களின் வகையைக் கண்டறிந்து எழுதுக.**

1. செய்தித்தொடர் 2. விழைவுத்தொடர் 3. உணர்ச்சித்தொடர் 4. வினாத்தொடர்

**தொடர்களை மாற்றுக.**

1. ஆ! காட்டின் அழகுதான் என்னே!
2. நாயின் காலில் அடிபட்டு விட்டது.
3. அதிகாலையில் துயில் எழு
4. முகில்கள் திரண்டால் மழை பெய்யும்
5. காட்டில் என்ன நடமாட்டம் உள்ளது?

**கடிதம் எழுதுக - விளையாட்டுப்போட்டியில் வெற்றி பெற்ற உன் நண்பனுக்குப் பாராட்டுக் கடிதம் எழுதுக.**

இடம் : மதுரை
நாள் : 18.04.2021

அன்புள்ளத் தோழன் கவினுக்கு.

உன் மேல் மாறாத அன்பு கொண்ட உன் நண்பன் மகிழன் எழுதும் கடிதம். நீ நலமா? உன் பெற்றோரும் தம்பியும் நலமா? நானும் என் குடும்பத்தாரும் நலமுடன் உள்ளோம்.

உங்கள் பள்ளியில் நடைபெற்ற விளையாட்டுப்போட்டியில் கபடியில் சிறப்பாக விளையாடி முதலிடம் பெற்று மேலும் மாவட்ட அளவில் விளையாடவும் நீ தேர்ந்தெடுக்கப்பட்டதை அறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன்.

உனக்கு எனது மனமார்ந்த பாராட்டுகள். நீ இன்னும் பல வெற்றிகள் பெற்று இந்திய அளவில் விளையாடி வெற்றிபெற இறைவனை வேண்டுகிறேன்.

இப்படிக்கு,
அன்புத்தோழன்
மகிழன்

உறைமேல் முகவரி
செல்வன். கவின்
58, வள்ளுவர் காலனி,
மயிலாப்பூர்,
சென்னை.

## மொழியோடு விளையாடு

**வினைமுற்றுக்குரிய வேர்ச்சொல்லை எழுதுக.**

1. நட 2. போ 3. செல் 4. உறங்கு 5. வாழிய 6. பேசு 7. வா 8. தா 9. பயில் 10. கேள்

## திருக்குறள் (வாழ்வியல்)

### மதிப்பீடு :

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. நடுவுநிலைமை 2. கல்லாதவர் 3. வன்மை + உலகம் 4. நெடுந்தேர் 5. உவமைஅணி

**குறுவினாக்கள்**

1. சான்றோர்க்கு அழகாவது எது?

துலாக்கோல் போல் நடுவுநிலைமையுடன் சரியாயச் செயல்படுவதே சான்றோர்க்கு அழகாகும்.

2. பழியின்றி வாழும் வழியாக திருக்குறள் கூறுவது யாது?

முதலில் தன் குற்றம் அறிந்து அதனை நீக்கி பிறகு பிறர் குற்றம் ஆராயவல்லவன் பழியின்றி வாழ்வான்.

3. 'புலித்தோல் போர்த்திய பசு' - என்னும் உவமையால் திருக்குறள் விளக்கும் கருத்து யாது?

மனதை அடக்கும் திறன் இல்லாதவன் புரியும் தவமானது புலியின் தோலைப் போர்த்திக்கொண்டு பசு பயிரை மேய்ந்தது போல் ஆகும்.

**திருக்குறளைச் சீர்பிரித்து எழுதுக.**

1. தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தால் காணப் படும்

2. தொடங்கற்க எவ்வினையும் எள்ளற்க முற்றும்
இடங்கண்ட பின்அல் லது.

**கோடிட்ட இடங்களை நிரப்புக.** 1. பெற்றம், போர்த்து 2. மக்கள், இலங்குநூல்

**சீர்களை முறைப்படுத்தி எழுதுக.**

1. கணைகொடிது யாழ்கோடு செவ்விதுஆங்கு அன்ன
வினைபடு பாலால் கொளல்.

**கடிதம் எழுதுக. : சுற்றுலாச் செல்ல ஒப்புதலும், பணமும் கேட்டுத் தந்தைக்கு மடல் வரைக.**

இடம் : சென்னை

நாள் : 15.12.2020

அன்புள்ள அப்பா அவர்களுக்கு,

என் அன்பான வணக்கம். நீங்கள் அம்மா, என் தம்பி, தங்கை அனைவரும் நலமாக இருக்க நான் இறைவனை என்றும் வணங்குகின்றேன். இங்கு நானும் எனது நண்பர்களும் நலம். நான் எனது படிப்பில் முழுகவனத்துடனும் இருக்கிறேன்.

அடுத்த வாரம் எங்கள் பள்ளியில் இருந்து அனைத்து மாணவர்களையும் கல்விச்சுற்றுலா அழைத்து செல்கிறார்கள். நான் இச்சுற்றுலா செல்வது எனது வெளியுலக அறிவை மேம்படுத்தும் என எண்ணுகிறேன். எனவே அதற்கான உங்களது மற்றும் அம்மாவின் அனுமதியையும் மேலும் அதற்கான செலவுத்தொகையான ரூபாய். 500/- ஐயும் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு,

தங்கள் அன்பு மகள்,

கயல்விழி

உறை மேல் முகவரி :

திரு. சோமசுந்தரம்

78, கபிலர் தெரு,

வடக்கு ரத வீதி,

மதுரை.

**படங்களுக்குப் பொருத்தமான திருக்குறளை எழுதுக.**

❖ சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்துஒருபால்
கோடாமை சான்றோர்க்கு அணி.

❖ வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று.

❖ கணைகொடிது யாழ்கோடு செவ்விதுஆங்கு அன்ன
வினைபடு பாலால் கொளல்.

❖ கானமுயல் எய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது.

**பின்வரும் பத்திக்குப் பொருத்தமான திருக்குறளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

2. தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தால் காணப் படும்.

இயல் - 3

## நோயும் மருந்தும் ( கவிதைப் பேழை )

### மதிப்பீடு :

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. பிணி 2. மூன்று 3. இவை + உண்டார் 4. தாமினி

**குறுவினாக்கள்.**

**1. நோயின் மூன்று வகைகள் யாவை?**

- மருந்தினால் நீங்கும் நோய்கள்
- எதனாலும் தீராத தன்மையுடைய நோய்கள்
- வெளித்தோற்றத்தில் அடங்கியது போல் தோன்றி உள்ளுக்குள் தீராமல் துன்பம் தரும் நோய்கள்

**2. நீலகேசியில் பிறவித்துன்பத்தைத் தீர்க்கும் மருந்துகளாகக் கூறப்படுவன யாவை?**

பிறவித்துன்பத்தைத் தீர்க்கும் மருந்துகளாக நீலகேசி கூறுவது: நல்லறிவு, நல்லொழுக்கம், நற்காட்சி

**சிறுவினா.**

**1. நோயின் வகைகள், அவற்றைத் தீர்க்கும் வழிகள் பற்றி நீலகேசி கூறுவன யாவை?**

நோய்கள் :

உடலுக்கு வருத்தம் தரக்கூடிய நோய்கள் போல தீய எண்ணங்கள் மனதில் தங்குவதும் நோய் எனப்படும்.

நோயின் வகைகள் :

- மருந்தினால் நீங்கும் நோய்கள்
- எதனாலும் தீராத தன்மையுடைய நோய்கள்
- முற்றிலும் தீராமல் உள்ளுக்குள் தீராமல் துன்பம் தரும் நோய்கள்

நோயைத் தீர்க்கும் வழிகள் :

பிறவித்துன்பம் அகற்றுவதற்கு அரியனவாகும்; இவற்றைத் தீர்க்கும் மருந்துகள் மூன்று. அவை ❖ நல்லறிவு ❖ நல்லொழுக்கம் ❖ நற்காட்சி என்பவையாகும். இவற்றால் பிறவி என்னும் நோயிலிருந்து நீங்கி உயரிய இன்பத்தை அடைவர்.

**சிந்தனைவினா.**

**1. துன்பமின்றி வாழ நாம் கைக்கொள்ள வேண்டிய நற்பண்புகள் யாவை?**

- துன்பமின்றி வாழ நாம் பின்பற்ற வேண்டிய முக்கியப்பண்பு ஒழுக்கமாகும்.
- உண்மை வெறும் சுவைக்காக மட்டும் உண்ணாது உடல்நலத்தையும் கருத்தில் கொண்டு உண்ண வேண்டும்.
- உடல் சுத்தம் எவ்வளவு முக்கியமோ அதே அளவு மனசுத்தமும் அவசியம் என்பதை உணர வேண்டும்.
- நாவடக்கம், தன்னடக்கம், தம்மை துன்பம் இன்றி வாழ வைக்கும்.
- இனிய நல்ல காட்சிகளைக் காணுதல், செவிக்கு இன்பம் தரும் நல்ல செய்திகளைக் கேட்டல், பிறர் மனம் மகிழும் வார்த்தைகளைப் பேசுதல், மனதையும் கால்களையும் சிந்தித்து வழிநடத்துதல் நம்மை துன்பம் அணுகாமல் காப்பாற்றும் வழி வகைகள் ஆகும்.

## கற்பவை கற்றபின்

**ஐம்பெருங்காப்பியங்கள், ஐஞ்சிறுகாப்பியங்கள் ஆகியவற்றின் பெயர்களைத் தொகுத்து எழுதுக.**

ஐம்பெருங்காப்பியங்கள் :

1. சீவக சிந்தாமணி 2. சிலப்பதிகாரம் 3. மணிமேகலை 4. வளையாபதி 5. குண்டலகேசி

ஐஞ்சிறுகாப்பியங்கள் :

1. உதயணகுமாரகாவியம் 2. நாககுமார காவியம் 3. யசோதர காவியம் 4. சூளாமணி 5. நீலகேசி

## வருமுன் காப்போம் (கவிதைப் பேழை)

## மதிப்பீடு :

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. வையம் 2. நலம் + எல்லாம் 3. இடமெங்கும்

**வருமுன் காப்போம் - இப்பாடலில் இடம் பெற்ற எதுகைச்சொற்களையும், மோனைச்சொற்களையும் எழுதுக**

1. எதுகைச் சொற்கள் :

| | | | |
|---|---|---|---|
| உடலில் | சுத்தமுள்ள | கூழை | மட்டுக்குணவை |
| இடமும், | நித்தம், | ஏழை, | திட்டுமுட்டுப் |

2. மோனைச் சொற்கள் :

| | | | |
|---|---|---|---|
| உடலில் | சுத்தமுள்ள | காலை | திட்டுமுட்டு |
| உலகில், | சுகமும், | காற்று, | தினமும் |

**குறுவினாக்கள்**

**1. நம்மை நோய் அணுகாமல் காப்பவை யாவை?**

- சுத்தமான காற்று
- நல்ல குடிநீர்
- பசித்த பிறகு உணவு உண்பது

இவை நம்மை நூறு வயது வரை நோயில்லாமல் வாழ வைக்கும்.

**2. அதிகமாக உண்பதால் ஏற்படும் தீமையாகக் கவிமணி குறிப்பிடுவன யாவை?**

அளவாய் உணவு உண்ணாமல் அதிகமாக உண்பது உடலில் செரிமானக்கோளாறை ஏற்படுத்தி நோயில் தள்ளிவிடும்.

**சிறுவினா.**

**1. உடல் நலத்துடன் வாழ கவிமணி கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.**

நோய் வந்தபின் தீர்க்க முயல்வதைக் காட்டிலும் “வருமுன் காப்பது” நோயில் இருந்து காப்பாற்றும் சிறந்த வழி என்கிறார் கவிமணி. அவை

- உடலில் உறுதி இல்லாத நோயாளியிடம் உள்ள செல்வமும் இடமும் இனிய வாழ்வைத் தராது.
- தூய்மையுள்ள இடம் நீண்ட வாழ்வுக்கு வழி ஆகும்.
- காலை, மாலை நடைப்பயிற்சியுடன் சுத்தமான காற்றும் எமனை நெருங்கவிடாது.
- கூழைக் குடித்தாலும் குளித்து குடிப்பதும், ஏழையானாலும் இரவு உறக்கமும் கட்டாயம் வேண்டும்.
- அளவான உணவு இல்லாமை செரிமானகோளாறைக் கொண்டு வந்து, பாயில் படுக்க வைக்கும்.
- சுத்தமான காற்று, நல்ல குடிநீர், பசித்தபின் உணவு, நூறு வயதைத் தரும். நம் உடலும் உள்ளமும் நலமுடன் இருக்க இதுவே வழியாகும்.

**சிந்தனைவினா.**

**1. நோய் வராமல் தடுக்கும் வழிமுறைகளாக நீங்கள் கருதுவன யாவை?**

- இயற்கையோடு இயைந்த வாழ்வு நோயைத் தடுக்கும் சிறந்த முறைகளில் முக்கியமானது.
- பசி இல்லாதபோது சாப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும். செயற்கை குளிர்பானங்கள், துரித உணவுகளை தவிர்க்க வேண்டும்.
- கை, கால்களை நன்கு கழுவிய பின் உண்ணுதல், உணவை நன்கு பற்களால் அரைத்து உண்ணுதல் வேண்டும்.
- அதிக நேரம் தொலைக்காட்சி பார்ப்பது, கைபேசியில் காணொளிப் பார்த்துக்கொண்டு உண்பது போன்றவை மிகவும் தவறானது.
- உடற்பயிற்சி, நடைப்பயிற்சி, சுவாசப்பயிற்சி போன்றவைகளை நாள்தோறும் கடைப்பிடிக்க வேண்டும்.
- உடல்கழிவுகளை நாள்தோறும் வெளியேற்றி சரியான அளவில் நீர் அருந்தி, பசித்தபின் உணவு உண்டு சுகாதாரமான வாழ்வை வாழ வேண்டும்.

## கற்பவை கற்றபின்

1. **தன்சுத்தம் - குறித்தப் படங்களை உருவாக்குக.**

மாணவர்கள் தாமாகவே முன் வந்து தன்சுத்தம் பற்றிய படங்களை ஒட்ட வேண்டும்.

2. **சுகாதாரம் பற்றிய பழமொழிகளை எழுதுக.**

❖ சுத்தம் சோறு போடும் ❖ நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் ❖ கூழானாலும் குளித்துக்குடி.

❖ உள்ளும் வெளியும் தூய்மை காப்போம் ❖ வீட்டின் சுத்தமே; நாட்டின் சுத்தம்

❖ வரு முன் காப்பதே நலம்.

## தமிழர் மருத்துவம் ( உரைநடை உலகம் )

### மதிப்பீடு :

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. தாவரங்களை 2. உணவின் 3. இரத்தக்கொதிப்பு 4. நல்வாழ்வுக்காக

**குறுவினாக்கள்**

1. **மருத்துவம் எப்போது தொடங்கியது?**

ஆதிகாலத்தில் மனிதனுக்கு நோய் வந்த பொழுது இயற்கையாக வளர்ந்த தாவரங்கள், அருகில் கிடைத்தப் பொருட்களைக் கொண்டு தீர்க்க முயற்சி செய்ய தொடங்கிய பொழுது மருத்துவம் தொடங்கியது.

2. **நல்வாழ்விற்கு நாம் நாள்தோறும் செய்ய வேண்டியவை யாவை?**

❖ காலை, மாலை நடைப்பயிற்சி ❖ யோகா, தியானம், மூச்சுப்பயிற்சி செய்தல்

❖ மூன்று லிட்டர் தண்ணீர் அருந்துவது ❖ உணவை நன்றாக மென்று விழுங்குதல்

3. **தமிழர் மருத்துவத்தில் மருந்துகளாகப் பயன்படுவன யாவை?**

❖ மூலிகை ❖ தாவரஇலை ❖ தாவரவேர் ❖ உலோகங்கள் ❖ தாதுப்பொருட்கள்

**சிறுவினாக்கள்.**

1. **நோய்கள் பெருகக் காரணம் என்ன?**

மனிதன் இயற்கையை விட்டு விலகி வந்ததுதான் நோய்கள் பெருக முதன்மையான காரணமாகும்.

மாறிப்போன உணவு, மாசு நிறைந்த சுற்றுப்புறச்சூழல், மனஅழுத்தம் இவை மூன்றும் நோய் பெருக முக்கிய காரணமாகும்.

நிலத்தை உரங்களாலும், பூச்சிக்கொல்லி மருந்துகளாலும் நச்சுப்படுத்துவது நோய் பெருக மற்றொரு காரணமாகும்.

துரிதஉணவு, மாறிப்போன உணவு பழக்கம், இரவு தூக்கமின்மை போன்றவை நோய்கள் பெருகக் காரணமாக அமைகிறது.

2. **பள்ளிக் குழந்தைகளுக்கு மருத்துவர் கூறும் அறிவுரைகள் யாவை?**

❖ சரியான தூக்கம், சரியான உடற்பயிற்சி, சரியான உணவு ஆகிய மூன்றும் நலமாக வாழ வைக்கும்.

❖ விலை உயர்ந்த உணவும், கண்ணைக் கவரும் வண்ணம் நிறைந்த உணவும் சிறந்தது என்ற எண்ணத்தை மாற்ற வேண்டும்.

❖ கீரைகள், பழங்கள், சிறுதானியங்கள், காய்கறிகள் நாள்தோறும் உணவில் கண்டிப்பாக இடம் பெற வேண்டும்.

❖ கணினியிலும், கைப்பேசியிலும் அதிகநேரம் செலவு செய்வதை தவிர்க்க வேண்டும்.

❖ அதிகாலை எழுவதும், இரவில் சரியான நேரத்தில் உறங்குவதும் மிகவும் முக்கியமான ஒன்றாகும்.

**நெடுவினா**

1. **தமிழர் மருத்துவத்தின் சிறப்புகளாக மருத்துவர் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.**

தமிழர் மருத்துவம் : தமிழர் மருத்துவம் என்பது நாட்டு வைத்தியமாகவும், மரபு சார்ந்த சித்த வைத்தியமாகவும், உணவு சார்ந்த மருத்துவமாகவும் விரிந்திருக்கிறது.

உணவே மருந்து மருந்தே உணவு என்று உயர்வாக விளங்குவது தமிழர் மருத்துவமுறை ஆகும்.

தமிழர்மருத்துவத்தின் சிறப்புகள்:

- ❖ தமிழர்மருத்துவம் தொடாத அறிவியலே இல்லை. பண்டைய தமிழ் மருத்துவர்கள் அறுவைச்சிகிச்சை, உறுப்புமாற்று, பிளாஸ்டிக் சர்ஜரி போன்றவற்றில் சிறப்புடன் விளங்கினர்.
- ❖ தமிழர்மருத்துவத்தில் பக்க விளைவுகள் இல்லை. மருந்து என்பது உணவின் நீட்சியாக இருக்கிறது.

தமிழ்மருத்துவத்தின் பிரிவுகள்:

தமிழர்மருத்துவத்தை நான்கு முக்கியப் பிரிவுகளாக வகுத்தனர்.

- ❖ உடல் நலம் பாதுகாத்தல்:

  நோய்க்கான சிகிச்சை மற்றும் நோய் மீண்டும் வராமலிருப்பதற்கான வழிவகை சொல்லுதல்.
- ❖ நோய் தடுப்பு : நோய் வருமுன் காக்கும் வழிவகைகளைச் சொல்லுதல்.
- ❖ நோய் குணப்படுத்தல்: தனித்துவமான பார்வை சூழலுக்கு இசைந்த மருத்துவம்.
- ❖ உடல் நலம் தேறுதல்: உடல்நலத்திற்கு பொருந்திய உணவு எது, பொருந்தாத உணவு எது என ஆய்ந்து உணவுமுறையை வகுத்துக்கொள்ள வேண்டும்.

**சிந்தனைவினா**

**1. நோயின்றி வாழ நாம் என்னென்ன வழிகளைக் கையாளலாம்?**

- ❖ அதிகாலையில் எழுவது மிகச் சிறந்த பழக்கம்.
- ❖ காலை, மாலை உடற்பயிற்சி, நடைப்பயிற்சி, யோகா, தியானம் செய்வது உடல் ஆரோக்கியம் சிறக்க வழி வகுக்கும்.
- ❖ பசித்தப்பின் உணவு உண்பது, உணவை நன்றாகப் பற்களால் அரைத்து உண்பது அவசியம்.
- ❖ தினமும் மூன்று லிட்டர் தண்ணீர் அருந்த வேண்டும்.
- ❖ உடல் தூய்மை, சுற்றுப்புறத்தூய்மை பாதுகாக்க வேண்டும்.
- ❖ கீரைகள், பழங்கள், காய்கறிகள் போன்ற இயற்கை உணவு நோயின்றி வாழ அவசியம்.
- ❖ இரவு நேர சரியான உறக்கம் மிக மிக அவசியமாகும்.

## கற்பவை கற்றபின்

**1. நீங்கள் மருத்துவரிடம் கேட்க விரும்பும் ஐந்து வினாக்களை எழுதுக.**

- ❖ பக்க விளைவு தாரத மருத்துவம் எது?
- ❖ உடல் எடையை சரியாக பராமரிக்க என்ன செய்ய வேண்டும்?
- ❖ நான் ஆரோக்கியமாக இருப்பதை எப்படி தெரிந்து கொள்வது?
- ❖ காய்ச்சல், சளி என்பது நோயா?
- ❖ நோய்கள் வருவதற்கான காரணம் என்ன?

**2. உங்கள் பகுதியில் கிடைக்கும் மூலிகைகளின் மாதிரிகளைத் திரட்டி அவற்றின் பயன்களை எழுதிக் காட்சிப்படுத்துக.**

மாணவர்கள் தாமாகவே முன் வந்து மூலிகைகளின் மாதிரிகளைத் திரட்டி அவற்றின் பயன்களை எழுதி வர வேண்டும்.

## தலைக்குள் ஓர் உலகம் (விரிவானம்)

## மதிப்பீடு

**மூளையின் வலது, இடது பாகங்களின் செயல்பாடுகள் பற்றித் தொகுத்து எழுதுக.**

மூளை :

நமது உடல் உறுப்புகளில் மிகவும் மர்மமானது மூளை. மூளை முதுகுத்தண்டிலிருந்து முளைக்கிறது. அவை உள்மூளை, நடுமூளை, பின்மூளை என அழைக்கப்படுகிறது. மூளைத்தண்டிற்குப் பின் பகுதியில் உள்ள பகுதி சிறுமூளை என்று அறியப்படுகிறது.

மூளையின் வலது, இடது பாகங்கள் :

மூளைக்கு செல்லும் நரம்புகளில் இடவலமாற்றம் நிகழ்கிறது. வலப்பக்கச்செய்திகள் மூளையின் இடப்பகுதிக்கும், இடப்பக்கச்செய்திகள் மூளையின் வலப்பக்கப்பகுதிக்கும் செல்கின்றன. மூளையின் இடது பகுதி பேச, எழுத கணக்கிட தர்க்கரீதியில் சிந்திக்க உதவுகிறது. மேலும் அறிவாற்றல் பிரச்சனைகளை அலசுதல், சதுரங்கம் போன்ற விளையாட்டுகளில் சிறந்து விளங்குவது. மூளையின் வலப்பகுதி வடிவங்களை உணர்வது, கவிதை எழுதுவது, படம் போடுவது, நடிப்பது, நடனம் ஆடுவது போன்றவைகளை எல்லாம் கட்டுப்படுத்துகிறது.

மூளையின் வலப்பகுதி ஆக்கிரமிப்பு அதிகமாக இருப்பவர்கள் நடிகர்கள், பாடகர்கள், நடனக்கலைஞர்கள், இசைக்கருவிகளை மீட்டுபவர்களாக இருப்பவர்கள், மூளையின் இடப்பகுதி ஆக்கிரமிப்பு அதிகமாக இருப்பவர்கள் கணக்கு ஆசிரியர், பட்டயக்கணக்கர், இந்திய ஆட்சிப்பணிக்குப் படித்தவர்களாக இருப்பார்கள்.

## கற்பவை கற்றபின்

**மூளையின் செயல்கள் குறித்துப் பிற நூல்களிலிருந்து தகவல்களைத் திரட்டி எழுதுக.**

- ❖ மூளை நம்மைச்சுற்றி நிகழும் நிகழ்வுகளை சேமிக்கும் தலம் ஆகும். நமது கண், காது, மூக்கு, நாக்கு மற்றும் தோல் ஆகியவை புறத்தில் இருந்து தகவல்களை சேமித்து மூளைக்கு அனுப்புகிறது.
- ❖ மூளையில் நீண்ட கால நினைவாற்றலில் சேமித்து வைக்க விரும்பும் தகவல்கள் மின் தகவல்களாய் மூளையின் ஹிப்போகேம்பஸ் என்ற இடத்தில் சேமிக்கப்படுகின்றன.
- ❖ மூச்சுவிடுதல், செரிமானம், இதயத்துடிப்பு, கொட்டாவி போன்ற செயல்பாடுகளையும், விழிப்புணர்வுடன் நிகழும் சிந்தனை போன்ற செயற்பாடுகளையும் கட்டுப்படுத்துகிறது.

## எச்சம் ( கற்கண்டு )

## மதிப்பீடு :

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. எச்சம் 2. பார்த்த 3. காலத்தை

**பொருத்துக.**

1. நடந்து - வினையெச்சம் 2. பேசிய - பெயரெச்சம்

3. எடுத்தனன் உண்டான் - முற்றெச்சம் 4. பெரிய - குறிப்புப்பெயரெச்சம்

**கீழ்க்காணும் சொற்களைப் பெயரெச்சம், வினையெச்சம் என வகைப்படுத்துக.**

1. பெயரெச்சம் : நல்ல, எறிந்த, வீழ்ந்த, மாட்டிய

2. வினையெச்சம் : படுத்து, பாய்ந்து, கடந்து, பிடித்து, அழைத்து, பார்த்து

**குறுவினாக்கள்**

**1. எச்சம் என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?**

- ❖ பொருள் முற்றுப்பெறாமல் எஞ்சி நிற்கும் சொல் எச்சம் எனப்படும்.
- ❖ எச்சம் பெயரெச்சம், வினையெச்சம் என்று இரண்டு வகைப்படும்.

**2. அழகிய மரம் - எச்ச வகையை விளக்குக.**

அழகிய மரம் - இத்தொடரில் ‘அழகிய’ என்னும் சொல்லின் செயலோ, காலமோ வெளிப்படையாக தெரியவில்லை. பண்பை மட்டும் குறிப்பாகக் காட்டுகிறது.

இவ்வாறு பண்பினை மட்டும் குறிப்பாகக் காட்டும் பெயரெச்சம் குறிப்புப் பெயரெச்சம் எனப்படும்.

**3. முற்றெச்சத்தைச் சான்றுடன் விளக்குக.**

ஒரு வினைமுற்று எச்சப்பொருள் தந்து மற்றொரு வினைமுற்றைக் கொண்டு முடிவது முற்றெச்சம் ஆகும். சான்று : வள்ளி படித்தனள், மகிழ்ந்தாள், படித்தனள் என்பதற்கு படித்து என்பது பொருள். இது வினையெச்சப்பொருளை தந்து வினைமுற்றைக் கொண்டு முடிகிறது.

**4. வினையெச்சத்தின் வகைகளை விளக்குக.**

❖ வினையெச்சம் இரண்டு வகைப்படும்.

அவை ❖தெரிநிலை வினையெச்சம் ❖குறிப்பு வினையெச்சம் ஆகும்.

❖ செயலையும், காலத்தையும் வெளிப்படையாகக் காட்டுவது தெரிநிலை வினையெச்சம்.

சான்று : எழுதி வந்தான்.

❖ காலத்தை வெளிப்படையாகக் காட்டாமல் பண்பினை மட்டும் குறிப்பாக உணர்த்துவது குறிப்பு வினையெச்சம். சான்று : மெல்ல வந்தான்.

**பின்வரும் பத்தியைப் படித்து அதிலுள்ள பெயரெச்சம், வினையெச்சம், வினைமுற்றுகளைக் கண்டறிக.**

பெயரெச்சம் : பிடித்த, நீந்திய, யோசித்த

வினையெச்சம் : பிடித்து, பிடிக்க, தீர்க்க, எடுத்து, விரும்பி

வினைமுற்று : வந்தனர், யோசித்தனர், செய்தனர், பிடித்தனர்

இயல் - 4

## கல்வி அழகே அழகு ( கவிதைப் பேழை )

## மதிப்பீடு :

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. கல்வி 2. கலன் + அல்லால்

**சொற்றொடரில் அமைத்து எழுதுக.**

1. கல்வியே உண்மையான அழகு. 2. கல்வி கற்றவரே உலகில் உயர்ந்தவர்

3. மனிதனுக்கு உண்மையான அணிகலன் கல்வி ஆகும்.

**குறுவினாக்கள்.**

**1. யாருக்கு அழகு செய்ய வேறு அணிகலன்கள் தேவையில்லை?**

கல்வி கற்றவருக்கு அழகு செய்ய வேறு அணிகலன்கள் தேவையில்லை.

**2. நீதிநெறி விளக்கப்பாடல் கூறும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.**

நீதிநெறி விளக்கம் : மக்களின் வாழ்வுக்குத் தேவையான நீதிகளைச் சுட்டிக்காட்டுவது நீதிநெறி விளக்கம். இந்நூலின் ஆசிரியர் குமரகுருபரர்.

நீதிநெறி விளக்கம் கூறும் கருத்துகள் :

❖ ஒளி வீசும் அணிகலன்களை அழகுபடுத்த வேறு அணிகலன்கள் தேவையில்லை.

❖ கல்வி கற்றவர் ஒளி வீசும் அணிகலன் போன்றவர் அவருக்கு கல்வியே அழகு தரும். அவருக்கு அழகுபடுத்த வேறு அணிகலன்கள் தேவையில்லை.

**சிந்தனைவினா.**

**கல்வியின் பயன்களாக நீங்கள் கூறுவனவற்றை எழுதுக.**

❖ சிந்திக்கும் திறனை வளர்க்கிறது.

❖ நல்ல பணி கிடைத்து வாழ்வில் உயர முடியும்.

❖ அறியாமையை அகற்றி அறிவை விரிவுபடுத்தும்.

❖அறம், பொருள், இன்பம், வீடுபேறு என்ற நால்வகைப்பயனையும் தருகிறது.

❖ கற்றவருக்கு அழியாத செல்வமாய் விளங்குகிறது.

❖ கல்வி ஒழுக்கப்பண்பினை வளர்க்கிறது.

## கற்பவை கற்ற பின்

**1. கல்வி குறித்து வழங்கப்படும் பழமொழிகளைத் தொகுத்து எழுதுக.**

1. கல்வி கரையில, கற்பவர் நாள் சில. 2. இளமையில் கல். 3. கல்லாதவரே கண் இல்லாதவர்.

4. கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு. 5. கற்கையில் கல்வி கசப்பு, கற்றபின் அதுவே இனிப்பு.

6. நூல் பல கல். 7. கற்க கசடற.

**2. கற்றோரின் சிறப்புகளைப் பற்றிப் பிற நூல்களில் இடம் பெற்ற பாடல்களைத் தொகுத்து எழுதுக.**

1. கண்ணுடையோர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
   புண்ணுடையார் கல்லா தவர் - திருக்குறள்
2. நிறைகுடம் நீர் தளும்பல் இல் - பழமொழி
3. கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு - மூதுரை

**புத்தியைத் தீட்டு** ( கவிதைப் பேழை )

**மதிப்பீடு :**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. அகம்பாவம் 2. கோயில் + அப்பா 3. பகைவனென்றாலும்

**குறுவினா.**

**1. யாருடைய உள்ளம் மாணிக்கக் கோயில் போன்றது?**

மன்னிக்கத் தெரிந்த மனிதரின் உள்ளம் மாணிக்கக்கோயில் போன்றதாகும்.

**2. பகைவர்களிடம் நாம் நடந்துகொள்ள வேண்டிய முறை யாது?**

நம்மை அழிக்க வரும் பகைவர் என்றாலும் அவர்களிடம் நாம் அன்பு காட்ட வேண்டும்.

**சிறுவினா.**

**1. புத்தியைத் தீட்டி வாழ வேண்டிய முறைகளாகக் கவிஞர் கூறுவன யாவை?**

❖ கண்ணியம் தவறாமல் எடுத்த செயலில் திறமையைக் காட்ட வேண்டும்.
❖ சினம் கண்ணை மறைக்கும் பொழுது அறிவுக்கு வேலை கொடுக்க வேண்டும்.
❖ பகைவனுக்கும் அன்புப்பாதை விட வேண்டும்.
❖ தவறு செய்தவர்களை மன்னிக்கப் பழக வேண்டும்.
❖ செருக்கின்றி வாழப் பழக வேண்டும்.

**சிந்தனைவினா.**

**உங்கள் மீது பிறர் வெறுப்புக் காட்டினால் அவர்களை எவ்வாறு எதிர்கொள்வீர்கள்?**

❖ என் மீது பிறர் வெறுப்புக் காட்டினால் சினம் கொள்ளமாட்டேன். அவர்களை மன்னித்து விடுவேன். தவறை எடுத்துக்கூறி திருத்த முயற்சி செய்வேன். அன்பால் நல்வழிப் படுத்துவேன்.

**பல்துறைக்கல்வி** ( உரைநடை உலகம் )

**மதிப்பீடு :**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.:** 1. கல்வி 2. இளமை 3. தொழிலில்

**நிரப்புக.:** 1. வளர்ச்சி 2. அறிவியல் 3. காவிய

**பொருத்துக.**

1. இயற்கை ஓவியம் - பத்துப்பாட்டு
2. இயற்கை தவம் - சிந்தாமணி
3. இயற்கைப் பரிணாமம் - கம்பராமாயணம்
4. இயற்கை அன்பு - பெரியபுராணம்

**குறுவினா.**

**1. இன்றைய கல்வியின் நிலை பற்றித் திரு.வி.க. கூறுவன யாவை?**

❖ ஏட்டுக்கல்வி மட்டும் கல்வி என்ற கொள்கை நிலவி வருகிறது.
❖ பாடங்களை நெட்டுருச்செய்து பட்டம் பெற்று தொழிலில் நுழைய கல்வி ஒரு கருவியாய் செயல்பட்டு வருகிறது.

**2. தாய்நாடு என்னும் பெயர் எவ்வாறு பிறக்கிறது?**

தாய்மொழியைக் கொண்டே தாய்நாடு என்னும் பெயர் பிறக்கிறது. அதுவே இயற்கை முறையாகும்.

**3. திரு.வி.க. சங்கப்புலவர்களாகக் குறிப்பிடுபவர்களின் பெயர்களை எழுதுக.**

திருத்தக்கத்தேவர், திருஞானசம்பந்தர், ஆண்டாள், சேக்கிழார், கம்பர், பரஞ்சோதி, இளங்கோவடிகள் ஆகியோர்.

**சிறுவினாக்கள்.**

**1. தமிழ்வழிக்கல்வி பற்றித் திரு.வி.க. கூறுவனவற்றை எழுதுக.**

- தாம் கண்ட புதுமைகளை அவரவர் தம் தாய்மொழியில் எழுதுகின்றனர். அவை பின்னர் பல மொழிகளில் மொழிபெயர்த்து எழுதப்படுகின்றன. அம்மொழிபெயர்ப்பு முறையை தாய்மொழியை வளர்க்க தமிழர் பின்பற்றலாம்.
- தமிழ்மொழியில் அறிவுக்கலைகள் இல்லை என்னும் பழமையைப் புறந்தள்ளி அக்கலையை தமிழ்மொழியில் மொழிபெயர்த்து எழுதி தாய்மொழிக்கு ஆக்கந்தேடுவோம்.
- உலகக்கலைகள் யாவும் தாய்மொழி வழி மாணவர்களுக்கு அறிவுறுத்தும் காலமே தமிழ்த்தாய் மீண்டும் அரியாசனம் ஏறும் காலம் ஆகும்.

**2. அறிவியல் கல்வி பற்றித் திரு.வி.க. கூறுவன யாவை?**

நடைமுறை வாழ்வில் அறிவியல் எல்லா இடங்களிலும் பரவிக் காணப்படுகிறது.

தகவல்தொடர்பு, போக்குவரத்து, வானிலை, தொழில்நுட்பஅபிவிருத்தி, உயிர்அறிவியல், புதிய தடுப்பு மருந்து, அணு அறிவியல் போன்ற அனைத்துத்துறைகளும் அறிவியலை மையமாகக் கொண்டது.

உலக வாழ்விற்கு மிக மிக இன்றியமையாதது அறிவியல் என்னும் அறிவுக்கலை. புற உலக ஆராய்ச்சிக்கு அறிவியல் கொழுகொம்பு போன்றது. ஆதலால் அறிவியல் என்னும் அறிவுக்கலை இளைஞருலகில் பரவ வேண்டும்.

**நெடுவினா.**

**1. காப்பியக்கல்வி குறித்துத் திரு.வி.க. கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.**

காப்பியம் ஆங்கிலத்தில் **EPIC** எனப்படுகிறது. இச்சொல் **EPOS** என்ற கிரேக்கச்சொல்லின் அடிப்படையில் உருவானது. இதற்கு சொல் (அல்லது) பாடல் என்பது பொருள். இது வடமொழியில் காவியம் என்றும் தமிழில் காப்பியம் என்றும் அழைக்கப்படுகிறது.

தன்னிகரில்லாத்தலைவனின் உயரிய பண்புகள், பண்டையகால மக்களின் வாழ்வு, சமயம், அரசியல், பண்பாட்டு நெறிமுறைகள் முதலியவற்றைக் காப்பியங்கள் வாயிலாக அறிந்து கொள்ளலாம்.

இயற்கை ஓவியம் - பத்துப்பாட்டு, இயற்கை இன்பக்கலம் - கலித்தொகை, இயற்கை வாழ்வில்லம் - திருக்குறள், இயற்கை இன்பவாழ்வு நிலையங்கள் - சிலப்பதிகாரமும், மணிமேகலையும், இயற்கைத்தவம் - சிந்தாமணி, இயற்கைப் பரிணாமம் - கம்பராமாயணம், இயற்கை அன்பு - பெரியபுராணம், இயற்கை இறையுறையுள் – தேவாரம், திருவாசகம்.

இத்தமிழ்க் கருவூலங்களை உண்ண உண்ண உள்ளத்தெழும் இன்பங்களைச் சொல்ல இயலாது. தமிழ் இன்பத்திலும் சிறந்த இன்பம் இப்பூவுலகில் உண்டோ? தமிழ் காப்பியங்களைப் படியுங்கள். பேரின்பம் கொள்ளுங்கள்.

**சிந்தனைவினா.**

**1. திரு.வி.க. குறிப்பிடும் பல்துறைக் கல்வியில் நீங்கள் எதனைக் கற்க விரும்புகிறீர்கள்?**

திரு.வி.க. குறிப்பிடும் பல்துறைக்கல்வியில் நான் இசைக்கல்வியைக் கற்க விரும்புகிறேன். இயற்கையாகவே இனிய குரல்வளம் கொண்ட எனக்கு இசைத்துறையின் மீது அதிக ஆர்வம் உண்டு.

இசைக்கல்லூரியில் சேர்ந்து இசைக்கல்வி பயின்று சிறந்த இசைக்கலைஞராய் வர விரும்புகிறேன். இசையால் மட்டுமே நாமும் மகிழ்ந்து பிறரையும் மகிழ்விக்க முடிகிறது. நோய்களை போக்கும் மருந்தாய் இசை விளங்குவதால் இசைக்கல்வியை பயில விரும்புகிறேன்.

## கற்பவை கற்றபின்

**1. பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு நூல்களைத் தொகுத்து எழுதுக.**

பத்துப்பாட்டு : 1. திருமுருகாற்றுப்படை 2. சிறுபாணாற்றுப்படை 3. பொருநராற்றுப்படை 4. முல்லைப்பாட்டு, 5. பெரும்பாணாற்றுப்படை 6. மதுரைக்காஞ்சி 7. நெடுநல்வாடை 8. குறிஞ்சிப்பாட்டு 9. பட்டினப்பாலை, 10. மலைபடுகடாம்.

எட்டுத்தொகை : 1. நற்றிணை 2. குறுந்தொகை 3. ஐங்குறுநூறு 4. பதிற்றுப்பத்து 5. பரிபாடல் 6. கலித்தொகை, 7. அகநானூறு 8. புறநானூறு.

பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் : 1. நாலடியார் 2. நான்மணிக்கடிகை 3. இன்னாநாற்பது 4. இனியவை நாற்பது 5. களவழி நாற்பது 6. கார் நாற்பது 7. ஐந்திணை ஐம்பது 8. திணைமொழி ஐம்பது 9. ஐந்திணை எழுபது 10. திணைமாலை நூற்றைம்பது 11. திருக்குறள் 12. திரிகடுகம் 13. ஆசாரக்கோவை 14. பழமொழி நானூறு 15. சிறுபஞ்சமூலம் 16. முதுமொழிக்காஞ்சி 17. ஏலாதி 18. கைந்நிலை.

## **ஆன்றகுடிப்பிறத்தல்** ( விரிவானம் )

## மதிப்பீடு

**நெடுவினா.**

**திருக்குறளின் கருத்தைப் பின்பற்றி நடந்த சகாதேவன் கதையைச் சுருக்கி எழுதுக.**

ஒரு சிற்றூரில் ஓர் எளிய குடிசை வீட்டில் தலைமைஆசிரியர் தம் மனைவியோடு வசித்து வந்தார். ஒரு நாள் ஆசிரியர் தமது எட்டு முழ வேட்டியைத் துவைத்து கொடிக்கயிற்றில் காயப்போட்டு விட்டுப் பள்ளிக்குப் புறப்பட்டார். பிறகு வந்து பார்த்தபோது வேட்டியைக் காணவில்லை. அச்செய்தி ஊருக்குள் பரவ பெரும்பாலோர் சிகாமணி தான் எடுத்திருப்பான் என்றனர்.

சிகாமணியின் மகன் சகாதேவன் தலைமையாசிரியரிடம் நான்காம் வகுப்புப் பயில்கிற மாணவன். பள்ளியில் பண்புடைமை அதிகாரத்திலிருந்து “அன்புடைமை – ஆன்ற குடிப்பிறத்தல்” எனத் தொடங்கும் திருக்குறளை நடத்தும் போது அவருக்கு அந்தப் பொறி தட்டியது.

அன்புடையவர்களாயிருப்பதும், சிறந்த குடியில் பிறப்பதும் பண்புடைமை என்று குறிப்பிட்டதில் சிறந்த குடியில் பிறப்பது அவரவர் கையிலா இருக்கிறது? நற்பண்பு இல்லாத பெற்றோருக்குப் பிறந்த ஒருவர் நற்பண்புடையவராய் ஆக மாட்டாரா? என்று எண்ணிய அவர் அப்பன் திருடனாயிருந்தால் மகன் திருடாதவன் என்னும் ஒரு புதிய குடியை மகன் உருவாக்க வேண்டும். ஒரு புதிய தலைமுறை அவனிலிருந்து தொடங்குவதும் பண்புடைமை என்று சொல்லப்படும் என்றார்.

அன்று மதியமே வீட்டிற்கு சென்ற தலைமையாசிரியரிடம், சகாதேவன் கொடுத்ததாய் வில்லவன் கோதை வாத்தியார் வேட்டியைக் கொடுத்தான். தலைமையாசிரியர் மகிழ்ச்சி அடைந்ததோடு உண்மையின் நாற்றை நடப்பட்ட உற்சாகம் அவருக்குப் பிறந்தது. ஆனால் சற்று நேரத்தில் ஊர் மக்கள் சிகாமணிக்கு அபாரதம் போட வேண்டும் என்றனர். ஆனால் ஆசிரியர் சகாதேவன் மனமாற்றமே முக்கியம் என்று ஊர்மக்களிடம் எடுத்துக்கூறி தம் கருத்திற்கு உடன்பட வைத்தார். சகாதேவனிடம் நல்ல மனமாற்றத்தையும் எதிர்பார்த்தார்.

## **வேற்றுமை** ( கற்கண்டு )

## மதிப்பீடு :

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. வேற்றுமை 2. விளி 3. மூன்றாம் 4. மூன்றாம் 5. ஆக்கல்

**கோடிட்ட இடத்தில் பொருத்தமான உருபேற்ற சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. பாடத்தை 2. உழைப்பால் 3. வளர்ச்சிக்கு

**பொருத்துக.**

1. மூன்றாம் வேற்றுமை - மண்ணால் குதிரை செய்தான்.
2. நான்காம் வேற்றுமை - இராமனுக்குத் தம்பி இலக்குவன்.
3. ஐந்தாம் வேற்றுமை - ஏவுதல் கலையில் சிறந்தவன் ஏகலைவன்.
4. ஆறாம் வேற்றுமை - பாரியினது தேர்
5. ஏழாம் வேற்றுமை - முரளி வள்ளியை தோட்டத்தில் பார்த்தான்.

**சிறுவினா.**

**1. எழுவாய் வேற்றுமையை விளக்குக.**

முதல் வேற்றுமைக்கு உருபு இல்லை. முதல் வேற்றுமை எழுவாய் வேற்றுமை என்றும் அழைக்கப்படும். இவ்வாறு எழுவாயுடன் வேற்றுமை உருபுகள் சேராமல் தனித்து நின்று பொருளைத் தருவது எழுவாய் வேற்றுமை. சான்று: கண்ணன் வந்தான். சீதை பாடினாள்.

**2. நான்காம் வேற்றுமை உணர்த்தும் பொருட்கள் யாவை?**

நான்காம் வேற்றுமையினது உருபு 'கு' ஒன்றே ஆகும். நான்காம் வேற்றுமை கொடை, பகை, நேர்ச்சி (நட்பு), தகுதி, அதுவாதல், பொருட்டுமுறை, எல்லை எனப் பல பொருள்களில் வரும்.

சான்று: கலைவாணி கல்லூரிக்குச் சென்றாள். முதல்வர் கவிஞருக்குப் பரிசளித்தார்.

**3. உடனிகழ்ச்சிபொருள் என்றால் என்ன?**

- ❖ ஒரு பொருளின் தொழிலோடு, மற்றொன்றின் தொழில் சேர்ந்து நிகழ்வது உடனிகழ்ச்சி ஆகும்.
- ❖ ஒடு, ஓடு ஆகிய மூன்றாம் வேற்றுமை உருபுகள் உடனிகழ்ச்சிப்பொருளில் வரும்.

சான்று: தாயோடு குழந்தை சென்றது.

## கற்பவை கற்றபின்

**இன்றைய கல்வி குறிப்பிட்ட பாடங்களை மனப்பாடம் செய்து, அரசுத்தேர்வில் தேறிப்பட்டம் பெற்று ஒரு தொழிலில் நுழைவதற்குக் கல்வி ஒரு கருவியாகக் கொள்ளப்பட்டு வருகிறது - இதில் காணப்படும் வேற்றுமை உருபுகளைக் கண்டறிந்து எழுதுக.**

- ❖ பாடங்களை - ஐ - இரண்டாம் வேற்றுமை உருபு
- ❖ தேர்வில் - இல் - ஏழாம் வேற்றுமை உருபு
- ❖ தொழிலில் - இல் - ஏழாம் வேற்றுமை உருபு
- ❖ நுழைவதற்கு - கு - நான்காம் வேற்றுமை உருபு

## மொழியை ஆள்வோம்

**கொடுக்கப்பட்டுள்ள கவிதையைப் படித்துணர்ந்து வினாக்களுக்கு விடையளி.**

விடைகள்:

1. சொந்தம் பந்தங்களிடம் இன்முகம் காட்ட வேண்டும்.
2. நிறைகளை மட்டும் சொல்லி பெருமையாக பேச வேண்டும்.
3. புதியவர்களிடம் புன்னகை செய்தால் புதிய உறவு பூக்கும்.
4. புன்னகையை வாரி வழங்கினால் வாழ்க்கை வசப்படும்.
5. உறவுகளைச் சேர்ப்பது உண்மையான மகிழ்ச்சி.
6. உறவுகள்

**அறிவைத் தீட்டி, சிந்தித்துக் கேட்கப்பட்டுள்ள வினாவிற்கு விடை தருக.**

முதுமை என்பது அனைவருக்கும் பொதுவானது. இன்றைய பிள்ளைகள் நாளைய வயதான பெற்றோர் என்ற உண்மையை மறக்கக்கூடாது.

இயல் - 5

## திருக்கேதாரம் ( கவிதைப் பேழை )

### மதிப்பீடு :

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. வேழங்கள் 2. கனகம்+ சுனை 3. முழவதிர

**குறுவினா**

**1. தமிழ் இசையோடு இணைந்து இசைக்கும் இசைக்கருவிகளாகச் சுந்தரர் கூறுவன யாவை?**

தமிழ் இசையோடு இணைந்து இசைக்கும் இசைக்கருவிகள் : புல்லாங்குழல், முழவு

**சிறுவினா**

**1. திருக்கேதாரத்தைச் சுந்தரர் எவ்வாறு வருணனை செய்கிறார்?**

பண்ணோடு சேர்ந்த தமிழ் பாடல்களைப் பாடும் போது அதற்கு ஏற்றவாறு முதிர்ந்த மூங்கில்களால் ஆன புல்லாங்குழலும், முழவும் இணைந்து ஒலிக்கும்.

பொன் வண்ண நீர் நிலைகள் வைரங்களைப் போன்ற நீர்த்திவலைகளை வாரி இறைக்கும். மதயானைகள் மணிகளை வாரி வாரி வீசும். இவற்றால் இடையறாது எழும் கிண் என்னும் ஒலியானது இசையாய் முழங்கும். இத்தகைய சிறப்புகள் உடைய நகரம் திருக்கேதாரம் ஆகும்.

**சிந்தனை வினா**

**விழாக்களின் போது இசைக்கருவிகளை இசைக்கும் வழக்கம் எவ்வாறு தோன்றியிருக்கும் என எழுதுக.**

இசைக்கு மயங்காத இதயம் எதுவும் இல்லை. இசை மொழிகளைக் கடந்தது. இறைவன் கூட இசை வடிவானவன் என்று கூறுவர். இறைவனை உணரவும் அடையவும் இசை மிகவும் துணை செய்கிறது.

மேலும் கோவில்நிகழ்ச்சிகளை மக்களுக்குத் தெரியப்படுத்த இசைக்கருவிகள் இசைக்கப்பட்டன.

கடவுளின் கைகளில் இசைக்கருவியை வழங்கி இசையின் முக்கியத்துவத்தை முன்னோர்கள் வெளிப்படுத்தியிருக்கின்றனர்.

**மனித மனம் கூடி வாழும் தன்மையுடையது. நாம் அன்றாடம் பலருடன் பழகக்கூடிய இன்றைய சூழலில் ஏற்படக்கூடிய சிறிய சிக்கல்களை எவ்வாறு எதிர்கொள்வீர்கள் ?**

| சிக்கல் | தீர்வு |
|---|---|
| பக்கத்து வீட்டுக்காரர், மிகச் சத்தமாகப் பாடல் கேட்டுக் கொண்டிருக்கின்றார். படிக்க முடியவில்லை. | ஐயா! தேர்வுக்குப் படிக்க வேண்டும். மெதுவாகப் பாடலைக் கேட்கிறீர்களா? நன்றி! |
| நீங்கள் மட்டைப்பந்து போட்டியைப் பார்க்க வேண்டும் என்று விரும்பும் நேரத்தில் உங்கள் தங்கை தொலைக்காட்சித் தொடர் ஒன்றைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். | தங்கையைப் பார்க்க விட்டு விளம்பர இடைவேளையிலும், தொடர் முடிந்த பின்பும் நான் மட்டைப்பந்து போட்டியைப் பார்ப்பேன். |
| உங்கள் அருகில் அமர்ந்திருக்கும் உங்கள் வகுப்புத் தோழர், உங்கள் மேசை மீது உணவினை இறைத்தபடி சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார். | உணவின் தேவை மற்றும் முக்கியத்துவத்தை எடுத்துக்கூறி சிதறாமல் உண்ணப் பழகுவேன். |
| நீங்கள் அடுத்தநாள் தேர்வுக்காகப் படித்துக் கொண்டிருக்கும் போது, உங்கள் வகுப்புத் தோழர், பாடத்தில் ஏற்பட்ட ஐயத்திற்காக உங்களுக்குத் தொலைபேசியில் அழைப்பு விடுக்கிறார். | பாடத்திற்கான ஐயத்தை விரைவாக விளக்கிவிட்டு எனது தேர்வுக்கான பயிற்சியை தொடர்ந்து செய்வேன். |

## பாடறிந்து ஒழுகுதல் (கவிதைப் பேழை)

## மதிப்பீடு :

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. அலர்ந்தவர்க்கு 2 . இகழ்வாரைப் 3. நிறை 4. பாடு + அறிந்து 5. முறையெனப்படுவது.

**குறுவினாக்கள்.**

**1. பண்பு, அன்பு ஆகியவை பற்றிக் கலித்தொகை கூறுவன யாவை?**

சான்றோர் காட்டிய வழியில் நடப்பது பண்பு ஆகும். உறவினரோடு வெறுப்பின்றி வாழ்வது அன்பு ஆகும்.

**2. முறை, பொறை என்பவற்றுக்குக் கலித்தொகை கூறும் விளக்கம் யாது?**

குற்றம் செய்தவருக்கு நீதியின் வழி தண்டனை வழங்குவது முறை ஆகும். தம்மை இகழ்வாரையும் பொறுத்துக் கொள்வது பொறை ஆகும்.

**சிறுவினா.**

**1. நமக்கு இருக்க வேண்டிய பண்பு நலன்களாக நல்லந்துவனார் கூறும் விளக்கங்களைத் தொகுத்தெழுதுக.**

❖ இல்வாழ்வு என்பது ஏழைகளுக்கு உதவுதல்.

❖ பாதுகாத்தல் என்பது சான்றோர் காட்டிய வழியில் நடத்தல்.

❖ அன்பு என்பது உறவினரோடு வெறுப்பின்றி வாழ்தல்.

❖ அறிவு என்பது அறிவற்றவர் கூறும் சொற்களைப் பொறுத்தல்.

❖ மறைபொருளைப் பிறர் அறியாமல் காத்தல் நிறை.

❖ குற்றம் செய்தவருக்கு உரிய தண்டனை வழங்குதல் முறை.

❖ பொறை என்பது தம்மை இகழ்வாரையும் பொறுத்துக் கொள்வது ஆகும்.

**சிந்தனை வினா.**

**1. வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய பண்பு நலன்களாய் நீங்கள் கருதுவன யாவை?**

❖பெற்றோர், ஆசிரியர், வயதில் மூத்தவர் ஆகியவர்களிடம் பணிவுடன் நடந்துகொள்ள வேண்டும்.

❖பிறருடன் பகை கொள்ளாது, ஒற்றுமை உணர்வை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

❖அடுத்தவர்க்கு உதவி செய்யும் பண்பினை வளர்த்துக்கொள்ளுதல் வேண்டும்.

❖ஒழுக்கத்துடன் கூடிய கல்வியைக்கற்று, குறிக்கோளுடன் கூடிய வாழ்க்கை வாழ வேண்டும்.

❖அனைவரிடத்திலும் அன்புடையவராய் இருத்தல் வேண்டும்.

**பயிற்சிகள்**

1. தூய்மை, சேய்மை, உண்மை, பழமை, கருமை

2. பொருத்துக

அ. பண்பு - பாடறிந்து ஒழுகுதல் ஆ. அன்பு - தன்கிளை செறாஅமை இ. அறிவு - பேதையர் சொல் நோன்றல்

ஈ. செறிவு - கூறியது மறாஅமை உ. நிறை - மறை பிறர் அறியாமை ஊ. முறை - கண் ஓடாது உயிர் வௌவல்

எ. பொறை - போற்றாரைப் பாதுகாத்தல்

3. எதுகைச் சொற்கள் :

| | | |
|---|---|---|
| ஆற்றுதல் | அறிவு | முறை |
| போற்றுதல் | செறிவு | நிறை |
| | | பொறை |

4. தொழிற்பெயர்கள் : ஆற்றுதல், போற்றுதல், உதவுதல், பொறுத்தல்

## நாட்டுப்புற கைவினைக்கலைகள் (உரைநடை உலகம்)

## மதிப்பீடு:

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. பனையோலைகள் 2. வனைதல் 3. மட்டும் + அல்ல 4. கயிற்றுக்கட்டில்

**பின்வரும் சொற்களைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக.**

1. முழுவதும் : தமிழ் அரங்கம் முழுவதும் மக்கள் நிறைந்து இருந்தனர்.

2. மட்டுமல்லாமல் : பனைமரம் உயரத்தில் மட்டுமல்லாமல் பயனிலும் உயர்ந்து இருக்கிறது.

3. அழகுக்காக : பல அரங்குகளில் கலைப்பொருட்களை அழகுக்காக வைத்திருப்பார்கள்.

4. முன்பெல்லாம் : மண்பாண்டங்களை முன்பெல்லாம் அதிகம் பயன்படுத்தினார்கள்.

**குறுவினா**

**1. எவற்றையெல்லாம் கைவினைக்கலைகள் எனக் கூறுகிறோம் ?**

பானை செய்தல், மண்பொம்மைகள் செய்தல், பனை ஓலையால் செய்த பொருட்கள், மரப்பொம்மைகள், காகிதப்பொம்மைகள் செய்தல், கிளிஞ்சல் போன்றவற்றால் பொருள்கள் உருவாக்குதல் போன்றவை கைவினைக்கலைகளாகும்.

2. மண்பாண்டம், சுடுமண் சிற்பம் - ஒப்பிடுக.

| மண்பாண்டம் | சுடுமண் சிற்பம் |
|---|---|
| களிமண்ணை ஒரு நாள் முழுவதும் ஊறவைத்து மெல்லிய மணல் மற்றும் சாம்பல் சேர்த்து சக்கரத்தால் செய்வது மண்பாண்டமாகும். | களிமண்ணோடு சிற்பங்கள் செய்து பக்குவமாக உலர வைத்துச் சுட்டு எடுத்து செய்யப்படும் சிற்பங்களாகும். |

3. பனையோலையால் உருவாக்கப்படும் பொருள்கள் யாவை?

கூடை தட்டு வகைகள், குப்பைக்கூடை, விசிறிகள், பூக்கூடைகள், ஓலைப்பாய், தொப்பி, கிலுகிலுப்பை, கூடை போன்றவை பனையோலையால் உருவாக்கப்படும்.

**சிறுவினா**

1. பிரம்பினால் பொருள்கள் செய்யும் முறையைக் கூறுக.

பிரம்பு, நெருப்பில் காண்பிக்கப்பட்டுச் சூடுபடுத்தப்படுகிறது. பின்னர் சூடான பிரம்பை நட்டு வைத்திருக்கும் இரு கடப்பாரைகளுக்கு இடையே செலுத்தி வளைப்பர்.

அது வேண்டிய வடிவத்தில் கம்பிபோல வளையும். பின்னர் அதனைத் தண்ணீரில் நனைத்து வைத்து விட்டால் அப்படியே நிலைத்து விடும்.

பிறகு பிரம்புகளை இணைத்தும், சிறு ஆணிகளை அறைந்தும், சிறு பிரம்பு இழைகளைக் கொண்டு கட்டியும் தேவையான பொருள்களாய் மாற்றப்படுகின்றன.

2. மூங்கிலால் செய்யப்படும் பொருள்கள் குறித்து எழுதுக.

மூங்கிலைக் கொண்டு பல வகையான கைவினைப்பொருள்கள் செய்யப்படுகின்றன. கூடை, முறம், தட்டு, தட்டி, தட்டுக்கூடை, ஏணி, சதுரத்தட்டி, கூரைத்தட்டி போன்றவைகள் மற்றும் தெருக்கூட்டும் துடைப்பம் மாடுகளுக்கான மூஞ்சிப்பெட்டி, பழக்கூடை, பூக்கூடை, கட்டில், புல்லாங்குழல், புட்டுக்குழாய், கால்நடைகளுக்கு மருந்து புகட்டும் குழாய் போன்ற பொருள்கள் மூங்கில் மூலம் உருவாகின்றன.

கல்மூங்கில், மலைமூங்கில், கூட்டுமூங்கில் என மூன்றுவகை மூங்கில்கள் உண்டு. அவற்றுள் கூட்டுமூங்கில்களே கைவினைப்பொருள்கள் செய்வதற்கு ஏற்றவை.

**நெடுவினா**

**தமிழகக் கைவினைக் கலைகளைப் பற்றிய செய்திகளை தொகுத்து எழுதுக.**

மண்பாண்டக்கலை : தமிழகத்தின் பழமையான கைவினைக்கலைகளுள் ஒன்று மண்பாண்டக் கலையாகும். மண்பாண்டங்களில் சமைக்கும் உணவு நல்ல சுவையுடனும், தண்ணீர் குளிர்ச்சியாகவும் இருக்கும்.

சுடுமண் சிற்பங்கள் : மண்பாண்டக்கலையின் இன்னொரு வளர்ச்சிநிலை சுடுமண் சிற்பக்கலை. இதில் பல வகையான சிற்பங்கள் செய்யப்படுகின்றன.

மூங்கில் கலை : மூங்கிலைக் கொண்டு கூடைகள், தட்டு, ஏணி, தட்டி, துடைப்பம் போன்ற பலவகைப் பொருட்கள் செய்யப்படுகின்றன.

கோரைப்பாய் : கோரைப்பாயின் சிறப்பு கோடையில் குளிர்ச்சியையும் மழைக்காலத்தில் வெப்பத்தையும் தரவல்லது. பாய்களில் தடுக்குப்பாய், திண்ணைப்பாய், பந்திப்பாய், தொழுகைப்பாய், பட்டுப்பாய் என பலவகை உண்டு.

பனையோலை : பனைஓலையைக் கொண்டு கூடை, விசிறி, தொப்பி, பாய், கிலுகிலுப்பை, பொம்மைகள் போன்ற பல பொருட்கள் செய்யப்படுகின்றன.

பிரம்பு : பிரம்பினால் குழந்தைகளுக்கான தொட்டில், கட்டில், ஊஞ்சல், நாற்காலி, மேசை, பூக்கூடை போன்றவை தயாரிக்கப்படுகின்றன.

**சிந்தனைவினா.**

**கைவினைகலைகளுக்கும் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கும் இடையேயுள்ள தொடர்பு குறித்து எழுதுக.**

மூங்கில், பனையோலை, பிரம்பு ஆகியவற்றால் செய்யப்படும் பொருள்கள் உடலின் வெப்பத்தை தணிப்பதோடு புவி வெப்பமயமாதலைக் குறைக்கும், சுற்றுப்புறச்சூழல் பாதுகாப்பிற்கும் பயனளிக்கும்.

காகிதங்களால் தயாரிக்கப்படும் கைவினைப்பொருட்கள் எளிதில் மட்கும் தன்மை கொண்டதால் மண் வளத்தைப் பாதுகாக்கும். மேலும் இவை போன்ற கைவினைப்பொருட்களை தயாரிக்க இரசாயனப் பொருட்களும் தேவை இல்லை.

## **தமிழர் இசைக்கலைகள்** (விரிவானம்)

## மதிப்பீடு

நெடுவினா

**1. காற்றுக்கருவிகள் குறித்த செய்திகளைத் தொகுத்து எழுதுக.**

இசை என்றாலே இசைய வைப்பது என்று பொருள். அவ் இசையை தரும் கருவிகள் தோல்கருவி, நரம்புக்கருவி, காற்றுக்கருவி, கஞ்சக்கருவி என நான்கு வகைப்படும். அவற்றுள் காற்றுக்கருவிகள் குறித்துக் காண்போம்.

குழல் : காடுகளில் வளரும் மூங்கிலில் வண்டுகள் துளையிடும். அவற்றின் வழியாகக் காற்று வீசும் போது இன்னிசை எழும்பும். இதனைக் கேட்டு நம் முன்னோர் அமைத்துக் கொண்டது குழல்கள் ஆகும். இதனை வேயங்குழல், புல்லாங்குழல் என்றும் அழைப்பர். குழல் ஏழு சுரங்களை உண்டாக்குவதற்கு உரிய ஏழு துளைகளை உடையதாக இருக்கும்.

கொம்பு : மனிதர்கள் தொடக்க காலத்தில் இறந்த மாடுகளின் கொம்புகளைப் பயன்படுத்தி ஒலி எழுப்பினர். அதுவே பிற்காலத்தில் கொம்பு என்னும் இசைக்கருவிக்கு அடிப்படையாயிற்று. ஊதுகொம்பு, எக்காளம், சிங்கநாதம், துத்தரி போன்ற பல வகையான கொம்புகள் இக்காலத்தில் திருவிழா ஊர்வலங்களின் போது இசைக்கப்படுகின்றன.

சங்கு : சங்கு என்பது ஒரு காற்று இசைக்கருவி. இஃது ஓர் இயற்கைக்கருவி. கடலில் இருந்து எடுக்கப்படுவது. வலமாகச் சுழிந்து இருக்கும் சங்கை வலம்புரிச்சங்கு என்பர். சங்கின் ஒலியைச் சங்கநாதம் என்பர். இலக்கியங்களில் இதனைப் பணிலம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## கற்பவை கற்றபின்

**இக்கால இசைக்கருவிகள் குறித்துக் கலைக்களஞ்சிய வடிவில் செய்திகளைத் தொகுத்து எழுதுக.**

1. உறுமிமேளம் 2. எக்காளம் 3. கடம் 4. கிளாரினெட் 5. கீபோர்டு 6. கொம்பு 7. சங்கு 8. சலதரங்கம் 9. சால்ரா 10. சித்தார் 11. தவில் 12. தம்பட்டம் 13. தபேலா 14. தம்புரா 15. நாதசுரம் 16. பறை 17. புல்லாங்குழல் 18. மத்தளம் 19. மிருதங்கம் 20. முரசு 21. வயலின் 22. வீணை

## **தொகைநிலை, தொகாநிலைத் தொடர்கள்** (கற்கண்டு)

## மதிப்பீடு :

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

| | | | |
|---|---|---|---|
| 1. வேற்றுமைத்தொகை | 2. பண்பு | 3. விளி | 4. வினைத்தொகை |
| 5. பண்புத்தொகை | 6. உம்மைத்தொகை | 7. இடைச்சொல் | 8. உரிச்சொல் |

**பொருத்துக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. பெயரெச்சத்தொடர் | - | எழுதிய பாடல் | 2. வினையெச்சத்தொடர் | - | பாடி முடித்தான் |
| 3. வினைமுற்றுத்தொடர் | - | வென்றான் சோழன் | 4. எழுவாய்த்தொடர் | - | கார்குழலி படித்தாள் |
| 5. விளித்தொடர் | - | புலவரே வருக | | | |

**சிறுவினா.**

**1. தொகைநிலைத்தொடர்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

இரு சொற்களுக்கு இடையில் வேற்றுமை உருபுகளோ வினை, பண்பு முதலியவற்றின் உருபுகளோ தொக்கி வருமானால் அதுவே தொகைநிலைத்தொடர் எனப்படும்.

தொகைநிலைத்தொடர் வேற்றுமைத்தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித்தொகை என ஆறு வகைப்படும்.

**2. இரவு பகல் என்பது எவ்வகைத்தொடர் என விளக்குக.**

இரவு பகல் என்பது இரவும் பகலும் என விரித்து பொருள் உணர்த்துகின்றன. தொடரின் இறுதியிலும், இடையிலும் 'உம்' என்பது மறைந்து நின்று பொருளை உணர்த்தும். இவ்வாறு 'உம்' என்றும் இடைச்சொல் தொக்கி வருவது உம்மைத்தொகை எனப்படும். எனவே இரவுபகல் என்பது உம்மைத்தொகை ஆகும்.

**3. அன்மொழித்தொகையை எடுத்துக்காட்டுடன் விளக்குக.**

வேற்றுமை, வினை, பண்பு, உவமை, உம்மை ஆகிய தொகைநிலைத்தொடர்களுள் அவை அல்லாத வேறு பிற சொற்களும் மறைந்து வருவது அன்மொழித்தொகை எனப்படும்.

பொற்றொடி வந்தாள். ( தொடி - வளையல் ) இத்தொடரில் பொற்றொடி என்பது பொன்னாலான வளையல் எனப்பொருள் தரும். இத்தொடர் வந்தாள் என்னும் வினைச்சொல்லைத் தழுவி நிற்பதால் பொன்னாலாகிய வளையலை அணிந்த பெண் வந்தாள் என்னும் பொருள் தருகிறது.

## கற்பவை கற்றபின்

தொகைநிலைத்தொடர் : பால் பருகினான், வெண்முத்து, திருக்குறள் படித்தான், தலை வணங்கு, சிதம்பரம் சென்றான், மலைவீழ் அருவி, கம்பர் பாடல், கருங்குவளை, மலர்விழி, இரவுபகல், தாய்தந்தை, பொற்றொடி வந்தாள்.

தொகாநிலைத்தொடர் : மல்லிகை மலர்ந்தது, நண்பா படி, சென்றனர் வீரர், வரைந்த ஓவியம், தேடிப் பார்த்தான், கவிதையை எழுதினார், மற்றுப்பிற, சாலவும் நன்று, நன்று நன்று நன்று.

## மொழியை ஆள்வோம்

**கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொல்லுருபுகளை இட்டு நிரப்புக.**

1. உடன் 2. பொருட்டு 3. இருந்து 4. காட்டிலும் 5. உடைய

**பின்வரும் இணைச்சொற்களை வகைப்படுத்துக.**

நேரிணை : உற்றார் உறவினர், வாடி வதங்கி, நட்ட நடுவில், பட்டி தொட்டி

எதிரிணை : விருப்பு வெறுப்பு, காலை மாலை, உள்ளும் புறமும், மேடு பள்ளம், ஆடல் பாடல்

செறியிணை : கன்னங்கரேல்.

**சரியான இணைச்சொற்களை இட்டு நிரப்புக.**

1. கல்விகேள்வி 2. மேடுபள்ளம் 3. போற்றிப்புகழப்பட 4. ஈடுஇணை 5. ஆடிஅசைந்தது

**கடிதம் எழுதுக.: இருப்பிடச்சான்றிதழ் வேண்டி வட்டாட்சியருக்கு விண்ணப்பம் எழுதுக.**

அனுப்புநர் :

அ. கபிலன்
த/பெ. ப. அகிலன்
34, மல்லிகை நகர்,
திருச்சி – 12

பெறுநர் :

உயர்திரு. வட்டாட்சியர் அவர்கள்,
வட்டாட்சியர் அலுவலகம், திருச்சி.

மதிப்பிற்குரிய வட்டாட்சியர் அவர்களுக்கு,

வணக்கம்.

பொருள்: இருப்பிடச்சான்றிதழ் வேண்டுதல் சார்பாக

திருச்சி அரசு உயர்நிலைப்பள்ளியில் நான் எட்டாம் வகுப்பு படிக்கின்றேன். 34, மல்லிகைநகர், திருச்சி என்ற முகவரியில் பத்து ஆண்டுகளாக நாங்கள் வசித்து வருகின்றோம். இந்த ஆண்டு அரசின் கல்வி உதவித்தொகைக்கு விண்ணப்பிக்க இருப்பிடச்சான்றிதழ் தேவைப்படுகின்றது. இதனுடன் குடும்பஅட்டை மற்றும் ஆதார்அட்டை இரண்டின் நகலும் இணைத்துள்ளேன். ஆகவே எனக்கு இருப்பிடச்சான்றிதழ் வழங்கும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி.

இடம்: திருச்சி
நாள்: 25.06.2020

இப்படிக்கு
தங்கள் உண்மையுள்ள,
அ, கபிலன்

உறை மேல் முகவரி
பெறுநர்:
உயர்திரு. வட்டாட்சியர் அவர்கள்
வட்டாட்சியர் அலுவலகம்,
திருச்சி.

## மொழியோடு விளையாடு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இடமிருந்து வலம் | : | 1. மத்தளம் | 2. வீணை | 7. சங்கு | 12. கொம்பு |
| வலமிருந்து இடம் | : | 4. சேகண்டி | 8. குடமுழா | 9. பாணர் | |
| கீழிருந்து மேல் | : | குழல், | ஏழு, | மண்முரசு | |
| மேலிருந்து கீழ் | : | 1. மகரயாழ், | கஞ்ச, | குடுகுடுப்பை, | 6. தோல் |

## **திருக்குறள்** (வாழ்வியல்)

## மதிப்பீடு:

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. குற்றமற்ற + ஆட்சி 2. அவையின் 3. கண் + ஓடாது 4. கசடு + அற 5. என்றாய்ந்து

**குறுவினா**

**1. நன்மையைத் தரும் செயலை ஒருவரிடம் ஒப்படைக்கும் வழி யாது?**

இச்செயலை, இக்கருவியால் இவன் செய்து முடிக்க வல்லவன் என்பதை ஆராய்ந்து பின்பு அவனிடம் நன்மையைத் தரும் செயலை ஒப்படைக்க வேண்டும்.

**2. சிறந்த ஆட்சியின் பண்பாகத் திருக்குறள் கூறுவது யாது?**

அரசன் தன்ஆட்சியின் கீழ் வாழும் மக்களின் குற்றங்களை ஆராய்ந்து நடுவுநிலையுடன் செயல்பட வேண்டும். இதுவே சிறந்த ஆட்சியின் பண்பு ஆகும்.

**3. அரசன் தண்டிக்கும் முறை யாது ?**

ஒருவர் செய்த குற்றத்தை முறையாக ஆராய்ந்து அவர் மீண்டும் குற்றம் செய்யாதவாறு தண்டிப்பது அரசன் தண்டிக்கும் முறையாகும்.

**4. சிறந்த சொல்லாற்றலின் இயல்பு யாது?**

கேட்பவரைக் கவரும் படியும், கேளாதவரைக் கேட்கத் தூண்டுவதும் சிறந்த சொல்லாற்றலின் இயல்பு ஆகும்.

**பின்வரும் நிகழ்வுக்குப் பொருத்தமான திருக்குறளைத் தேர்ந்தெடுக்க.**

இதனை இதனால் இவன்முடிக்கும் என்றுஆய்ந்து
அதனை அவன்கண் விடல்.

## வளம் பெருகுக (கவிதைப் பேழை)

### மதிப்பீடு :

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. வித்துகள் 2. வாரி 3. அ + களத்து 4. கதிரீன

**குறுவினா**

**1. பயிர்கள் வாட்டமின்றிக் கிளைத்து வளரத் தேவையானது யாது?**

சரியான காலத்தில் பெய்யும் மழையே பயிர்கள் வாட்டமின்றிக் கிளைத்து வளரத் தேவையானது.

**2. உழவர்கள் எப்போது ஆரவார ஒலி எழுப்புவர் ?**

நெல் போரினை அடித்து நெல்லினை எடுக்கும் காலத்தில் உழவர்கள் ஆரவாரஒலி எழுப்புவர்.

**சிறுவினா.**

**1. உழவுத்தொழில் பற்றித் தகடூர் யாத்திரை கூறுவன யாவை?**

தகடூர் யாத்திரை பாடல் வழி சேர மன்னனின் நாட்டில் வளமான வான்மழையால் உழவர் பெருமக்கள் உவக்கும் காட்சி விளக்கப்படுகிறது.

சேரனின் நாட்டில் பெருகிய மழையால் வருவாய் சிறந்து விளங்குகிறது. அகலமான நிலப்பகுதியில் விதைகள் குறைவின்றி முளைவிடுகின்றன. முளைத்த விதைகள் செழிப்புடன் வளர மழை பொழிகின்றது. சரியான காலத்தில் மழை பொழிவதால் பயிர்கள் கிளைத்து வளர்கிறது. வளர்ந்த பயிர்கள் பால் முற்றின் கதிர்களைப் பெற்றிருக்கின்றன.

அக்கதிர்கள் அறுவடை செய்யப்பெற்று நெற்போர் காவல் இல்லாமல் களத்தில் இருக்கின்றது. நெற்போரினை அடித்து நெல்லினைக் கொள்ளும் காலத்தில் உழவர்கள் எழுப்பும் ஆரவார ஒலியால் அஞ்சி நாரை இனங்கள் தன் பெண்பறவையோடு பிரிந்து செல்லும் சிறப்புடைய நாடு சேரநாடு ஆகும்.

**சிந்தனை வினா**

**1. உழவுத்தொழிலில் சிறக்க இன்றியமையாதனவாக நீங்கள் கருதுவன யாவை?**

- உழவுத்தொழில் உயிர்தொழில் ஆகும். ஒவ்வொரு வீட்டிலும் ஒருவர் கட்டாயம் உழவுத்தொழில் செய்தல் வேண்டும்.
- உழவுத்தொழில் அரசுப்பணிகளில் ஒன்றாகச் சேர்க்கப்பட வேண்டும்.
- இளைஞர்கள் மருத்துவர், பொறியாளர், அறிவியல் விஞ்ஞானி போல உழவர் என்று சொல்வதையும் பெருமையாக எண்ண வேண்டும்.

## மழைச்சோறு ( கவிதைப் பேழை )

### மதிப்பீடு :

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. பெருமழை 2. வாசல் + எல்லாம் 3. பெற்று + எடுத்தோம் 4. காலிறங்கி

**எழுத்து வழக்குச் சொற்களாக மாற்றுக.**

வாயிலெல்லாம், பொழியவில்லை, காட்டில்தான், பூக்கவில்லையே, மணக்கவில்லையே, பெண்களே, பொழியுதைய்யா, வானம், பாவம்தான், தீரவில்லையே, நிற்கிறதம்மா, இரங்கவில்லையே.

**குறுவினா**

**1. மழைச்சோறு பாடலில் உழவர் படும் வேதனை எவ்வாறு கூறப்படுகிறது?**

கலப்பை பிடிக்கும் கைகள் சோர்ந்து நிற்கின்றன. ஏற்றம் இறைக்கும் அவர்களின் மனம் மழைக்காக ஏங்கித் தவிக்கிறது.

**2. மக்கள் ஊரைவிட்டு வெளியேறக் காரணம் என்ன?**

மக்கள் கதறி அழுது வழிபட்டும் மாரியம்மன் இரக்கம் கொண்டு மழை பெய்விக்காததால் ஊரைவிட்டு வெளியேறிக் காட்டிற்குச் செல்ல முடிவெடுத்தனர்.

**சிறுவினா.**

**1. கோலம் கரையாத நிலையை மழைச்சோறு பாடல் எவ்வாறு விளக்குகிறது?**

❖ வாளியில் மாவுகரைத்து வாசல் முழுவதும் கோலம் போட்டு வைத்தும் பெருமழை பெய்யவில்லை. கோலமும் கரையவில்லை.

❖ பானையில் மாவுகரைத்துப் பாதையெல்லாம் கோலம் போட்டும் பெருமழை பெய்யவில்லை. அக்கோலமும் கரையவில்லை,

**2. மழையின்மையால் செடிகள் வாடியநிலையை விளக்குக.**

❖ கல் இல்லாதக் காட்டில் கடலைச்செடி போட்டு வைத்தோம். கடலைச்செடி வாடியது. கனத்தமழை பெய்யவில்லை.

❖ முள் இல்லாதக் காட்டில் முருங்கைச்செடி நட்டு வைத்தோம். முருங்கைச்செடி வாடியது. முத்துமழை பெய்யவில்லை.

❖ கருவேலங்காட்டிலும் கனமழை பெய்யாததால் காட்டுமல்லியும் பூக்கவில்லை.

**3. மழைச்சோறு எடுத்தபின் எவ்வாறு மழை பெய்தது?**

❖ மழைச்சோறு எடுத்தபின் பேய்மழை பெய்தது. மேலும் ஊசி போல் கால் இறங்கி உலகம் எங்கும் மழை பெய்தது. சிட்டுப்போல மின்னி மின்னி நாடு முழுவதும் செல்ல மழை பெய்தது.

❖ சிட்டுப்போல மின்னி மின்னி
சீமையெங்கும் பேயுது.
சீமையெங்கும் பேஞ்சமழை
செல்ல மழை பேயுது.

**சிந்தனை வினா**

**மழை வளம் பெருக நாம் செய்ய வேண்டுவன யாவை?**

❖ மழைவளம் பெருக மரங்களை வளர்க்க வேண்டும்.

❖ மரங்கள் செழித்து வளர ஆறு, ஏரி, குளம், கண்மாய் முதலியவற்றை நன்கு பராமரிக்க வேண்டும்.

❖ விளைநிலங்களை வீடுகளாக மாற்றாமல் வீடுதோறும் மரங்களை வளர்க்க வேண்டும்.

❖ மழைநீருக்கும் மனிததன்மைக்கும் மிகுந்த தொடர்பு உண்டு, எனவே மனிதம் குறையாமல் மனிதன் வாழ வேண்டும்.

## கற்பவை கற்றபின்

மழையை நம்பி ஏலேலோ! மண் இருக்க ஐலசா!
மண்ணை நம்பி ஏலேலோ! மரம் இருக்க ஐலசா!
மரத்த நம்பி ஏலேலோ! கிளை இருக்க ஐலசா!
கிளையை நம்பி ஏலேலோ! இலை இருக்க ஐலசா!
இலையை நம்பி ஏலேலோ! பூ விருக்கு ஐலசா .........

## கொங்கு நாட்டு வாணிகம் (உரைநடை உலகம்)

## மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. தொல்காப்பியம் 2. வஞ்சி 3. நெல் 4. அமராவதி 5. கோயம்புத்தூர்

**நிரப்புக.** 1. சேலம் 2. சின்னாளப்பட்டி 3. குடநாடு 4. திருப்பூர்

**குறுவினா**

**1. மூவேந்தர்களின் காலம் குறித்து எழுதுக.**

"வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு" என்கிறது தொல்காப்பியம். சங்க இலக்கியங்களும் தமிழகத்தை சேர, சோழ, பாண்டியர்களுக்கு உரியதாகக் கூறுகின்றன. மூவேந்தர்களின் காலத்தை வரையறுத்துக் கூற முடியவில்லை.

**2.கொங்கு நாட்டில் பாயும் ஆறுகள் யாவை?**

காவிரி, பவானி, நொய்யல், ஆன்பொருநை ஆகிய ஆறுகள் கொங்கு நாட்டில் பாய்ந்து வளம் செழிக்கச் செய்கின்றன.

**3. தமிழ்நாட்டின் ஹாலாந்து என்று அழைக்கப்படும் ஊர் எது? ஏன்?**

தமிழநாட்டின் ஹாலாந்து திண்டுக்கல் ஆகும். இம் மாவட்டம் மலர் உற்பத்தியில் முதலிடம் வகிப்பதே இப்பெயர் பெற காரணம் ஆகும்.

**சிறுவினா**

**1. கொங்கு மண்டலச்சதகம் கூறும் கொங்கு மண்டலத்தின் எல்லைகள் யாவை?**

கார்மேகக்கவிஞர் இயற்றிய கொங்குமண்டலச் சதகம் என்னும் நூலில் வடக்கே பெரும்பாலை, தெற்கே பழனிமலை, மேற்கே வெள்ளிமலை, கிழக்கே மதிற்கரை என இந்த நான்கு எல்லைகளுக்குட்பட்ட பகுதியாகக் கொங்குமண்டலம் விளங்கியதாகக் கூறப்படுகிறது.

இன்றைய நீலகிரி, கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, நாமக்கல், சேலம், தருமபுரி ஆகிய மாவட்டங்களும், திண்டுக்கல், கரூர், கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களின் சில பகுதிகளையும் உள்ளடக்கியதாகக் கொங்குமண்டலம் விளங்கியது.

**2. கரூர் மாவட்டம் பற்றிய செய்திகளைத் தொகுத்து எழுதுக.**

கரூர் மாவட்டத்தில் நெல், சோளம், கேழ்வரகு, கம்பு, கரும்பு போன்றவைப் பயிரிடப்படுகின்றன.

கல்குவாரித்தொழிற்சாலைகள், தோல் பதனிடுதல், சாயமேற்றுதல், கற்சிற்ப வேலைகள் போன்றவை நடைபெறுகின்றன.

பேருந்து கட்டுமானத்தொழில் மற்றும் கைத்தறி நெசவு ஆடைகளுக்கும் பெயர் பெற்ற மாவட்டமாகக் கரூர் சிறந்து விளங்குகிறது.

**நெடுவினா**

**1. கொங்கு நாட்டின் உள்நாட்டு, வெளிநாட்டு வணிகம் குறித்து எழுதுக.**

உள்நாட்டு, வெளிநாட்டு வணிகத்தில் கொங்குநாடு சிறப்பாக விளங்கியது. கடல் வணிகத்தில் சேரநாடு சிறந்து விளங்கியது.

முசிறி சேர நாட்டின் துறைமுகம். இங்கிருந்து மற்ற நாடுகளுக்கு மிளகு, முத்து, யானைத்தந்தங்கள், பட்டு, மணி போன்றவை ஏற்றுமதி செய்யப்பட்டன.

பொன், மென்மைமிக்கபுடவைகள், சித்திரவேலைப்பாடமைந்த ஆடைகள், பவளம், செம்பு, கோதுமை ஆகியவை இறக்குமதி செய்யப்பட்டன.

மக்கள் தத்தம் பொருள்களைத் தந்து தமக்குத் தேவையான பொருள்களைப் பெற்றனர். நெல்லே விலையைக் கணக்கிட அடிப்படையாய் இருந்தது. உப்பும் நெல்லும் ஒரே மதிப்புடையதாய் இருந்தது என்பதை அகநானூறு மூலம் அறியலாம்.

"நெல்லும் உப்பும் நேரே" (அக. 390)

**சிந்தனை வினா.**

**நாட்டு மக்களின் நாகரிக நல்வாழ்விற்கு வணிகம் தவிர்த்து வேறு எவையெல்லாம் உதவும் என்று நீங்கள் கருதுகிறீர்கள் ?**

- ❖ மனித நேயம் என்னும் பண்பு மாறாமல் இருக்க வேண்டும்.
- ❖ அன்பு, அறம் இதனை வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டும்.
- ❖ ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்ற பொன்மொழியை கடைப்பிடிக்க வேண்டும்.
- ❖ செயற்கையான உணவு, வாழ்க்கைமுறையில் இருந்து விலகி இயற்கையோடு வாழப் பழக வேண்டும்.
- ❖ காற்று, நீர், நிலம், வானம் இவை மாசுபடாத வாழ்வை வாழ வேண்டும்.

### கற்பவை கற்றபின்

**உங்கள் மாவட்டம் பற்றிய செய்திகளைத் தொகுத்து எழுதுக.**

தமிழகத்தின் மூன்றாவது பெரிய நகரமாகும். தமிழ்நாட்டின் தொன்மையான நகரம் எங்கள் மதுரை மாவட்டமாகும். வைகை ஆற்றங்கரையில் மதுரை அமைந்துள்ளது. மதுரை என்றாலே மீனாட்சிஅம்மன்கோவிலும், திருமலைநாயக்கர் மஹாலும், சல்லிக்கட்டும் நினைவில் வந்து நிற்கும். தெருக்களின் அமைப்பு, கடைவீதிகள், தூங்காநகரமாய் எப்பொழுதும் இருக்கும். உணவு, உழைக்கும் மக்கள் என மதுரையின் சிறப்பை சொல்லிக் கொண்டே போகலாம். சிறந்த சுற்றுலாத்தலம், வழிப்பாட்டுத்தலம், தொழில் நகரமாய் மதுரை சிறந்து விளங்குகிறது.

### காலம் உடன் வரும் (விரிவானம்)

### மதிப்பீடு :

**“காலம் உடன் வரும்” - கதையைச் சுருக்கி எழுதுக.**

வெள்ளக்கோவில் தினேஷ்டெக்ஸில் தொலைபேசி மணி ஒலித்தது. சுப்பிரமணி போனை எடுத்தான். அனந்திகாவுல இருந்து பேசுறோம் நாளைக்கு சாயங்காலத்துகுள்ள துணியை லாரியில் ஏத்தனும் என்றனர். இங்கே பாவு பிணைக்கக்கூட ஆள் இல்லீங்க என்றான் சுப்பிரமணி. எப்படியாச்சும் ஒட்டி வச்சிருங்க நாளைக்கு இரண்டு மணிக்கு டெம்போ வந்துவிடும் என அழைப்பு துண்டிக்கப்பட்டது.

பாவுபிணைக்கும் இரங்கன் ஊருக்குச் சென்றதால் நண்பன் ரகுவின் குமரன்டெக்ஸில் ஆள் கிடைப்பார்கள் என்ற நம்பிக்கையில் சுப்பிரமணி காரில் புறப்பட்டான். இரவு மணி பதினொன்றைக் கடந்திருந்தது. தறியின் வாசலில் ரகுவைப் பார்த்து பாவு பிணைக்க ஆள் வேணும் என்றான். இங்கே ஆள் இல்லை இங்க தறி ஓட்டுகிற மாயழகுவும் அவன் மனைவியும் வீட்டில் இருப்பாங்க கூட்டிக்கிட்டுப்போ, சம்பளம் சேர்த்துப் போட்டு கொடுத்துடு என்றான்.

மாயழகுவைப் பார்த்த சுப்பிரமணி ரொம்ப அவசரம். எங்க பட்டறை ஆள் இல்லை. உங்க ஓனரைப் பார்த்தேன். அவரு தான் சொன்னார் உன் சம்சாரம் பாவு பிணைக்கு மாம்ல என்றான் சுப்ரமணியன்.

கண்ணைக் கசக்கிக் கொண்டு மாயழகு மனைவி ஒச்சம்மாள் வந்தாள். பாவு பிணைக்கக் கூட்டிக்கிட்டு போக வந்திருக்காரு என்றான் மாயழகு. உடனே முகத்தைக் கழுவிக்கொண்டு குழந்தையுடன் புறப்பட்டாள் ஒச்சம்மாள். சுவரோரமாக ஒரு பெட்ஷீட்டை விரித்து, குழந்தையைப் படுக்க வைத்துவிட்டு, நூல்களை முடிச்சிட்டு இணைக்க ஆரம்பித்தாள். பாவு பிணைத்துக்கொண்டே குழந்தையின் கல்வி குறித்து நினைத்துக்கொண்டாள். ஒச்சம்மாவின் வேகம் மங்கும் பொழுது தேநீர் வாங்கி வரச் சொன்னான் சுப்பிரமணி. வேலையும் முடிந்தது. இரவும் விடிந்தது.

சுப்பிரமணி இரட்டைச்சம்பளத்துக்கான ரூபாயை அவளிடம் தந்தான். ஒச்சம்மாவை காரில் ஏற்றி வீட்டில் இறக்கிவிட்டான். ரொம்ப கஷ்டந்தான் நம்ம தொழில் என்றான் சுப்பிரமணி.

அப்படித்தாண்ணே இருக்கும். உங்களை நம்பித்தான் ஊர்விட்டு ஊர் வந்திருக்கோம். ஏதாச்சும் வேலைன்னா சொல்லுங்கண்ணே என்றான் மாயழகு. “வாங்கண்ணே” என்று வழியனுப்பினாள் ஒச்சம்மாள். எதிர்பாராத விதமாக “டாட்டா டாட்டா” என்றது குழந்தை. தலை அசைத்துவிட்டு கிளம்பினான் சுப்பிரமணி.

### கற்பவை கற்றபின்

**“காலம் உடன் வரும்” - கதையில் இடம் பெற்றுள்ள ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச்சொற்களை எழுதுக.**

| ஆங்கிலச்சொல் | | தமிழ்ச்சொல் | ஆங்கிலச்சொல் | | தமிழ்ச்சொல் |
|---|---|---|---|---|---|
| 1. லாரி | - | சரக்கு | 2. டெக்ஸ் | - | துணி ஆலை |
| 3. போன் | - | தொலைபேசி | 4. டெம்போ | - | சரக்கு வாகனம் |
| 5. கார் | - | மகிழுந்து | 6. ஷிப்ட் | - | பணிமுறை மாற்றம் |
| 7. நம்பர் | - | எண் | 8. டிஸைன் | - | வடிவமைப்பு |
| 9. பெட்ஷீட் | - | படுக்கைவிரிப்பு | 10. டேப் | - | ஒலிநாடாக்கருவி |
| 11. டீ | - | தேநீர் | 12. டாட்டா | - | போய் வருக |

## **புணர்ச்சி** ( கற்கண்டு )

### மதிப்பீடு :

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 1. மூன்று 2. இயல்பு

**பொருத்துக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. மட்பாண்டம் | - | திரிதல் விகாரம் | 2.மரவேர் | - | கெடுதல் விகாரம் |
| 3. மணிமுடி | - | இயல்பு புணர்ச்சி | 4. கடைத்தெரு | - | தோன்றல் விகாரம் |

**சிறுவினா**

**1. இயல்பு புணர்ச்சியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.**

நிலைமொழியின் இறுதி எழுத்தும் வருமொழியின் முதல் எழுத்தும் எவ்வித மாற்றமும் இன்றி இணைவது இயல்பு புணர்ச்சி ஆகும். சான்று : தாய் + மொழி - தாய்மொழி.

**2. மரக்கட்டில் - இச்சொல்லைப் பிரித்து எழுதிப் புணர்ச்சியை விளக்குக.**

மரக்கட்டில் - மரம் + கட்டில்

மரம் என்னும் நிலைமொழியுடன் "கட்டில்" என்னும் வருமொழி சேரும் போது கெடுதல் விகாரத்தின் படி "ம்" மறைந்தது.

தோன்றல் விகாரத்தின்படி "க்" என்னும் மெய்யெழுத்து தோன்றியது.

மரம் + கட்டில் - மரக்கட்டில் என்றானது.

### கற்பவை கற்றபின்

**இயல்பு, தோன்றல், திரிதல், கெடுதல் ஆகிய புணர்ச்சிகளுக்குரிய எடுத்துக்காட்டுகளைக் கொண்டு பட்டியல் ஒன்று உருவாக்குக.**

இயல்பு : தாய்மொழி, உடலோம்பல், பாலாடை, மணிமுடி

தோன்றல் : தமிழ்த்தாய், கடைத்தெரு, பள்ளிக்கூடம், வாழைப்பழம்

திரிதல் : விற்கொடி, மட்பாண்டம், கற்குவியல், பொற்சிலை

கெடுதல் : மனமகிழ்ச்சி, மரவேர், வடதிசை, மரநிழல்.

இயல் - 7

## **படைவேழம்** ( கவிதைப் பேழை )

### மதிப்பீடு :

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. முழை 2. அச்சம் 3. வெம்மை + கரி 4. என்று + இருள் 5. போலுடன்றன

**குறுவினா**

**1. சோழ வீரர்களைக் கண்டு கலிங்கர் எவ்வாறு நடுங்கினர்?**

சோழ வீரர்களைக் கண்ட கலிங்கர், இது என்ன மாயவித்தையா?, எரிக்க வந்த தீயா, உயிரைப் பறிக்கும் காலனா, என அஞ்சினர். தமது இறுதிக்காலம் நெருங்கிவிட்டதோ என எண்ணி அஞ்சினர்.

**2. கலிங்க வீரர்கள் எவ்வாறு அஞ்சி ஓடினர்?**

சிலர் கடலில் தாவிக்குதித்து தப்பினர். சிலர் யானைகளின் பின்னே மறைந்து கொண்டனர். சிலர் செல்வதற்கு அரிதான மலைக்குகைக்குள்ளும், புதர்களுக்குள்ளும் தப்பி ஓடினர்.

**3. சோழனின் யானைப்படையைக் கண்ட வீரர்களின் செயல்கள் யாவை?**

சோழமன்னனின் படையில் உள்ள யானைகள் சினமுற்று இடியைப்போலப் பிளிறின. அவ்வோசையைக் கேட்டு அஞ்சிய வீரர்கள் இருள் நிறைந்த குகைக்குள் சென்று மறைந்தனர்.

**சிறுவினா**

**சோழ வீரர்களைக் கண்ட கலிங்கப்படை வீரர்களின் செயல்களாகக் கலிங்கத்துப்பரணி கூறுவன யாவை?**

சோழர் படையின் தாக்குதலைக் கண்ட கலிங்கர் இஃது என்ன மாயவித்தையா? என்று வியந்தனர். தம்மை எரிக்க வந்த தீயோ என அஞ்சினர்.

சோழர்படை தம் உயிரைப் பறிக்கும் காலனோ என அஞ்சினர். தமது இறுதிக்காலம் நெருங்கிவிட்டதோ என எண்ணி மிக நடுங்கிக்கடலில் தாவிக்குதித்துத் தப்பினர். யானைகளின் பின்னே சிலர் மறைந்து கொண்டனர். எத்திசையில் செல்வது எனத் தெரியாமல் சிலர் மலைக் குகைகளுக்குள்ளும், புதர்களுக்குள்ளும் ஒருவரை ஒருவர் முந்திக்கொண்டு ஓடினர். தம் நிழலையும், மற்றவர் நிழலையும் கண்டு தம்மை துரத்தி வருவதாய் எண்ணி அஞ்சி தஞ்சம் வேண்டி வணங்கினர். சோழர் படையின் யானைகள் சினமுற்று இடியைப்போல பிளிறியதைக் கேட்டு அஞ்சிய கலிங்க வீரர்கள் இருள் நிறைந்த குகைக்குள் சென்று மறைந்தனர். மற்றவர் புறமுதுகு காட்டி ஓடிப் பிழைத்தனர்.

**சிந்தனை வினா.**

**ஒரு நாட்டின் பாதுகாப்பிற்கு தேவையானவை எவை எனக் கருதுகிறீர்கள் ?**

- ❖ நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் சட்டதிட்டங்களை மதித்து நடக்க வேண்டும்.
- ❖ நாட்டின் கடற்படை, விமானப்படை, இராணுவப்படையினை பலப்படுத்தி நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்.
- ❖ தொழில்நுட்பஅறிவை நாட்டின் பாதுகாப்பிற்கு பயன்படுத்த வேண்டும்.
- ❖ நாட்டின் முதுகெலும்பான விவசாயம் அதன் அடிப்படையில் இயற்கையும் போற்றி பாதுகாக்கப்பட வேண்டும்.

## கற்பவை கற்றபின்

**உங்களுக்கு தெரிந்த சிற்றிலக்கிய வகைகளின் பெயர்களைத் தொகுத்து எழுதுக.**

❖ உலா ❖ பிள்ளைத்தமிழ் ❖ கலம்பகம் ❖ அந்தாதி ❖ கோவை ❖ பள்ளு
❖ குறவஞ்சி ❖ தூது ❖ சதகம் ❖ பரணி

## விடுதலைத்திருநாள் ( கவிதைப்பேழை )

## மதிப்பீடு :

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. தரிசனம் 2. வையம் 3. சீவன் + இல்லாமல் 4. விலங்கு + ஒடித்து 5. காட்டையெரித்து 6. இதந்தரும்.

**குறுவினா**

**1. பகத்சிங் கண்ட கனவு யாது?**

இந்தியா அந்நியரின் ஆட்சியில் இருந்து விடுதலை பெற வேண்டும் என்பதே பகத்சிங் கண்ட கனவாகும்.

**2. இருண்ட ஆட்சி என எதனை மீரா குறிப்பிடுகிறார்?**

முந்நூறு ஆண்டுகள் நம்மை அடிமைப்படுத்தி ஆண்ட அரக்கராகிய அந்நியரின் ஆட்சியே இருண்டஆட்சி என்கிறார் மீரா.

**சிறுவினா.**

**1. இந்தியத்தாய் எவ்வாறு காட்சியளிக்கிறாள் ?**

அடிமைத்தனத்தால் தவித்துக் கொண்டிருந்த இந்தியத்தாய் முந்நூறு ஆண்டுகள் கழித்து சினந்து எழுந்து தன் கைவிலங்கை உடைத்துப் பகைவரை அழித்து, அவிழ்ந்த கூந்தலை முடித்து, நெற்றியில் திலகமிட்டு இந்தியருக்கு மகிழ்வான காட்சியை அளிக்கின்றாள்.

**சிந்தனை வினா**

**1. நாட்டுப்பற்றை வளர்க்கும் வகையில் விடுதலைநாளை எவ்வாறு கொண்டாடலாம் ?**

- ❖ விடுதலை நாள் விழாவில் பல கலைநிகழ்ச்சிகளை நிகழ்த்த வேண்டும்.
- ❖ நம் தாய்நாட்டின் பெருமையும் பழமையும் மாணவர்கள் அறியும்படி உரையாற்ற வேண்டும்.
- ❖ விடுதலைக்காக பாடுபட்டவரின் தியாகங்களை அனைவருக்கும், அறியும்படி உணர்த்த வேண்டும்.
- ❖ நம் நாட்டின் பாரம்பரியம், கலாச்சாரம், அதன் முக்கியத்துவம் முதலியவற்றை எடுத்துக்கூற வேண்டும்.
- ❖ இளைஞர்கள், மாணவர்கள் மற்றும் மக்களின் மனதில் நாட்டின் வளர்ச்சியும் பாதுகாப்பும் முக்கியம் என்பதை பதிய வைக்கவேண்டும்.

## கற்றவை கற்றபின்

**நீங்கள் விரும்பும் விழா ஒன்றனைப் பற்றி ஒரு பத்தி அளவில் எழுதுக.**

உழவர் திருநாள் :

தமிழர் கொண்டாடும் பண்டிகைகளுள் மிகச்சிறந்தது பொங்கல் விழா ஆகும். இவ்விழா உழவர் திருநாள், தைத்திருநாள், தமிழர் திருநாள் என்று பல பெயர்களால் சிறப்பிக்கப்படுகின்றது. இவ்விழா தமிழ்நாடு, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், மொரிசியசு என தமிழர் வாழும் அனைத்து நாடுகளிலும் கொண்டாடப்படுகிறது. இயற்கையோடு உழைக்கும் உழவர்கள் இயற்கை தெய்வமாகக் கருதப்படும் சூரியனுக்கும் மற்ற உயிர்களுக்கும் சொல்லும் நன்றியாகக் கொண்டாடப்படுகிறது.

## பாரத ரத்னா எம்.ஜி. இராமச்சந்திரன் (உரைநடை உலகம்)

### மதிப்பீடு :

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. கும்பகோணம் 2. குடும்ப வறுமை 3. பாரத் 4. மதுரை 5. சத்துணவுத்திட்டம்

**குறுவினா**

**1.எம்.ஜி.ஆர். நாடகத்துறையில் ஈடுபடக் காரணம் என்ன?**

குடும்ப வறுமை காரணமாகப் படிப்பைத் தொடர முடியவில்லை. அதனால் நாடகத்துறையில் ஈடுபட்டார்.

**2. திரைத்துறையில் எம்.ஜி.ஆரின் பன்முகத்திறமைகள் யாவை?**

திரைத்துறையில் எம்.ஜி.ஆர். தன் பன்முகத்திறமையால் நடிகர், தயாரிப்பாளர், இயக்குனர் என அனைத்துத்துறையிலும் சிறந்து விளங்கினார்.

**3. எம்.ஜி.ஆரின் சமூக நலத்திட்டங்களுள் நான்கனை எழுதுக.**

1. ஏழைகளுக்கான வீட்டு வசதித் திட்டம் 2. ஆதரவற்ற மகளிருக்குத் திருமண உதவித்திட்டம்
3. முதியோருக்கு உதவித்தொகை வழங்கும் திட்டம் 4. தாய் சேய் நல இல்லங்கள்

**சிறுவினா.**

**1. பள்ளிக்குழந்தைகளுக்குக் காலணி வழங்கும் திட்டத்துக்கு அடிப்படையாக அமைந்த நிகழ்வினை எழுதுக.**

எம்.ஜி.ஆர் அவர்கள் ஒருமுறை வெளியூரில் இருந்து மகிழ்வுந்தில் சென்னைக்கு வரும் வழியில், மூதாட்டியும் பத்துவயது சிறுமியும் தலையில் புல்கட்டுகளைச் சுமந்தவாறு காலில் காலணி இல்லாமல் நடந்தனர். சாலையின் சூடு பொறுக்க முடியாமல் மரநிழலில் நிற்பதும் ஓடுவதுமாக இருந்தனர். இதைக் கண்ட எம்.ஜி.ஆர். காரை நிறுத்தி உடன் வந்த துணைவியார் காலணியையும், உறவினர் பெண்ணின் காலணியையும் அவர்களிடம் கொடுத்தார். இந்நிகழ்வின் வெளிப்பாடாக பள்ளிக்குழந்தைகளுக்குக் காலணி வழங்கும் திட்டத்தைக் கொண்டு வந்தார்.

**2. தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக எம்.ஜி.ஆர். ஆற்றிய பணிகள் யாவை?**

❖ தந்தை பெரியார் உருவாக்கிய எழுத்துச் சீர்திருத்தங்களுள் சிலவற்றை நடைமுறைப்படுத்தித் தமிழ் எழுத்து முறையை எளிமைப்படுத்தினார்.

❖ மதுரை மாநகரில் ஐந்தாம் உலகத்தமிழ்மாநாட்டைச் சிறப்பாய் நடத்தினார்.

❖ தஞ்சையில் ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் தமிழ்ப்பல்கலைக்கழகத்தைத் தோற்றுவித்தார்.

**நெடுவினா.**

**எம்.ஜி.ஆரின் பண்பு நலன்களை விளக்கி எழுதுக.**

❖ எம்.ஜி.ஆர் தன் திரைப்படம் மூலம் ஏழை, எளிய மக்களின் முன்னேற்றத்துக்கு உரிய கருத்துகளை எடுத்துரைத்தார். ❖ திரைத்துறையில் நடிகர், தயாரிப்பாளர், இயக்குநர் எனப் பன்முகத்திறமை கொண்டு விளங்கினார். ❖ உயர்ந்த நிலையிலும் எளியவாழ்வை வாழ்ந்தார். ❖ தன்னிடம் இருந்த செல்வத்தை மற்றவர்களுக்குக் கொடுத்து மகிழ்ந்தார். ❖ இயற்கைச்சீற்றத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு, உடை வழங்கி துயர்துடைக்க தன் கொடைக்கரங்களை நீட்டினார். ❖ சிறந்த நடிகராய், தலைவராய், முதல்வராய் எல்லாவற்றிக்கும் மேலாய் சிறந்த மனிதனாய் வாழ்ந்து, இன்று மறைந்தாலும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

**சிந்தனை வினா.**

**சிறந்த அரசியல் தலைவருக்கு இருக்க வேண்டிய பண்புகளாக நீங்கள் கருதுவன யாவை?**

❖ பரந்த அறிவு, அறம் சார்ந்த செயல்பாடு மிக அவசியமான ஒன்று ஆகும். ❖ ஆளுமையில் உறுதி தொண்டர்களை அரவணைத்துச் செல்லும் பண்பும் இருக்க வேண்டும். ❖ மக்களின் அடிப்படை தேவைகள் அறிந்து அதனை பூர்த்தி செய்பவராக இருக்க வேண்டும். ❖ தான் சார்ந்த இயக்கத்தை சரியான முறையில் வழி நடத்தும் பண்பு இருக்க வேண்டும். ❖ பொதுநலமும் மக்கள் முன்னேற்றமும் கொண்ட கொள்கையின் வழி நடப்பதையும் உயிர் மூச்சாய் கொள்ளுதல் வேண்டும்.

## கற்பவை கற்றபின்

**1. தமிழக முதலமைச்சரின் பெயர்களைப் பட்டியலிடுக.**

❖ ஓ.பி.இராமசாமி செட்டியார் ❖ பி.எஸ். குமாரசாமி ராஜா ❖ சி. இராஜகோபாலச்சாரியார் ❖ கு. காமராஜ், ❖எம்.பக்தவத்சலம் ❖ சி.என்.அண்ணாத்துரை ❖ மு.கருணாநிதி ❖ எம்.ஜி.இராமச்சந்திரன் ❖திருமதி. ஜானகி இராமச்சந்திரன் ❖ ஜெ.ஜெயலலிதா ❖ ஓ.பன்னீர்செல்வம் ❖ எடப்பாடி கே.பழனிச்சாமி ❖ மு.க. ஸ்டாலின்.

**2. எம்.ஜி.ஆர் நடித்த திரைப்படங்களில் உள்ள சமூகநலன் சார்ந்த பாடல்களைத் தொகுத்து எழுதுக.**

❖ உன்னை அறிந்தால் நீ உன்னை அறிந்தால் உலகத்தில் போராடலாம் - கண்ணதாசன்.

❖ என்னவளம் இல்லை இந்த திருநாட்டில்? ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்
– பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்.

❖ கடவுள் ஏன் கல்லானார்? இந்த கல்லாய் போன மனிதர்களாளே - கண்ணதாசன்.

❖ ஒன்றே குலமென்று பாடுவோம் ஒருவனே தேவன் என்று போற்றுவோம் - புதுமைப்பித்தன்.

## அறிவுசால் ஔவையார் (விரிவானம்)

**நெடுவினா**

**அறிவுசால் ஔவையார் - என்னும் நாடகத்தைச் சிறுகதை வடிவில் சுருக்கமாக எழுதுக.**

அதியமான் நெடுமான் அஞ்சியைக் காண ஔவையார் அவன் அரண்மனைக்கு வந்தார். அதியமான் ஔவையை வணங்கி வரவேற்று மகிழ்ந்தான். அதியமான் காட்டுவளம் காணச் சென்றபோது கிடைத்த அரிய நெல்லிக்கனியை கொடுத்தான். இக்கனியை உண்டவர் நோய் நொடியின்றி நீண்டகாலம் வாழ்வர் என்றார் அதியமான்.

நாட்டைக் காக்கும் பொறுப்பை உடைய நீ இதனை உண்ணாமல் எனக்கு கொடுத்துவிட்டாயே என்றார் ஔவையார். அரசன் ஒருவன் இறந்து போனால் வேறு ஒருவர் அரசராகிவிடுவார். ஆனால் உங்களைப் போன்ற அறிவில் சிறந்த புலவர் ஒருவர் மறைந்தால் அந்த இழப்பை யாராலும் ஈடுசெய்ய முடியாது என்றார் அதியமான். தமிழின் மீது நீ கொண்டுள்ள பற்று என் உள்ளத்தை உருகச் செய்கிறது என்று கூறி விடைபெற்றுச் சென்றார்.

மறுநாள் அதியமானைச் சந்தித்த ஔவையார் அதியமான் முகத்தில் சூழ்ந்த கவலை குறித்து கேட்டார். என்னோடு பகைமை கொண்ட மன்னன் தொண்டைமான் என் நாட்டின் மீது படையெடுத்து வர உள்ளான். நான் போர் குறித்து அஞ்சவில்லை. போரினால் நாட்டில் ஏற்படும் இழப்புகள் குறித்து கவலை கொள்கிறேன் என்றான் அதியமான். அன்பில் சிறந்த அதியமானே உன் கவலை தீர்க்க நான் தொண்டைமானைச் சந்திக்கச் செல்கிறேன் என்றார் ஔவையார். ஔவையாரை தன் அரண்மனையில் பார்த்த தொண்டைமான், "போரை நிறுத்த வந்திருக்கும் ஔவையே வருக! வருக! என்றான். என் பகைவர் நாட்டில் இருந்து வந்தாலும் தாங்கள் தமிழ்ப்புலவர் அல்லவா? தங்கள் வருகை மகிழ்ச்சி அளிக்கிறது" என்றான்.

தொண்டைமான் தனது படைக்கலக்கொட்டிலில் உள்ள ஒவ்வொன்றையும் ஔவையாரிடம் காட்டினான். வில், அம்பு, வேல், ஈட்டி, வாள், கேடயம், மழு என அத்தனைக் கருவிகளும் அழகாக அடுக்கி வைக்கப்பட்டு புத்தம் புதியனவாய் காட்சியளித்தது. அதனைக் கண்ட ஔவையார், உன் கருவிகள் போல் அதியமானின் கருவிகள் இல்லை. அவை அடிக்கடி போர் புரிந்து நுனி ஒடிந்தும் குருதிக்கறையுடனும் கிடக்கிறது என்றார்.

இதனைக் கேட்ட தொண்டைமான் என் புத்தி தெளிந்துவிட்டது. இதுவரை நான் போர்க்களம் கண்டதில்லை. பல போர்களில் வெற்றி பெற்ற அதியமானை பகைப்பது என் நாட்டிற்கு அழிவைத் தரும் என்று உணர்ந்தேன். என் கண்களைத் திறந்த தாயே, போர் வேண்டா என்று அதியமானிடம் கூறிவிடுங்கள் என்றான். மிக்க மகிழ்ச்சி தொண்டைமானே ... போரில்லா மகிழ்ச்சியில் இந்த உலகம் திளைக்கட்டும்... நான் சென்று வருகிறேன்... என்று கூறி ஔவையார் விடைபெற்றுச் செல்கிறார்.

### **வல்லினம் மிகும் இடங்களும், வல்லினம் மிகா இடங்களும்** ( கற்கண்டு )

**மதிப்பீடு :**

**பின்வரும் தொடர்களை வல்லினம் மிகும், மிகா இடங்கள் என வகைப்படுத்துக.**

1. மிகும் 2. மிகும் 3. மிகாது 4. மிகும் 5.மிகும் 6. மிகாது

7. மிகாது 8. மிகும் 9. மிகாது 10.மிகாது

**சிறுவினா.**

**1. சந்திப்பிழை என்றால் என்ன?**

வல்லினம் மிக வேண்டிய இடத்தில் மிகாமல் எழுதுவதும், மிகக்கூடாத இடத்தில் வல்லினமெய் இட்டு எழுதுவதும் தவறாகும். இதனைச் சந்திப்பிழை அல்லது ஒற்றுப்பிழை எனக் குறிப்பிடுவர்.

**2. வேற்றுமைகளில் வல்லினம் மிகும் இடங்களை எழுதுக.**

❖ இரண்டாம் வேற்றுமை உருபாகிய (ஐ) வெளிப்படையாக வருமிடத்தில் மிகும்.

எ.கா. பாடத்தைப் படி

❖ நான்காம் வேற்றுமை உருபாகிய (கு) வெளிப்படையாக வருமிடத்தில் மிகும்.

எ.கா. அவனுக்குப் பிடிக்கும்.

**3. வல்லினம் மிகாத்தொடர்கள் ஐந்தனை எழுதுக.**

1. எழுதிய பாடல் - பெயரெச்சம் 2. இலை பறித்தேன் - எழுவாய்ச்சொற்கள்
3. சுடுசோறு உண்டான் - வினைத்தொகை 4. சலசல என ஓடியது - இரட்டைக்கிளவி
5. சிறுசிறு அடிகள் - அடுக்குத்தொடர்

### **மொழியை ஆள்வோம்**

1. அடையாளச் சான்றிதழ் 2. ஒலி வேறுபாடறிந்து பொருத்துக. விடை : ஈ ஆ அ இ

3. ஓரெழுத்து ஒரு மொழி : தலைவன்

4. வினாக்களுக்கு விடையளி

1. நம்பிக்கை ஒளி 2. மலை உச்சியில் இருந்து குதிக்கச் சென்றார்

3. குப்பைத்தொட்டி பல உயிர்களுக்கு உதவிய போது நம்பிக்கை பிறந்தது.

4. தன்னம்பிக்கையை கைவிடாமல் தொழிலில் வெற்றி பெற வழிகளைத் தேடியிருப்பேன்.

5. நம்பிக்கை நமக்கு இருக்க வேண்டிய முக்கியமான கை ஆகும்.

10. கட்டுரை எழுதுக.

முன்னுரை :

ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு முதுகெலும்பாய் விளங்குபவர் அந்நாட்டின் இளைஞர் ஆவர். இளைஞர்கள் தாம் நாட்டின் எதிர்காலம் அவர்களின் கைகளில் தான் நாடு உள்ளது என்கிறார் சுவாமி விவேகானந்தர்.

சமுதாயத்தில் இளைஞர்கள் :

இன்றைய இளைஞர்கள் சமூக அக்கறை கொண்டவர்களாய் மாற வேண்டும்; பள்ளி, கல்லூரிகளில் படிக்கும் பொழுதே தேசியமாணவர்படை, நாட்டுநலப்பணித்திட்டம் போன்றவற்றில் பங்கேற்று சமூக அக்கறையை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

இளைஞர்களின் பங்கு :

இளைஞர்கள் இளமைப்பருவத்தை அர்த்தமற்ற செயல்பாடுகளால் வீணடிக்கக்கூடாது. படித்து முடித்தவுடன் தாய்நாட்டில் வேலை பார்த்து தாய்நாட்டின் தரத்தை உயர்த்த வேண்டும்.

தகவல் தொழில்நுட்பமும், இளைஞர்களும் :

தகவல்தொழில்நுட்பத்துறையில் மேலோடு நிற்கும் இளைஞர்கள் அதன் மூலம் நாட்டின் வளர்ச்சிக்கு பல நல்ல உத்திகளைக் கையாள வேண்டும். மக்கள், நாடு ஆகியவற்றின் மீதும் நாட்டின் ஆணி வேரான விவசாயம். இயற்கை அமைப்பின் மீதும், அக்கறையுடனும் பொறுப்புடனும் செயல்பட வேண்டும்.

முடிவுரை :

இன்றைய இளைஞர்கள் இந்தியாவை வல்லரசாய்க் கட்டியெழுப்பும் திறமை படைத்தவர்கள் ஆவர். வல்லரசு இந்தியாவை உருவாக்கும் சக்தி படைத்தவர்கள் இளைஞர்கள் ஆவர்.

## மொழியோடு விளையாடு

**1. வட்டத்திலுள்ள எழுத்துகளைப் பயன்படுத்திச் சொற்களை உருவாக்குக.**

கரும்பு, கம்பு, கல், பழமை, பல், படம், புல், பழம், வேல், வேம்பு, நாடு, நாடகம், புற்று, கடமை, வேற்றுமை, ஒற்றுமை, பற்று, துரும்பு.

**2. சொற்றொடரை முறையாக வரிசைப்படுத்துக.**

1. அதியமான் ஔவைக்கு நெல்லிக்கனி வழங்குதல்
2. தொண்டைமான் படையெடுத்து வரும் செய்தியை அதியமான் ஔவையிடம் தெரிவித்தல்.
3. தொண்டைமானிடம் ஔவை தூது போதல்.
4. தொண்டைமான் ஔவைக்குத் தன் படைக்கருவிகளைக் காட்டுதல்
5. அதியமான் படைச்சிறப்பைத் தொண்டைமானிடம் ஔவை குறிப்பால் உணர்த்துதல்.
6. போர் வேண்டாம் என்று தொண்டைமான் முடிவு செய்தல்.

**பிழைகளைத் திருத்தி எழுதுக.**

1. அதைச் செய்தது நான் அல்லேன்.
2. பானையை உடைத்தது கண்ணன் அல்லன்.
3. மல்லிகை குளத்தில் பூக்கும் மலர் அன்ற.
4. சித்தர்கள் செயற்கையை விரும்பியவர்கள் அல்லர்.
5. பகைவர் நீவீர் அல்லீர்.

இயல் - 8 **ஒன்றே குலம்** (கவிதைப் பேழை)

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. நமனை 2. குலம் 3. நமன் + இல்லை 4. நம்பர்க்கங்கு

**குறுவினா**

1. யாருக்கு எமனைப் பற்றிய அச்சம் இல்லை ?

மனிதர் அனைவரும் ஒரே இனம். உலகைக் காக்கும் இறைவனும் ஒருவன் என்ற எண்ணம் கொண்டவருக்கு எமனைப் பற்றிய அச்சம் இல்லை.

2. மக்களின் உள்ளத்தில் நிலைபெற்று வாழ விரும்புபவர் செய்ய வேண்டியது யாது?

மனிதர் அனைவரும் ஓர் இனம். உலகைக் காக்கும் இறைவன் ஒருவன் என்பதை மனதில் நிறுத்துவதைக் காட்டிலும் வேறு நல்வழி இல்லை என்று நினைத்து வாழ வேண்டும்.

**சிறுவினா**

1. மக்களுக்குச் செய்ய வேண்டிய தொண்டு குறித்துத் திருமூலர் கூறுவது யாது?

படங்கள் அமைந்த கோயிலில் உள்ள இறைவனுக்கு பொருளை காணிக்கையாகச் செலுத்துவது நடமாடும் கோயிலாகிய உடம்பை உடைய மக்களுக்கு அது சேராது.

ஆனால் அடியாராகிய மக்களுக்குக் கொடுப்பது கோயிலில் இருக்கும் இறைவனுக்குச் செய்வதைப் போன்றதாகும்.

**சிந்தனை வினா**

1. அன்றாட வாழ்வில் நாம் பிறருக்கு எத்தகைய உதவிகளைச் செய்யலாம்?

❖ நம் பிறந்த நாள், திருமண நாள் போன்ற சிறப்பான நாட்களில் கொண்டாட்டத்திற்காக செலவு செய்யும் பணத்தில் பாதியை ஏழை எளியவருக்குக் கொடுக்கலாம். ❖ சாலையைக் கடக்கும் பொழுது முதியவர்களை கைப்பிடித்து அழைத்துச் செல்லுதல்.

❖ வீட்டின் பெற்றோர், பெரியவருக்கு தேவையான உதவி செய்தல். ❖ பள்ளியில் உடன் பயிலும் தோழர்களுக்கு ஏதேனும் படிப்பு சார்ந்த உதவிகளைச் செய்தல். ❖ பயன்படுத்திய நல்ல ஆடைகளை உடுத்த ஆடையின்றித் தவிக்கும் ஏழைகளுக்கு வழங்குதல் முதலியவற்றைச் செய்யலாம்.

## மெய்ஞ்ஞான ஒளி (கவிதைப் பேழை)

### மதிப்பீடு :

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. ஐம்பொறிகளை 2. பகர்ந்தனர் 3. ஆனந்தம் + வெள்ளம் 4. உள்ளிருக்கும்.

**குறுவினா**

1. **உண்மை அறிவை உணர்ந்தோர் உள்ளத்தில் நிகழ்வது யாது?**

   உண்மை அறிவை உணர்ந்தோர் உள்ளத்தில் இறைவன் இன்பப்பெருக்காய்க் கரை கடந்து, பொங்கிடும் கடலாக விளங்குகின்றான்.

2. **மனிதனின் மனம் கலங்கக் காரணமாய் அமைவது யாது?**

   இறைவன் மீது பற்று வைக்காமல் பணத்தின் மீது பற்று வைப்பது மனிதனின் மனம் கலங்கக் காரணம் ஆகும்.

**சிறுவினா**

1. **குணங்குடியார் பராபரத்திடம் வேண்டுவன யாவை?**

❖ தீய எண்ணங்களை அழித்தவர் மனதில் எழுந்து அருளி இருக்கும் மேலான பொருளே, அறிவு ஒளியே, உன் மீது பற்று வைக்காமல் பணத்தின் மீது ஆசை வைத்ததால் நான் மனம் கலங்கி அலைகின்றேன்.

❖ உண்மை அறிவை உணர்ந்தவர் உள்ளத்தில் இனப்பெருக்காய் கரை கடந்து பொங்கிடும் கடலே.

❖ மேலான பொருளே ஐம்பொறிகளை அடக்கி ஆள்வது மிகவும் அரிய செயலாகும். ஐம்பொறிகளின் இயல்பை உணர்ந்து நல்வழிப்படுத்தும் அறிவினை எனக்குத் தந்து அருள்செய்வாயாக என்கிறார் குணங்குடியார்.

**சிந்தனை வினா**

**ஐம்பொறிகளைக் கொண்டு நாம் செய்ய வேண்டிய நற்செயல்கள் யாவை?**

❖ நல்லனவற்றையே காண வேண்டும். தீயவற்றை ஒரு போதும் கண்களால் காணக்கூடாது.

❖ உடலைக் கெடுக்கும் உணவுகளைச் சுவைக்காது தவிர்க்க வேண்டும். இனிய சொற்களையே பேச வேண்டும்.

❖ நல்லவர்களின் பேச்சைக் கேட்க வேண்டும். நாள்தோறும் நல்ல சிந்தனைகளைக் கேட்க வேண்டும்.

❖ உடல் வலிமையால் நலிந்தோரைத் துன்புறுத்தாது இயன்ற உதவிகளைச் செய்ய வேண்டும்.

❖ மூக்கு சுவாசத்திற்கு உரியது. அதன் மூலம் மூச்சுப்பயிற்சி செய்து உடல் நலத்தைக் காக்க வேண்டும்.

## கற்பவை கற்றபின்

**கண்ணி வகையில் பாடப்பட்ட வேறு பாடல்களைத் தொகுத்து எழுதுக.**

❖ கண்ணி : இரண்டு இரண்டு அடிகள் எதுகையால் தொடுக்கப்படும் பாடல் கண்ணி வகைப் பாடல் ஆகும்.

❖ சீராருந் தெய்வத் திருவருளாம் பூமிமுதல்
பாரதி யாண்ட பதியே பராபரமே!

❖ கண்ணாரக் கண்டோர் கருப்பொருள்காணாமலருள்
விண்ணூ டிருந்த இன்ப வெற்பே பராபரமே!

❖ தித்திக்கும் தெள்அமுதாய்த் தெள்அமுதின் மேலான
முத்திக்கனியே என் முத்தமிழே - புத்திக்குள்

❖ உண்ணப்படும் தேனே உன்னோடு உவந்துரைக்கும்
விண்ணப்பம் உண்டு விளம்பக்கேள் - மண்ணில்

## அயோத்திதாசர் சிந்தனைகள் ( உரைநடை உலகம் )

## மதிப்பீடு :

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. தென்னிந்திய 2. ஒருபைசாத்தமிழன் 3. கைத்தொழிலும் 4. ஆழ்ந்தபடிப்பு 5. மழை

**குறுவினா**

**1. அயோத்திதாசரிடம் இருந்த ஐந்து பண்புகள் யாவை?**

❖ நல்ல சிந்தனை ❖ சிறப்பான செயல் ❖ உயர்வான பேச்சு ❖ உவப்பான எழுத்து
❖ பாராட்டத்தக்க உழைப்பு

**2. ஒரு சிறந்த வழிகாட்டி எவ்வாறு இருக்க வேண்டும் என அயோத்திதாசர் கூறுகிறார்?**

மக்களுள் மாமனிதராக, அறிவாற்றல் பெற்றவராக, நன்னெறியைக் கடைப்பிடிப்பவராக ஒரு சிறந்த வழிகாட்டியாக இருக்க வேண்டும் என்கிறார் அயோத்திதாசர்.

**3. திராவிட மகாஜன சங்கம் எவற்றிற்காகப் போராடியது?**

❖ சாலைகள் அமைத்தல் ❖ கால்வாய்கள் பராமரித்தல் ❖ பொதுமருத்துவமனை அமைத்தல், ❖கல்விக்கூடங்கள் ஏற்படுத்துதல் ❖ பாதுகாப்பிற்கு காவல்துறை நியமித்தல் போன்றவற்றிற்காக திராவிடமகாஜனச்சங்கம் போராடியது.

**சிறுவினா**

**1. அயோத்திதாசரின் இதழ்ப்பணி பற்றி எழுதுக.**

அயோத்திதாசர் 1907 – ஆம் ஆண்டு சென்னையில் 'ஒரு பைசாத்தமிழன்' என்னும் வாரஇதழைக் காலணா விலையில் தொடங்கினார். ஓர் ஆண்டிற்குப் பின் அவ்விதழின் பெயரைத் தமிழன் என மாற்றினார். "தமிழன்" இதழ் மூலம் தமிழ்நாடு மட்டுமின்றி மைசூர், கோலார், ஐதராபாத், இரங்கூன், மலேசியா, ஆஸ்திரேலியா, தென் ஆப்பிரிக்கா போன்ற நாடுகளில் வாழ்ந்த தமிழர்களுக்கும் பகுத்தறிவுச்சிந்தனை, இன உணர்வு, சமூகச்சிந்தனை ஆகியவற்றை ஊட்டினார்.

**2. அரசியல் விடுதலைப் பற்றிய அயோத்திதாசரின் கருத்துகள் யாவை?**

❖ விடுதலை என்பது வெறும் ஆட்சி மாற்றமாய் இல்லாமல் மக்களின் வாழ்க்கையில் நல்ல மாற்றங்களை ஏற்படுத்துவதாய் அமைய வேண்டும். ❖ சுயராஜ்யத்தின் நோக்கம் அதிகாரத்தைக் கைப்பற்றுவதாய் மட்டும் இருக்கக்கூடாது. மக்களின் சமூக பொருளாதார வளர்ச்சியை உள்ளடக்கியதாகவும் இருக்க வேண்டும். ❖ மக்களின் வாழ்க்கையில் நல்லமாற்றம் உண்டானால் மட்டுமே நாடு முன்னேற முடியும் என்பது அயோத்திதாசரின் அரசியல் விடுதலைப் பற்றிய கருத்தாகும்.

**நெடுவினா**

**வாழும் முறை, சமத்துவம் ஆகியன பற்றிய அயோத்திதாசரின் சிந்தனைகளைத் தொகுத்து எழுதுக.**

வாழும் முறை :

❖ மக்கள் அனைவரும் அன்பு கொண்டு வாழ வேண்டும். கோபம், பொறாமை, பொய், களவு போன்றவற்றை நீக்கி வாழ வேண்டும். ❖ பிற உயிர்களுக்குத் துன்பம் தரக்கூடாது. மதியை அழிக்கும் போதைப்பொருள்களைக் கையாலும் தொடுதல் கூடாது. ❖ குடும்பத்தில் அன்பும் ஆறுதலும் நிறைந்திருக்க வேண்டும். அப்பொழுது அக்குடும்பம் வாழும் ஊர் முழுவதும் அன்பும் ஆறுதலும் பெறும். அதனால் நாடு முழுவதும் அன்பும் ஆறுதலும் பெறும். ❖ இத்தகைய நாட்டில் புலியும் பசுவும் ஒரே நீர்த்துறையில் நீர் அருந்தும் என்பது அயோத்திதாசர் கருத்துகள் ஆகும்.

சமத்துவம் :

❖ மக்கள் அனைவரும் சமஉரிமை பெற்று வாழ வேண்டும். ❖ கல்வி, வேளாண்மை, காவல்துறை போன்ற அனைத்துத்துறைகளிலும் சமவாய்ப்பு வழங்க வேண்டும். ❖ ஊராட்சி, நகராட்சி, சட்டமன்றம், நாடாளுமன்றம் போன்றவற்றிலும் உரிய பிரதிநித்துவம் அனைவருக்கும் வழங்கப்பட வேண்டும். இந்து, பௌத்தர், கிறித்துவர், இசுலாமியர், ஆங்கிலோ இந்தியர், ஐரோப்பியர் போன்ற அனைவருக்கும் வாய்ப்பளிக்க வேண்டும் என்பதை அயோத்திதாசரின் கருத்துகள் ஆகும்.

**சிந்தனை வினா**

**ஒரு சமூகம் உயர்வடைய வேண்டுமானால் மக்களிடம் இருக்க வேண்டிய உயர்பண்புகள் யாவை?**

❖ அரசாங்கம் கூறும் சட்டதிட்டங்களைப் பின்பற்ற வேண்டும். ❖ சண்டை சச்சரவுகள் இன்றி வாழ்தல், ஒற்றுமையைப் பேணுதல். ❖ பொதுஇடங்களைச் சரியான முறையில் பயன்படுத்துதல். ❖ பண்பாடு, நாகரிகம் முதலியவற்றை அடுத்த தலைமுறையினருக்கு எடுத்துச் செல்லுதல். ❖ பெரியோரை மதித்தல், இறைவழிபாடு போன்றவற்றை கடைப்பிடித்தல் ஆகிய உயர்பண்புகள் அடிப்படை பண்புகளாகும்.

## கற்பவை கற்றபின்

**சமூகச் சீர்திருத்தத்திற்குப் பாடுபட்ட சான்றோர்களின் பெயர்களைத் திரட்டுக.**

1. மருத்துவர் முத்துலெட்சுமி ரெட்டி 2. வேலூர் இராமாமிர்தம் அம்மையார் 3. ஈ.வெ.ரா.பெரியார் 4.பாரதியார் 5. நிவேதிதா தேவி 6. அம்பேத்கர் 7. பாரதிதாசன்

## மனித யந்திரம்

**நெடுவினா**

**மனித யந்திரம் கதையை முகுந்தன் கூறுவதாக மாற்றி எழுதுக.**

என் பெயர் முகுந்தன். கடந்த நாற்பத்தைந்து வருடமாய் ஒரே பலசரக்குக்கடையில் குமாஸ்தா வேலை. கடையும் நானும் ஒன்றாய் வளர்ந்தோம். ஆனால் நான் வளரவில்லை. என் சம்பளம் ஆமை வேகத்தில் ஓடி இப்போது தான் மாதம் இருபது ரூபாயை எட்டியிருக்கிறது. என்ன பண்ண? ஏன் என் மனம் இப்போதெல்லாம் ஏதேதோ ஆசைப்படுகிறது? வீட்டில் குழந்தைக்கு பால், மீதி பாலை விற்று காசாக்க மாடும் கன்றும் வாங்க வேண்டும். தெற்குத் தெரு மாவன்னாவுக்கு மேடோவர் செய்த நிலத்தைத் திருப்ப வேண்டும். கால்மேல்கால் போட்டு கூப்பிட்ட குரலுக்கு வேலை செய்ய ஆள், முகுந்தன் ஸ்டோர் இப்படியெல்லாம் என் மனம் ஏன்? ஆசைப்படுகிறது.

ஒரு முறை கொழும்புக்கு போய்விட்டு தங்கஅரைஞாண், கடிகாரச்சங்கிலி, வாட்டசாட்டமானஉடம்பு கையில் நல்ல ரொக்கத்தோடு திரும்ப வேண்டும். தினசரி பணப்புழக்கம், வரவுசெலவு முதல் அனைத்து நம் பொறுப்பில் தான் இருக்கு. இருப்பதைச் சுருட்டிக் கொண்டு ரயிலேறித் தூத்துக்குடி போயிடலாம். கல்லாப்பெட்டியைத் திறந்து எண்ணினேன். நாற்பதும் சில்லறையும் குவிந்தன. அனைத்தையும் மடியில் கொட்டிக்கொண்டு மடக்குக்கதவுகளைப் பூட்டினேன்.

கையில் சாவிக்கொத்து இருப்பதை மறந்து ரயில்வேஸ்டேஷனை நோக்கி நடந்தேன். ஸ்டேஷனுக்கு வந்தாய் விட்டது. பெட்ரோமாக்ஸ், விளக்கடியில் தூங்கும் சில்லறைச்சிப்பந்திகள், பக்கத்து வெற்றிலை பாக்குக்கடையில் வாயடிக்கும் போர்ட்டர்கள், அவ்வளவு கூட்டம் இல்லை. சந்தோஷப்பட்டுக் கொண்டேன். டிக்கட் கவுண்டரில் பத்தே காலாணாவைக் கொடுத்து டிக்கெட் வாங்கிக்கொண்டு பிளாட்பாரத்தில் நுழைந்தேன். வண்டியில் ஏறி ஜன்னல் ஓரத்தில் அமர்ந்தேன். அப்போது முகுந்தா என்ன இந்த ராத்திரியில் ரயில்வே போலிஸைச் சேர்ந்த என் நண்பர் குரல் கேட்டுத் திரும்பினேன். என்னையறியாமலே தூத்துக்குடி என்று கூறிவிட்டேன். நாக்கு வறண்டு கண்கள் சுழன்றன.

சோடாக்காரன் நீட்டிய கலர் சோடாவை வாங்கிக் குடித்துவிட்டு, ஓரணாவை கையில் கொடுத்து விட்டு கண்களை மூடி அமர்ந்தேன். ரயில் விசில் கீரிச்சிட்டது. இவன் பார்த்து விட்டானே. நாளை குட்டு வெளிப்பட்டு விடுமே என்று யோசித்து ரயிலை விட்டு இறங்கி கடையை நோக்கி நடந்தேன். பாஸ் இல்லாமல் எப்படி கடலில் செல்வது? புத்தியைச் செருப்பால் அடிக்கணும். ஸ்டோருக்கு வந்து சில்லறையை பெட்டிக்குள் போட்டுவிட்டு, முகுந்தன் பற்று பதினொன்றே காலணா என்று எழுதினேன். முதலாளி வீட்டை நோக்கி நடந்தேன்.

அவரை மெதுவாக ஐயா என்று அழைத்து சாவியை கொடுத்தேன். சரி விடியனெ வரப்போ மூக்கென வண்டியைப் போட்டுக்கிட்டு வரச்சொல்லும் என்று கூறிவிட்டு படுத்துக்கொண்டார் முதலாளி. நான் முதலாளியைப் பார்த்துக்கொண்ட நின்றேன். பின்னர் மெதுவாய்த் திரும்பி நடந்தேன்.

## கற்பவை கற்றபின்

**வறுமையிலும் செம்மையாக வாழ்ந்த யாரேனும் ஒருவரைப் பற்றிய செய்தியை அறிந்து வந்து வகுப்பறையில் பேசுக.**

குழந்தைப்பருவத்தை வறுமையில் கழித்து தந்தையின் குறைந்த வருமானம் குடும்பச் செலவுகளுக்குப் போதாத போது பள்ளிப்படிப்பைத் தொடர்ந்துக் கொண்டே வீடுவீடாகச் செய்தித்தாள் விநியோகித்து தன் தந்தைக்கு உதவியதுடன் பிற்காலத்தில் அதே செய்தித்தாளில் தலைப்புச்செய்தியாய் மாறும் அளவிற்கு வறுமையிலும் செம்மையாக வாழ்ந்து இந்திய நாட்டின் குடியரசுத்தலைவராய் உயர்ந்தவர் திரு. ஏ.பி. ஜே. அப்துல்கலாம் அவர்கள் ஆவார்.

## **யாப்பு இலக்கணம்** (கற்கண்டு)

## மதிப்பீடு :

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 1. இரண்டு 2. நிரையசை 3. ஐந்து 4. மோனை

**பொருத்துக.**

1. வெண்பா - செப்பலோசை 2. ஆசிரியப்பா - அகவலோசை 3. கலிப்பா - துள்ளல் ஓசை
4. வஞ்சிப்பா - தூங்கலோசை

**சிறுவினா.**

**1. இருவகை அசைகளையும் விளக்குக.**

எழுத்துகள் ஒன்றோ பலவோ சேர்ந்து அமைவது அசை எனப்படும்.

அசை நேரசை, நிரையசை என இரண்டு வகைப்படும்.

| நேரசை | நிரையசை |
|---|---|
| குறில் தனித்து வரும் (க),<br>குறில் தனித்து ஒற்றுடன் வரும் (கல்),<br>நெடில் தனித்து வரும் ( பா),<br>நெடில் தனித்து ஒற்றுடன் வரும். ( பால்). | இரு குறில் இணைந்து வரும் (கட),<br>இருகுறில் இணைந்து ஒற்றுடன் வரும் (கடல்),<br>குறில் நெடில் இணைந்து வரும் ( கடா),<br>குறில் நெடில் இணைந்து ஒற்றுடன் வரும். ( கடாம்) |

**2. தளை என்பது யாது?**

யாப்பு உறுப்புகளுள் ஒன்று தளை ஆகும். தளை என்ற சொல் பிணைப்பு என்று பொருள்படும். சீர்கள் ஒன்றோடு ஒன்று பொருந்துவதைத் தளை என்பர். நின்ற சீரின் இறுதி அசையும் வரும் சீரின் முதல் அசையும் எவ்வகை அசை என்பதைப் பொறுத்து தளைகள் ஏழு வகைப்படும்.

**3. அந்தாதி என்றால் என்ன?**

ஓர் பாடலின் இறுதிச்சீர் அல்லது அடியின் இறுதிப்பகுதி அடுத்த பாடலின் முதல்சீர் அல்லது அடியின் முதலில் வருமாறு பாடப்படுவது அந்தாதி எனப்படும்.

**4. பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

பா நான்கு வகைப்படும். அவை 1. வெண்பா 2. கலிப்பா 3. ஆசிரியப்பா 4. வஞ்சிப்பா ஆகும்.

## மொழியோடு விளையாடு

**படத்தைப் பார்த்து எழுதுக.**

| | | | |
|---|---|---|---|
| ஓரெழுத்துச் சொல் | - | ஆ | பூ |
| இரண்டு எழுத்துச்சொல் | - | வால் | இலை |
| மூன்று எழுத்துச்சொல் | - | கன்று | பழம் |
| நான்கு எழுத்துச்சொல் | - | புற்கள் | வாழைப்பூ |
| ஐந்து எழுத்துச்சொல் | - | கொம்புகள் | கன்றுகள் |

## **திருக்குறள்** (வாழ்வியல்)

### மதிப்பீடு :

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. பகைவருக்கு உதவுதல் 2. ஊக்கம் 3. பெருமை + செல்வம் 4. ஊர் + ஆண்மை 5. திரிந்தற்று

**பொருத்துக.**

1. இன்பம் தருவது - பண்புடையவர் நட்பு
2. நட்பு என்பது - சிரித்து மகிழ மட்டுமன்று
3. பெருமையை அழிப்பது - குன்றி மணியளவு தவறு
4. பணிவு கொள்ளும் காலம் - செல்வம் மிகுந்த காலம்
5. பயனின்றி அழிவது - நற்பண்பில்லாதவன் பெற்ற பெருஞ்செல்வம்

**குறுவினா.**

1. **எது பெருமையைத் தரும்?**

காட்டு முயலை வீழ்த்திய அம்பினை ஏந்துவதை விட யானைக்குக் குறிவைத்துத் தவறிய வேலை ஏந்துவது பெருமை தரும்.

2. **நண்பர்களின் இயல்பை அடித்துக் காட்டும் அளவுகோல் எது?**

நமக்கு வரும் துன்பம் நமது நண்பர்களின் உண்மையான இயல்பை அளந்து காட்டும் அளவுகோல் ஆகும்.

3. **இவ்வுலகம் யாரால் இயங்குவதாகத் திருக்குறள் கூறுகிறது?**

பண்பு உடைய சான்றோர்கள் வாழ்வதால் தான் இவ்வுலகம் அழியாமல் இயங்குவதாகத் திருக்குறள் கூறுகிறது.

4. **நட்பு எதற்குரியது என்று திருவள்ளுவர் குறிப்பிடுகிறார்?**

நட்பு சிரித்துப் பேசி மகிழ்வதற்கு மட்டும் உரியது அன்று. நண்பர்கள் தவறு செய்தால் அவர்களைக் கண்டித்து நல்வழிப்படுத்துவதற்கும் உரியது என்று திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

**படத்திற்கு பொருத்தமான திருக்குறளை எழுதுக.**

கான முயல்எய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது.

இயல் - 9

## **உயிர்க்குணங்கள்** (கவிதைப் பேழை)

### மதிப்பீடு :

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. அழுக்காறு 2. பொச்சாப்பு 3. இன்பம் + துன்பம் 4. குணங்களெல்லாம்

**பொருத்துக.**

1. நிறை - மேன்மை 2. பொறை - பொறுமை 3. மதம் - கொள்கை 4. மையல் - விருப்பம்

**குறுவினா.**

1. **மனிதர்களின் பொது இயல்பாகக் கன்னிப்பாவை நூல் கூறுவது யாது?**

மனிதர்களின் பொது இயல்புகள் :

❖ அறிவு ❖ கருணை ❖ ஆசை ❖ அச்சம் ❖ அன்பு ❖ இரக்கம் ❖ சினம், ❖ நாணம் ❖ மேன்மை ❖ பொறாமை ❖ எளிமை ❖ நினைவு ❖ துணிவு ❖ சோர்வு ❖ வெறுப்பு ❖ மகிழ்ச்சி, ❖ பகை ❖ வெற்றி ❖ இளமை ❖ முதுமை ❖ மறதி ❖ விருப்பம்.

2. **மனிதர்களிடம் உள்ள பண்புகளாகக் கன்னிப்பாவை நூல் கூறுவனவற்றுள் நற்பண்புகள் யாவை?**

❖ அறிவு ❖ கருணை ❖ அன்பு ❖ இரக்கம் ❖ நாணம் ❖ மேன்மை ❖ எளிமை ❖ நினைவு ❖ துணிவு, ❖ இன்பம் ❖ பொறுமை ❖ மானம் ❖ அறம் ❖ ஊக்கம் ❖ வெற்றி.

**சிந்தனை வினா.**

**1. மனிதர்கள் வளர்க்க வேண்டிய பண்புகளாகவும், விலக்க வேண்டிய பண்புகளாகவும் நீங்கள் கருதுவன யாவை?**

வளர்க்க வேண்டிய பண்புகள் :

❖ இனிய சொற்களைப் பேசுதல் ❖ பிறரைப் பாராட்டுதல் ❖ சமூக உணர்வு ❖ பொறுமை ❖ இரக்கம், ❖ தலைமைப்பண்பு ❖ பணிவு ❖ மன்னிக்கும் குணம் ❖ எளிமை

விலக்க வேண்டிய பண்புகள் :

❖ பொறாமை ❖ சோர்வு ❖ வெறுப்பு ❖ பகை ❖ பேராசை ❖ சினம் ❖ அச்சம்

**கீழ்க்காணும் தொடர்களை மாற்றி அமைக்க.**

1. பூம்புகார்ச் சிற்பங்கள் எவ்வாறு உள்ளன?
2. அறம் செய்ய வேண்டும்.
3. முயன்றால் முடியாதது எதுவுமில்லை.
4. மருத்துவர் மருத்துவத்தைக் கற்பித்தார்.

## இளைய தோழனுக்கு (கவிதைப் பேழை)

## மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. கை குலுக்கிக்
2. கைக்குழந்தைகள்
3. விழித்து + எழும்
4. போவது + இல்லை
5. படுக்கை + ஆகிறது.
6. தூக்கிக் கொண்டே
7. விழித்தெழும்

**குறுவினா.**

**1. கவலைகளைக் கவிஞர் எவ்வாறு உருவகப்படுத்துகிறார்?**

கவலைகளைக் கவிஞர் கைக்குழந்தைகளாக உருவகப்படுத்துகிறார்.

**2. தோல்வி எப்போது தூண்டுகோலாகும்?**

உலகிற்கு ஒளியேற்ற எண்ணெய்யாய், திரியாய் நம்மையே மாற்றினால் தோல்வி நம் உயர்விற்குத் தூண்டுகோலாகும்.

**சிறுவினா.**

**1. பூமி எப்போது பாதையாகும்?**

நாம் செயல்படத் தொடங்கினால் நாளை மட்டும் அல்ல, இன்றும் நமது நாள் தான். உன் பாதங்கள் நடக்கத் தயாராய் இருந்தால் நீ செல்லும் பாதைகள் உன்னை எதிர்க்காது. பூமியே உனக்குப் பாதையாய் மாறும்.

**சிந்தனை வினா.**

**வாழ்வில் உயர நம்பிக்கையைப் போன்று வேறு என்னென்ன பண்புகள் தேவை என்று நீங்கள் கருதுகிறீர்கள் ?**

❖ நேர்மறை எண்ணம் ❖ நல்ல நூல்களை வாசிக்கும் பழக்கம் ❖ அமைதி ❖உயர்வான எண்ணம், ❖ தூய்மையான உள்ளம் ❖ பொதுநலம் ❖ நேர்மை ❖ மன்னிக்கும் குணம்.

## கற்பவை கற்றபின்

**1. தன்னம்பிக்கை என்னும் தலைப்பில் கவிதை எழுதுக.**

உயர்ந்த கனவுகள் - நாளும்
உனக்குள்ளே பூக்கட்டும்
முயற்சியும் உழைப்பும் - நாளை
முத்திரை வார்ப்புகளை வார்க்கட்டும்
தாங்கி பிடிக்கும் கையாள
தன்னம்பிக்கையே இழந்து விடாதே
விடாமுயற்சிதான் இப்பூமியில்
வெற்றிப்பூக்களாகும் மறந்துவிடாதே.

**2. நம்பிக்கையே வெற்றி – என்பதை உணர்த்தும் கதை.**

ஓர் ஊரில் விவசாயி ஒருவன் இருந்தான். அவனிடம் வயதான கழுதை ஒன்று இருந்தது. அக்கழுதை ஒரு நாள் தோட்டத்தில் இருந்த கிணற்றில் தெரியாமல் விழுந்து விட்டது. விவசாயிக்கு எப்படி கழுதையை வெளியே கொண்டுவருவது எனத் தெரியவில்லை. அக்கழுதையை வெளியே கொண்டு வருவதற்குச் செலவு அதிகமாகும் என எண்ணிய விவசாயி அதனால் எந்த பயனும் இல்லை என எண்ணி ஊர்மக்களிடம் பேசி ஒரு முடிவெடுத்தான். ஆளுக்கு கொஞ்சம் மண்ணை எடுத்துக் கிணற்றில் போட வேண்டும். அப்போது கிணற்றில் விழுந்த கழுதை மண் மூடி இறந்து விடும். அவனுக்கும் செலவு மிச்சம் என்பது அவன் முடிவு.

எல்லாரும் கொஞ்சம் கொஞ்சமாக மண்ணை எடுத்துப் போட்டனர். கொஞ்சநேரம் கழித்து கழுதையின் சத்தம் கேட்கவில்லை. கழுதை இறந்து விட்டது என எண்ணி விவசாயி எட்டிப் பார்த்தான். ஆனால் மக்கள் போட்ட மண்ணை தனக்கு சாதகமாக மாற்றி கழுதை மேலே வர தன்னம்பிக்கையோடு முயற்சி செய்து கொண்டிருந்தது. அதைப் பார்த்த விவசாயிக்கும் மக்களுக்கும் நம்பிக்கை பிறந்தது. சிறிதுநேரம் கழுதை பத்திரமாக மேலே வந்தது. கழுதையின் நம்பிக்கை அதன் உயிரைக் காப்பாற்றியது.

## சட்டமேதை அம்பேத்கர் ( உரைநடை உலகம் )

### மதிப்பீடு :

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. அம்பேத்கர் 2. இரட்டை வாக்குரிமையை 3. சமாஜ் சமாத சங்கம் 4. பாரத ரத்னா

**கோடிட்ட இடத்தை நிரப்புக.** 1. புத்தரும் அவரின் தம்மமும் 2. சுதந்திரத் தொழிலாளர் கட்சி 3. இலண்டன்

**குறுவினா**

**1. அம்பேத்கர் தன் பெயரை ஏன் மாற்றிக் கொண்டனர் ?**

அம்பேத்கர் ஒடுக்கப்பட்ட பிரிவைச் சேர்ந்தவர் என்பதால் பள்ளிப்பருவத்திலேயே பல அவமதிப்புகளைச் சந்தித்தார். அச்சூழலில் அவர் ஆசிரியரான மகாதேவ்அம்பேத்கர் என்பவர், இவர் மீது அன்பும் அக்கறையும் கொண்டவராய் விளங்கினார். அதனால் தன் பெயரை பீமாராவ்ராம்ஜி அம்பேத்கர் என மாற்றிக்கொண்டார்.

**2. தீண்டாமைக்கு எதிராக அம்பேத்கர் மேற்கொண்ட பணிகள் இரண்டினை எழுதுக.**

❖ அம்பேத்கர் தீண்டாமைக்கு எதிராக ஒடுக்கப்பட்டபாரதம் என்னும் இதழை 1927 - ஆம் ஆண்டு தொடங்கினார். ❖ சமத்துவச்சமுதாயத்தை அமைக்கும் நோக்கில் இவர் சமாஜ் சமாத சங்கம் என்னும் அமைப்பை உருவாக்கினார்.

**3. வட்டமேசை மாநாட்டில் கலந்து கொள்ளும் முன் அம்பேத்கர் கூறியது யாது?**

1930 – ஆம் ஆண்டு இலண்டனில் நடைபெற்ற வட்டமேசைமாநாட்டில் கலந்து கொள்வதற்கு முன் அம்பேத்கர், “என் மக்களுக்கு நியாயமாய் என்ன கிடைக்க வேண்டுமோ அதற்காகப் போராடுவேன், அதே சமயத்தில் சுயராஜ்ய கோரிக்கைகளை முழு மனதுடன் ஆதரிப்பேன்” என்று கூறினார்.

**சிறுவினா.**

**1. இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் உருவாக அம்பேத்கர் ஆற்றிய பணிகள் யாவை?**

❖ 1947 – ஆம் ஆண்டு இந்திய விடுதலைக்குப்பின் அம்பேத்கர் சட்ட அமைச்சராகவும், இந்திய அரசியல் சாசனசபையின் தலைவராகவும் பொறுப்பேற்றுக் கொண்டார். ❖ இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தை எழுத அம்பேத்கர் தலைமையில் அவர் உட்பட ஏழு பேர் கொண்ட அரசியல் அமைப்புச் சட்டவரைவுக்குழு உருவாக்கப்பட்டது. ❖ இக்குழு தனது அறிக்கையை 1948 பிப்ரவரி 21 இல் ஒப்படைத்தது. இக்குழு அப்போது மக்களாட்சி நடைபெற்ற நாடுகள் பலவற்றிலிருந்து இந்திய நடைமுறைக்குப் பொருந்தும் சட்டக்கூறுகளை இந்திய அரசியலமைப்பு வரைவில் சேர்த்தது. ❖ அம்பேத்கரால் உருவாக்கப்பட்ட இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் குடிமக்களின் உரிமைகளுக்குப் பல வகைளில் பாதுகாப்பை அளிப்பதாக அமைந்தது.

**2. அம்பேத்கரின் முதல் வெற்றி பற்றி எழுதுக.**

1935 - ஆம் ஆண்டில் மாநில சுயாட்சி வழங்குவதற்கான இந்தியஅரசாங்கச்சட்டம் நிறைவேற்றப்பட்டது. அதன்படி பொதுத்தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. அம்பேத்கர் சுதந்திரதொழிலாளர்கட்சியைத் தொடங்கித் தேர்தலில் போட்டியிட்டார். அம்பேத்கர் வெற்றி பெற்றதுடன் அவரின் கட்சி வேட்பாளர்கள் பதினைந்து பேரும் வெற்றி பெற்றனர்.

**நெடுவினா**

**பூனாஒப்பந்தம் பற்றி எழுதுக.**

❖ ஒடுக்கப்பட்டோருக்குத் தனிவாக்குரிமையும், விகிதாச்சாரப் பிரதிநிதித்துவமும் வழங்கப்பட வேண்டும் என்று இரண்டாவது வட்டமேசைமாநாட்டில் அம்பேத்கர் வலியுறுத்தினார். ❖ இதன் விளைவாக ஒரு தொகுதியில் பொதுவேட்பாளரை தேர்ந்தெடுக்க மற்றும் ஒடுக்கப்பட்ட சமூக வேட்பாளரைத் தேர்ந்தெடுக்க என இரட்டைவாக்குரிமை வழங்கப்பட்டது. இதை மறுத்து காந்தியடிகள் உண்ணாவிரதம் மேற்கொண்டார். ❖ பின் 1931 – ஆம் ஆண்டு செப்டம்பர் இருபத்து நான்காம் நாள் காந்தியடிகளும் அம்பேத்கரும் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டனர். அதன்படி ஒடுக்கப்பட்டோருக்குத் தனிவாக்குரிமை என்பதற்குப் பதிலாகப் பொதுவாக்கெடுப்பில் தனித்தொகுதி வழங்குவது என முடிவு செய்யப்பட்டது. இந்த ஒப்பந்தமே பூனா ஒப்பந்தம் எனப்பட்டது.

**சிந்தனை வினா.**

**பாகுபடில்லாத மக்கள் சமூகம் உருவாக நமது கடமைகளாக நீங்கள் கருதுவன யாவை?**

- ❖ நாட்டில் மதநல்லிணக்கம் வேண்டும்; மக்கள் ஏற்றத்தாழ்வின்றி வாழ வேண்டும்.
- ❖ பெண்களுக்கான சமத்துவம், பாகுபாடில்லாத சமுதாயம் உருவாக அனைவரும் பாடுபட வேண்டும்.
- ❖ சமுதாயத்தில் மனிதநேயம் போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டும்.
- ❖ இருபாலரும் சமஉரிமை பெற்று வாழ்ந்தால் பாகுபாடில்லாதசமூகம் உருவாகும்.

## கற்பவை கற்றபின்

**1. சமூகச் சீர்திருத்தத்திற்கு உழைத்த பிற தலைவர்களின் பெயர்களைப் பட்டியலிடுக.**

❖ பெரியார் ❖ காந்தியடிகள் ❖ முத்துலெட்சுமிரெட்டி ❖ பாரதியார் ❖ அயோத்திதாசர் ❖ மூவலூர் இராமாமிர்தம் ❖ பாரதிதாசன் ❖ அம்பேத்கர்

**2. அம்பேத்கரின் பண்புநலன்களாக நீங்கள் உணர்ந்தவற்றை எழுதுக.**

❖ மனிதநேயம் ❖ கடின உழைப்பு ❖ விடாமுயற்சி ❖ சமூகஅக்கறை ❖ படிப்பின் மீது ஆர்வம், ❖ நாட்டுப்பற்று ❖ புரட்சியாளர் ❖ பன்முக ஆளுமை இவையெல்லாம் அம்பேத்கரின் மிகச்சிறந்த பண்புகளாக நாங்கள் உணர்கிறோம்.

## பால்மனம் ( விரிவானம் )

## மதிப்பீடு :

**நெடுவினா**

**குழந்தை கிருஷ்ணாவின் பண்புநலன்களைப் பற்றித் தொகுத்து எழுதுக.**

மனிதப்பிறவி என்பது மிகவும் விசித்திரமானது. அதிலும் குழந்தைப்பருவம் மிகவும் அழகானது. குழந்தை கிருஷ்ணாவின் மனம் எவ்வளவு அழகானது என்பதை இக்கட்டுரையில் காண்போம். குழந்தை கிருஷ்ணா வெள்ளிரிபிஞ்சு முகம், சிறகு போன்ற இமைகள், கண்ணாடி விழிகள், பூ போன்ற உதடுகள், தெய்வ வடிவான அழகு முகம்.

குழந்தை கிருஷ்ணா தெருவோரம் படுத்து இருந்த தெருநாய் மீது பரிவு காட்டினாள். தெருநாயும் வீட்டுநாயும் வேறல்ல என்ற சமரசநோக்கம் அவளிடம் இருந்தது. கீரை கொண்டுவரும் பாட்டியைத் தொட்டு பேச விரும்புகிறாள்,

காலில் செருப்பு அணியாமல் வெயிலில் கைவண்டி இழுக்கும் கூலியாளுக்கு தன் சித்தப்பாவின் செருப்பைக் கொடுத்து உதவி செய்கிறாள். மழையில் நடுங்கும் ஆட்டுக்குட்டிக்கு பால் புட்டியில் பால் ஊட்டுகிறாள். அவள் கண்களில் அருள்வெள்ளம், முகத்தில் அன்பு, மனதில் கருணை மழலை, உருவத்தில் தாய்மனம் பெற்று விளங்குகிறாள்.

**கற்பவை கற்றபின்**

**குழந்தைகளின் நற்பண்புகளாகப் பால்மனம் கதையின் வழி நீங்கள் அறிந்தவற்றை எழுதுக.**

❖ அனைத்து உயிர்களிடமும் அன்பு காட்டும் பண்பு ❖ ஏழை, பணக்காரன் என்னும் வேறுபாடின்றி அனைவரிடமும் அன்பு ❖ பிறர் படும் துன்பங்களைக் கண்டு உருகும் பண்பு ❖ சிறந்த வினாக்களை எழுப்பி சிந்திக்க வைக்கும் பண்பு.

**அணி இலக்கணம்** ( கற்கண்டு )

**மதிப்பீடு :**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 1. உவமை 2. வேற்றுமை 3. இரட்டுறமொழிதல் 4. சிலேடை

**சிறுவினா.**

**1. பிறிது மொழிதல் அணியை விளக்கி எடுத்துக்காட்டுத் தருக.**

அணி விளக்கம் : உவமையை மட்டும் கூறி, அதன் மூலம் கூற வந்த கருத்தை உணர வைப்பது பிறிது மொழிதல் அணி எனப்படும்.

எ.கா. கடலோடா கால்வல் நெடுந்தேர் கடலோடும்
நாவாயும் ஓடா நிலத்து.

அணி பொருத்தம் :

இத்திருக்குறளில் நிலத்தில் ஓடும் தேர் நீரில் ஓடாது. நீரில் ஓடும் கப்பல் நிலத்தில் ஓடாது என்று உவமையை மட்டும் கூறி தமக்கு பொருத்தமில்லாத இடத்தில் வெற்றி பெற இயலாது என்னும் கருத்தை உணர்த்துவதால் இது பிறிதுமொழிதல்அணி எனப்படும்.

**2. வேற்றுமை அணி என்றால் என்ன?**

வேற்றுமை அணி என்பது இரு பொருள்களுக்கு இடையேயுள்ள ஒற்றுமையைக் கூறி பின் அவற்றை வேறுபடுத்தி காட்டுவதாகும்.

**3. இரட்டுறமொழிதல் அணி எவ்வாறு பொருள் தரும்?**

இரண்டு + உற + மொழிதல் = இரண்டு பொருள் படுமாறு கூறுதல்

ஒரு சொல்லோ, சொற்றொடரோ இரு பொருள் பட வருவது இரட்டுறமொழிதல்அணி எனப்படும். இதனைச் சிலேடைஅணி என்றும் அழைப்பர்.

**கற்பவை கற்றபின்**

**திருக்குறளில் அணிகள் இடம் பெற்றுள்ள குறட்பாக்களுள் ஐந்தனைக் கண்டறிந்து அவற்றில் இடம் பெற்றுள்ள அணிகளின் பெயர்களை எழுதுக.**

1. பண்என்னாம் பாடற்கியைபின்றேல் கண் என்னாம்
கண்ணோட்டம் இல்லாத கண்.
<u>அணி:</u> எடுத்துக்காட்டு உவமையணி

2. தேவர் அனையர் கயவர் அவரும்தாம்
மேவன செய்தொழுக லான்
<u>அணி:</u> வஞ்சப்புகழ்ச்சி அணி

3. பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்கலம்
தீமையால் திரிந்து அற்று
<u>அணி:</u> உவமையணி

4. கானமுயல் எய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது.
<u>அணி:</u> பிறிது மொழிதல் அணி

5. இன்மையின் இன்னாத தியாதெனின் இனிமையின்
இன்மையே இன்னா தது.
<u>அணி:</u> சொற்பொருள் பின்வருநிலையணி

## மொழியை ஆள்வோம்

**தொடரில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக.**

முதியவர் ஒருவர் தம் கால்களில் செருப்பில்லாமல் தம்மால் இழுக்க முடியாத வண்டியை இழுத்துச் சென்றார். அதனைக் கண்ட கிருஷ்ணா தன் சித்தப்பாவிடம் அவருடைய காலணிகளைக் கொடுக்குமாறு கூறினாள். அவரிடம் விலையுயர்ந்த காலணிகள் தாம் இருந்தன. எனவே, தம் வேறு காலணிகளைப் பிறகு தருவதாகச் சித்தப்பா கூறினார்.

**கட்டுரை எழுதுக. உழைப்பே உயர்வு**

**முன்னுரை :**

வாழ்வில் நாம் முன்னேற ஒரே வழி, சிறந்த வழி உழைப்பு மட்டும் தான். அத்தகைய உழைப்பைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**உழைப்பின் அவசியம் :**

வாழ்வில் முன்னேற உழைப்பு ஒன்றே வழி ஆகும். நாம் அனைவரும் குறிக்கோள் ஒன்றை வரையறுத்துக் கொண்டு அதற்காக உழைக்கத் தயாராகிவிட வேண்டும். நமக்கான வெற்றியை அது கொண்டு வந்து சேர்க்கும். எந்த நேர்மையான உழைப்பும் சிறந்ததே ஆகும்.

**உழைப்பின் பெருமை :**

பத்தடுக்கு மாளிகையாக இருந்தாலும் அது ஒவ்வொரு அடுக்காகவே எழுப்பப்படும். எனவே நீங்கள் எடுத்துக்கொண்ட குறிக்கோளும் அப்படியே உழைப்பால் மெல்ல மெல்ல அதனை அடைய முடியும். வேறு தவறான வழிகள் நம்மை ஆடம்பரத்தைக் காட்டி ஆழ்குழியில் தள்ளிவிடும்.

**மாணவர்களின் உழைப்பு :**

ஒரு தேர்வில் மட்டும் முதல்மாணவனாக இருப்பதோடு நின்றுவிடாமல் தொடர்ந்து முயற்சி செய்து பயிற்சி செய்து வெற்றியை தக்கவைத்துக் கொள்ள வேண்டும். மனதில் ஓர் உயர்ந்த குறிக்கோளை நிறுத்தி அதற்காக கடினமாக உழைக்க வேண்டும். வெற்றி பெறும் வரை போராட வேண்டும்.

**முடிவுரை :**

நாம் செய்யும் தொழிலை தெய்வமாக மதித்து அதற்காக உழைத்தால் வெற்றி நிச்சயம் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். உழைப்போம்! உயர்வோம்.

## மொழியோடு விளையாடு

**இரு வினாக்களுக்கு விடை தருக.**

1. நூலால் 2. போரில் 3. மாலை 4. திங்கள்